ப.து.ந.க.எண்.1062 / 2019

தீர்மான எண்.353 / 2019 **நாள்:02-07-2019**

பணித்துறை - தரப்படுத்தப்பட்ட விலை விவர அட்டவணை - ஊதியம் மற்றும் பொருட்களின் விலை (அடிப்படை இனங்கள் மட்டும்) 2019 - 2020 ஆம் ஆண்டிற்குரியது - பொதுப்பணித் துறை, தலைமைப் பொறியாளர் அவர்களிடமிருந்து பெறப்பட்டது - பெருநகர சென்னை மாநகராட்சியின் அனைத்து துறைகளும் அமுல்படுத்த அனுமதி.

பொதுப்பணித்துறை, தலைமைப் பொறியாளர் (பொது), சேப்பாக்கம், சென்னை - 600005, அவர்களால் ஒப்புதல் அளிக்கப்பட்ட விலை விவர அட்டவணை (ஊதியம் மற்றும் பொருட்கள் அடிப்படை இனங்கள் மட்டும்) GST மற்றும் பிற வரிகள் நீங்கலாக) பெருநகர சென்னை மாநகராட்சியில் பெறப்பட்டது.

கடந்த காலங்களில், ஒவ்வொரு ஆண்டும் பொதுப்பணித் துறையிலிருந்து பெறப்படும் தரப்படுத்தப்பட்ட விலை விவர அட்டவணை மன்றத்தின் முன் வைக்கப்பட்டு ஒப்புதல் பெற்ற பிறகு பெருநகர சென்னை மாநகராட்சியின் அனைத்துத் துறைகளிலும் நடைமுறைக்கு ஏற்றுக் கொள்ளப்படும். அது போலவே, இந்த ஆண்டும் பொதுப்பணித் துறையிலிருந்து பெறப்பட்ட தரப்படுத்தப்பட்ட விலை விவர அட்டவணை (ஊதியம் மற்றும் பொருட்கள் அடிப்படை இனங்கள் மட்டும் GST மற்றும் பிற வரிகள் நீங்கலாக) பெருநகர சென்னை மாநகராட்சியின் அனைத்துத் துறைகளும் நடைமுறைபடுத்தவும் மற்றும் கீழே குறிப்பிட்டுள்ள ஒவ்வொரு குறிப்பிட்ட முடிக்கப்பட்ட வேலைகளுக்கு விலைப்பட்டி (DATA) ஆதாரமாக கொண்டு தயாரிக்கப்படும் விலை விவரப்பட்டியல் (SCHEDULE OF RATES FOR FINISHED ITEMS), பணித்துறை, கட்டிடத் துறை, மழைநீர் வடிகால் துறை, பாலங்கள் துறை, பேருந்து சாலைகள் துறை, திடக்கழிவு மேலாண்மை துறை, மண்டல அலுவலகங்கள் மற்றும் அனைத்து பொறியியல் துறைகளும் நடைமுறைக்கு ஏற்றுக்கொள்வதற்காகவும், கீழே கொடுக்கப்பட்டுள்ள பணிகளுக்கு பெருநகர சென்னை மாநகராட்சி சிறப்பு அதிகாரி-மன்றத்தின் ஒப்புதல் வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

1. சாலை வேலைகள், நடைபாதை வேலைகள் மற்றும் சாலை வெட்டுக்கான வேலைகள்.
2. தனியார் தெருக்களில் தெருவைச் சார்ந்த மனை உரிமையாளர்களிடமிருந்து மேம்படுத்தும் வேலைக்காக (TENTATIVE IMPROVEMENT CHARGES), உத்தேசமாக பெற வேண்டிய தொகை.
3. சாலை வேலைகளில் அமுல்படுத்தப்படும் சிறப்புப் பணிகள்.
4. கட்டிடத் துறையின் அனைத்து வேலைகள்.
5. மழைநீர் வடிகால் துறையின் சம்பந்தப்பட்ட சிறப்பு பணிகள்.
6. பாலங்கள் துறையில் கையாளப்படும் சிறப்பு விலைப்புள்ளிபட்டி விவரங்களின் வேலைகள் ஆகியவை.

மேலே குறிப்பிட்டுள்ள 1 முதல் 3 வரையிலான பணிகளுக்கு பணித்த தற்போது நடைமுறையிலுள்ள விலை விவரப்பட்டியினை (DATA) ஆதாரமாகக் கொண்டு விலை விவரப்பட்டியல் (SCHEDULE OF RATES) தயாரித்து சம்பந்தப்பட்ட அதகாரியின் ஒப்புதல் பெறப்பட்டு பெருநகர சென்னை மாநகராட்சியின் அனைத்து தொழிற்துறைகளுக்கும் அனுப்பப்படும்.

அது போலவே கட்டிடங்கள் துறையிலும், அதைச் சார்ந்த பணிகளுக்கு விலை விவரப்பட்டியல் தயாரித்து சம்பந்தப்பட்ட அதிகாரியின் ஒப்புதல் பெற்று அனைத்துத் தொழிற்துறைகளுக்கும் அனுப்படும். மேலும் மழைநீர் வடிகால் துறை மற்றும் பாலங்கள் துறைகளுக்குத் தேவையான விலை விவரப்பட்டியல் தயரித்து சம்பந்தப்பட்ட மேற்பார்வை பொறியாளரின் ஒப்புதல் பெறப்படும்.

பொதுப்பணித் துறை விலை விவர பட்டியலில் சிமெண்ட் மற்றும் இரும்புக் கம்பிகளுக்கான (STEEL) விலைகள் கொடுக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டு (2019-2020) சிமெண்ட் விலை ஒரு மெட்ரிக் டன்னுக்கு ` 5,750/- (GST மற்றும் பிற வரிகள் நீங்கலாக) இறக்குதல் ஏற்றுதல் வேலை நடைபெறும் இடத்திற்கு வந்த சேர ஏற்படும் போக்குவரத்து செலவுகள் நீங்கலாக) மற்றும் இரும்பு கம்பிக்கான (STEEL) விலை ஒரு மெட்ரிக் டன்னுக்கு

ப.து.ந.க.எண்.1062 / 2019

` 45,000/- (GST மற்றும் பிற வரிகள் நீங்கலாக) இறக்குதல், ஏற்றுதல், வேலை நடைபெறும் இடத்திற்கு வந்து சேர ஏற்படும் போக்குவரத்து செலவுகள் நீங்கலாக) என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

எனவே,

1. விலை விவர அட்டவணை (அடிப்படை விலை - GST மற்றும் பிற வரிகள் நீங்கலாக) பொதுப்பணித்துறையை போலவே 17.06.2019 முதல் பெருநகர சென்னை மாநகராட்சியில் அனைத்துத் துறை களும் அமுல்படுத்துவதற்கும்,
2. சேர்க்கைகள் அல்லது திருத்தங்கள் பொதுப்பணித்துறையிலிருந்து/ நெடுஞ்சாலைத் துறையிலிருந்து /சென்னை பெருநகர குடிநீர் மற்றும் கழிவுநீர் அகற்றுதல் வாரியத்திலிருந்து பெறப்படுமாயின் அதற்கேற்றவாறு பெருநகர சென்னை மாநகராட்சியிலும் கையாள,
3. பெருநகர சென்னை மாநகராட்சியின் தற்காலிகத் தொழிலாளர்களுக்கு 17.06.2019 முதல் விலை விவர அட்டவணைப் புத்தகத்தின்படி ஊதியம் வழங்கவும்,
4. பொதுப் பணித்துறையிலிருந்து பெறப்பட்ட அட்டவணையில் இல்லாத இனங்களுக்கு விலைப்புள்ளி (QUOTATION) பெற்று குறைந்த விலையினை அந்தந்த துறை சம்பந்தப்பட்ட மேற்பார்வைப் பொறியாளர்கள் முடிவு செய்யவும்,
5. தற்போது நடைமுறையிலுள்ள அனைத்து அடிபப்படை விவரங்களின் அடிப்படையில் அந்தந்த துறை மேற்பார்வைப் பொறியாளர்கள் விலைப்பட்டி விவரம் தயாரிக்கவும் மற்றும் தொழிற்நுட்ப மாறுதல் இருப்பின் அதற்கேற்றவாறு விலைப்பட்டி விவரம் மாற்றி தயாரிக்கவும்,
6. பொதுப்பணித் துறையிலிருந்து பெறப்பட்ட சிமெண்ட் விலை ஒரு மெட்ரிக் டன்னுக்கு ரூ.5,750/- [GST மற்றும் பிற வரிகள் நீங்கலாக] இறக்குதல், ஏற்றுதல் வேலை நடைபெறும் இடத்திற்கு வந்த சேர ஏற்படும் போக்குவரத்து செலவுகள் நீங்கலாக) எனவும் இரும்புக் கம்பிக்கான (STEEL) விலை ஒரு மெட்ரிக் டன்னுக்கு ரூ.45,000/- [GST மற்றும் பிற வரிகள் நீங்கலாக] இறக்குதல், ஏற்றுதல், வேலை நடைபெறும் இடத்திற்கு வந்து சேர ஏற்படும் போக்குவரத்து செலவுகள் நீங்கலாக) எனவும், பெருநகர சென்னை மாநகராட்சியின் அனைத்துத் துறைகளும் விலைப்பட்டியில் பொதுப்பணித் துறை போலவே அமுல்படுத்தவும், மேலும் பொதுப்பணித் துறையிலிருந்து சிமெண்ட் மற்றும் இரும்புக் கம்பிகளுக்கான (STEEL) விலைகளை மாற்றம் செய்யும் பொழுதெல்லாம், அனைத்து துறைகளிலும், பொதுப்பணித்துறையின் விலைகளைப் போலவே நடைமுறை படுத்துவதற்கும்,
7. To incorporate the system for the preparation of estimate in bridges by taking account of the site and other sundry provisions as followed by Highways department.

மேற்கண்ட 1 முதல் 7 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி- நிலைக்குழு(பணிகள்), நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 01.07.2019 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

" விலை விவர அட்டவணை 1 முதல் 7 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி- நிலைக்குழு(பணிகள்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".

******

ம.அ.8.ந.க.எண்.சி3/2975/2019

தீர்மான எண்.354/2019 **நாள்: 03-07-2019**

மண்டலம்-8 - கோட்டம்-94 முதல் 108 வரை துப்புரவு பணிக்காக தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கம் (NULM) மூலம் பணிபுரியும் 493 தற்காலிக பணியாளர்களுக்கு 18.06.2019 முதல் 30.09.2019 வரை பணி தொடர்ச்சி அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம்-8, 27.02 சதுர கி.மீ பரப்புள்ள 15 வார்டுகளை (வார்டு 94 முதல் 108 வரை) உள்ளடக்கிய பகுதியாகும். இந்த மண்டலத்தில் 54 எண்ணிக்கையிலான பேருந்து சாலைகளும் மற்றும் 2378 எண்ணிக்கையில் உட்புற சாலைகளும் பெருநகர சென்னை மாநகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகிறது. இம்மண்டலத்தின் 2011ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை 6,43,895 ஆகும். மேலும், முக்கிய பிரமுகர்கள் அடங்கிய பகுதியாக உள்ளது. இம்மண்டலத்தில் நாளுக்கு நாள் மக்கள் தொகை வளர்ச்சி அடைந்து வருகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-8க்குட்பட்ட பகுதி-21, 22 மற்றும் 23ல் உள்ள 15 வார்டுகளில் (வார்டு 94 முதல் 108 வரை) தினமும் துப்புரவு பணி மேற்கொள்ளப்பட்டு 465 மெட்ரிக் டன் குப்பைகள் சேகரிக்கப்படுகிறது. இப்பணியினை திறம்பட செய்ய வேண்டி ஒரே நாளில் அனைத்து வார்டுகளிலும் நிரந்தர பணியாளர்களுடன் தினக்கூலி பணியாளர் மூலம் துப்புரவு பணியினை மேற்கொள்ள தற்காலிக துப்புரவு பணியாளர்கள் 493 நபர்களை தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கம் மூலமாக பணிபுரிய பெருநகர சென்னை மாநகராட்சி, சிறப்பு அதிகாரி மன்றம் அவர்களின் 13.03.2019 நாளிட்ட அனுமதியின்படி 21.03.2019 முதல் 17.06.2019 வரை பணி தொடர்ச்சி அனுமதி வழங்கப்பட்டதன் அடிப்படையில் தற்போது மண்டலம்-8க்குட்பட்ட பகுதி-21, 22 மற்றும் 23க்கு (வார்டுகள் 94 முதல் 108 வரை) 493 தேசிய நகர்புற வாழ்வாதார இயக்க பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

தற்போது தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கம் (NULM) மூலமாக நடைபெற்று வரும் துப்புரவு பணிக்கான மன்ற அனுமதி 17.06.2019 அன்றுடன் நிறைவடைவதால், துப்புரவு பணியின் அவசியம் கருதி இன்றைய நிலைகளுக்கு ஏற்பவும், பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-8ல் பணிபுரியும் நிரந்தர துப்புரவு பணியாளர்களில் 30.04.2019 வரையிலான காலத்தில் வயது முதிர்வு அடிப்படையில் பணி ஓய்வு, பணியிடையில் காலமான பணியாளர்கள், பதவி உயர்வு போன்ற காரணத்தினால் ஏற்பட்ட காலிப்பணியிடத்தை கணக்கில் கொண்டும் தேவைகளை கண்டறிய நடைபெற்ற கூட்டத்தின்படி, பணியாளர்களின் எண்ணிக்கை போதுமானதாக இல்லாத காரணத்தினால் கீழ்கண்ட விவரங்கள் சமர்ப்பிக்கப்படுகிறது.

வ. எண்	வார்டு எண்	ஒப்பளிக்கப்பட்ட பணியாளர்களின் எண்ணிக்கை	தற்பொழுது பணிபுரியும் நிரந்தர பணியாளர்கள் எண்ணிக்கை	பணி ஓய்வு, பதவி உயர்வு மற்றும் இறப்பு காரணமாக ஏற்பட்ட காலிப்பணியிடம்	NULM மூலம் பணிபுரியும் துப்புரவு பணியாளர்கள் எண்ணிக்கை
1	94	184	107	77	31
2	95	190	138	52	27
3	96	115	97	18	29
4	97	88	65	23	16
5	98	85	62	23	17
6	99	150	97	53	30
7	100	199	106	93	45
8	101	169	105	64	29
9	102	169	26	143	119
10	103	192	155	37	27
11	104	173	157	16	25

12	105	182	110	72	28
13	106	106	104	2	21
14	107	135	83	52	27
15	108	141	92	49	22
	மொத்தம்	**2278**	**1504**	**774**	**493**

1. மறு ஆய்வின்படி மண்டலம்-8க்குட்பட்ட பகுதி-21, 22 மற்றும் 23க்கு ஒப்பளிக்கப்பட்ட மொத்த பணியாளர்களின் எண்ணிக்கை - 2278
2. மண்டலம்-8 பகுதி-21, 22 மற்றும் 23ல் பணிபுரியும் நிரந்தர பணியாளர்களின் எண்ணிக்கை - 1504

   பணியாளர்கள் குறைவு (காலிப்பணியிடம் மற்றும் பணி ஓய்வு) - 774
3. தற்போது தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கம் (NULM) மூலம் பணிபுரியும் பணியாளர்களின் எண்ணிக்கை - 493

தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கம் (NULM) மூலமாக பணியாட்களை நியமிக்கும்போது அவர்களுக்கான நலப்பொருட்களை பெருநகர சென்னை மாநகராட்சி மூலமே வழங்க வேண்டி உள்ளது.

அதன்படி ஒரு நபருக்கு 3 மாத காலத்திற்கு தேவைப்படும் நலப் பொருட்களின் விவரம் பின்வருமாறு :-

அ) ஒளிரும் ஆடை - 2 எண்ணிக்கை (60 நாட்களுக்கு ஒன்று)
ஆ) கையுறை - 10 எண்ணிக்கை (10 நாட்களுக்கு ஒன்று)
இ) முக கவசம் - 100 எண்ணிக்கை (ஒரு நாளைக்கு ஒன்று)

மேற்கண்ட நலப் பொருட்களின் அடிப்படையில் 493 துப்புரவு பணியாளர்களுக்கு 3 மாத காலத்திற்கு ஆகும் செலவு விவரம் :-

தேவைப்படும் பொருட்களின் விவரம்	எண்ணிக்கை	நபர்கள்	தொகை ரூ.	மொத்த தொகை ரூ.
ஒளி'ரும் ஆடை	2	493	110	ரூ.1,08,460/-
கையுறை	10	493	15	ரூ.73,950/-
முக கவசம்	100	493	3	ரூ.1,47,900/-
				ரூ.3,30,310/-

3 மாதங்களுக்கு நலப் பொருட்களுக்கு ஆகும் செலவு தொகை ரூ.3,30,310/- ஆகும்.

எனவே,

1. மண்டலம்-8க்குட்பட்ட பகுதி-21, 22 மற்றும் 23ல் தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கம் (NULM) மூலம் நியமிக்கப்பட்டு பணிபுரியும் 493 துப்புரவு பணியாளர்களுக்கு 18.06.2019 முதல் 30.09.2019 வரை 105 நாட்களுக்கு தொடர்ச்சியாக பணியமர்த்த அனுமதி வேண்டியும்,
2. மேற்பார்வை பொறியாளர் / தி.க.மே துறை அவர்களின் சுற்றறிக்கை நாள்.06.06.2018ன்படி மேற்கண்ட 493 தொழிலாளர்களுக்கான குறைந்தபட்ச அடிப்படை ஊதியமாக ஒரு நபருக்கு நாள் ஒன்றுக்கு ரூ.362/- வீதம் என்ற அடிப்படையில் 105 நாட்களுக்கு தேவையான தோராய செலவீனம் 493 x 362 x 105 = ரூ.1,87,38,930/-க்கு நிர்வாக அனுமதி வேண்டியும்,
3. துப்புரவு பணிக்காக பணியமர்த்தப்படும் பணியாளர்களுக்கு 3 மாத காலத்திற்கு வழங்கப்பட வேண்டிய நலப்பொருட்கள்.

   ஒளிரும் ஆடை - 2 எண்ணிக்கை (60 நாட்களுக்கு ஒன்று)
   கையுறை - 10 எண்ணிக்கை (10 நாட்களுக்கு ஒன்று)
   முக கவசம் - 100 எண்ணிக்கை (ஒரு நாளைக்கு ஒன்று)

   இவற்றை பெருநகர சென்னை மாநகராட்சியே கொள்முதல் செய்து வழங்க ஒப்புதல் அளிக்கவும்,

4. மேற்படி நலப்பொருட்களுக்கு ஆகும் செலவு தொகை தோராயமாக ரூ.3,30,310/- (ரூபாய் மூன்று இலட்சத்து முப்பதாயிரத்து முந்நூற்று பத்து மட்டும்)க்கு நிர்வாக அனுமதி வழங்கவும்,

5. இப்பணிக்கான தொகைக்கு கணக்கு குறியீட்டு எண். 40 - 41 - 03, கணக்கு தலைப்பு எண். 230-150-100ல் மேற்கொள்ளவும்,

மேற்கண்ட 1 முதல் 5 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி-நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 02.07.2019 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

"1 முதல் 5 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி- நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".

******

ப.து.ந.க.எண்.*D1/SD/WDCN15/00307/2019*

தீர்மான எண்.355/2019 **நாள்:03-07-2019**

தானப்பத்திரம்

M/s. Emerald Haven Town & Country Pvt. Ltd., a company rep by Thiru. V. Ganesh என்கிற முறையிலும் புல எண்கள். S.No.62/10C, 65/2, 3A, 3B & 3C, 66/1B, 67/1 & 2, 68/1 & 2, 69/2A, 3A1, 3A2B, 3B1, 3B2B, 4A, 4B & 5, 70/1C1, 2B1, 3A, 3B, 3C, 4A, 4B, 4C, 4D, 5A, 5B1, 5B2, 5C, 6A, 6B, & 10A2, 71/1A, 1B, 1C, 2, 3A & 3B, 72/1, 2, 3A, 3B, 3C, 4, 5, & 6, 73/3A, 3B, 3C, 4, 5A, 5B & 6, 76/1B, 2A, 2B, 77/1, 2, 3, & 4, 78/1A, 1B, 1C, 2A, 2B, 79/1A, 1B, 79/2, 80/1, 2 & 3A, 82/1, 82/2, 82/3A2, 3B, 83/1A1, 1A2, 1A3, 1B1, 1B2, 1C1, 1C2, 1D, 2A1, 2A2, 2B1, 2B2, 2B3, 2C, 2D1, 2D2B, 3B2, 84/6A3B, 6B, & 6C2 காரபாக்கம் கிராமம் என்ற இடத்தில் அமைந்துள்ள நிலத்திற்கு மனைப்பிரிவு அனுமதி வேண்டி D1/SD/WDCN015/ 00307/2019 நாள்.06.06.2019ன்படி விண்ணப்பம் அளித்துள்ளார்.

மனைப்பிரிவில் காட்டப்பட்டுள்ள பூங்கா மற்றும் சாலைக்கான நிலங்களை சம்மந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளிடம் தானப்பத்திரம் மூலம் வழங்க வேண்டும் என்று அரசாணை எண். G.O.No.654, வீட்டு வசதி மற்றும் ஊரக வளர்ச்சி துறை நாள். *21.08.1984* ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன் படி, இம்மனைப்பிரிவில் பூங்கா மற்றும் சாலைக்காக ஒதுக்கப்பட்டுள்ள நிலங்களை தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி வசம் ஒப்படைக்கப்படவேண்டும்.

விண்ணப்பதாரர் M/s. Emerald Haven Town & Country Pvt. Ltd., a company rep by Thiru. V. Ganesh விண்ணப்பித்துள்ள உத்தேச மனைப்பிரிவில், பூங்கா மற்றும் சாலைக்காக ஒதுக்கப்பட்ட நிலங்களை பெருநகர சென்னை மாநகராட்சிக்கு ஒப்படைக்க தானப்பத்திரம் மூலம் இசைவு தெரிவித்துள்ளார்.

M/s. Emerald Haven Town & Country Pvt. Ltd., a company rep by Thiru. V. Ganesh மனைப்பிரிவு வேண்டி சமர்ப்பித்த திட்ட வரைபடத்தின்படி, மேற்படி நிலத்தின் மொத்த பரப்பளவு 29397.00 சதுர மீட்டர் பரப்பளவு ஆகும். அவற்றில் பூங்காவிற்காக 2068.00 சதுர மீட்டர் பரப்பளவு மற்றும் சாலைக்கென 8798.00 சதுர மீட்டர் பரப்பளவு நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

புல எண்கள் S.No.62/10C, 65/2, 3A, 3B & 3C, 66/1B, 67/1 & 2, 68/1 & 2, 69/2A, 3A1, 3A2B, 3B1, 3B2B, 4A, 4B & 5, 70/1C1, 2B1, 3A, 3B, 3C, 4A, 4B, 4C, 4D, 5A, 5B1, 5B2, 5C, 6A, 6B, & 10A2, 71/1A, 1B, 1C, 2, 3A & 3B, 72/1, 2, 3A, 3B, 3C, 4, 5, & 6, 73/3A, 3B, 3C, 4, 5A, 5B & 6, 76/1B, 2A, 2B, 77/1, 2, 3, & 4, 78/1A, 1B, 1C, 2A, 2B, 79/1A, 1B, 79/2, 80/1, 2 & 3A, 82/1, 82/2, 82/3A2, 3B, 83/1A1, 1A2, 1A3, 1B1, 1B2, 1C1, 1C2, 1D, 2A1, 2A2, 2B1, 2B2, 2B3, 2C, 2D1, 2D2B, 3B2, 84/6A3B, 6B, & 6C2 காரபாக்கம் கிராமம், சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் இரண்டாம் முழுமைத் திட்டத்தின்படி தொழிற்சாலை பகுதி என வரையறுக்கபட்டுள்ளது. இவ்வகைப்பாட்டில் குடியிருப்பு மனைப்பிரிவு ஒப்புதல் வழங்குவதற்கு சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்திடமிருந்து சிறப்பு அனுமதி பெறப்பட வேண்டும். ஆதலால் இவ்விண்ணப்பம் சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்திற்கு அனுப்பப்பட்டு உறுப்பினர்-செயலர், சென்னை பெருநகர வளர்ச்சிக்குழுமம் அவர்களின் *21.05.2019* நாளிட்ட கடிதத்தின் படி சிறப்பு அனுமதி வழங்கப்பட்டு மேல்நடவடிக்கைக்காக பெருநகர சென்னை மாநகராட்சிக்கு திருப்பி அனுப்பப்பட்டுள்ளது.

இவ்விண்ணப்பத்தோடு சமர்ப்பிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடம் இரண்டாம் முழுமைத்திட்டத்தில் உள்ள வளர்ச்சி விதிமுறைகளுக்கு ஏற்ப அமைந்துள்ளது. மேலும், விண்ணப்பதாரர் இம்மனைப்பிரிவினை அபிவிருத்தி செய்வதற்க்கான உரிமை உள்ளவராக அறியப்படுகிறார்.

எனவே M/s. Emerald Haven Town & Country Pvt. Ltd., a company rep by Thiru. V. Ganesh அவர்களிடமிருந்து தானப்பத்திரம் மூலம் பூங்கா மற்றும் சாலை அமைப்பதற்குரிய நிலங்களை பெருநகர சென்னை மாநகராட்சி வசம் எடுத்துக் கொள்ளலாம் என கருதப்படுகிறது.

மனைப்பிரிவில் ஒதுக்கப்பட்டுள்ள சாலை பகுதிகளில் சாலை மற்றும் தெரு விளக்குகளை அமைக்க ஆகும் செலவினம் விண்ணப்பதாரரிடம் இருந்து வசூலிக்கப்படவேண்டும்.

தானமாக வழங்கப்பட்ட பகுதியில் சாலை மற்றும் தெரு விளக்குகள் அபிவிருத்தி பணிகளை மேற்கொள்ள செலவாகும் தொகை ரூ.1,31,20,000/-(ரூபாய் ஒரு கோடியே முப்பத்தியொரு லட்சத்து இருபதாயிரம் மட்டும்) விண்ணப்பதாரர் M/s. Emerald Haven Town & Country Pvt. Ltd., a company rep by Thiru. V. Ganesh அவர்களிடம் வசூலிக்கப் படவேண்டும்.

எனவே,

(1) புலஎண்கள். S.No.62/10C, 65/2, 3A, 3B & 3C, 66/1B, 67/1 & 2, 68/1 & 2, 69/2A, 3A1, 3A2B, 3B1, 3B2B, 4A, 4B & 5, 70/1C1, 2B1, 3A, 3B, 3C, 4A, 4B, 4C, 4D, 5A, 5B1, 5B2, 5C, 6A, 6B, & 10A2, 71/1A, 1B, 1C, 2, 3A & 3B, 72/1, 2, 3A, 3B, 3C, 4, 5, & 6, 73/3A, 3B, 3C, 4, 5A, 5B & 6, 76/1B, 2A, 2B, 77/1, 2, 3, & 4, 78/1A, 1B, 1C, 2A, 2B, 79/1A, 1B, 79/2, 80/1, 2 & 3A, 82/1, 82/2, 82/3A2, 3B, 83/1A1, 1A2, 1A3, 1B1, 1B2, 1C1, 1C2, 1D, 2A1, 2A2, 2B1, 2B2, 2B3, 2C, 2D1, 2D2B, 3B2, 84/6A3B, 6B, & 6C2 காரபாக்கம் கிராமம், என்ற இடத்தில் அமைந்துள்ள நிலத்திற்கு மனைப்பிரிவு வேண்டி விண்ணப்பிக்கப்பட்டுள்ள திட்ட வரைபடத்தில் சாலைக்காக ஒதுக்கப்பட்டுள்ள 8798.00 சதுர மீட்டர் பரப்பளவு நிலம் மற்றும் பூங்காவிற்காக (OSR) ஒதுக்கப்பட்ட 2068.00 சதுர மீட்டர் பரப்பளவு நிலம் விண்ணப்பதாரர் M/s. Emerald Haven Town & Country Pvt. Ltd., a company rep by Thiru. V. Ganesh அவர்களிடமிருந்து தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி பெற்றுக் கொள்வதற்கும்,

(2) சாலைக்காக ஒதுக்கப்பட்டுள்ள நிலத்தில் சாலைகள் மற்றும் தெருவிளக்குகள் அமைக்க தேவையான தொகை ரூ.1,31,20,000/- (ரூபாய் ஒரு கோடியே முப்பத்தியொரு லட்சத்து இருபதாயிரம் மட்டும்) விண்ணப்பதாரர் M/s. Emerald Haven Town & Country Pvt. Ltd., a company rep by Thiru. V. Ganesh அவர்களிடமிருந்து ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி" என்ற பெயரில் வரைவு காசோலையாக வசூலிக்கவும்,

மேற்கண்ட 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு சிறப்பு அதிகாரி- நிலைக்குழு(நகரமைப்பு) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 03.07.2019 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

"1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு சிறப்பு அதிகாரி- நிலைக்குழு(நகரமைப்பு) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".

******

ப.து.ந.க.எண்.*D1/LA/SD/WDCN14/680/2018*

தீர்மான எண்.356 / 2019 **நாள்:03-07-2019**

தானப்பத்திரம்

திரு. R. Raja and others, சர்வே எண்.225/25, 1A1A1A, 1A1A1B, 5B, 5D, 7, 8, 10B, 11A, 11B. 12, 13, 14, 15A, 15B, 16A, 16B and 19 Rice Mill Road, ஜல்லடியான்பேட்டை என்ற கிராமத்தில் அமைந்துள்ள நிலத்திற்கு மனைப்பிரிவு அனுமதி வேண்டி LA/SD/WDCN14/00680/2018 நாள்: 27.12.2018ன்படி விண்ணப்பம் அளித்துள்ளார்கள்.

மனைப்பிரிவில் காட்டப்பட்டுள்ள சாலைக்கான நிலங்களை சம்மந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளிடம் தானப்பத்திரம் மூலம் வழங்க வேண்டும் என்று அரசாணை எண். G.O.No.654, வீட்டு வசதி மற்றும் ஊரக வளர்ச்சி துறை நாள் 21.08.1984ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, இம்மனைப்பிரிவில் சாலைக்காக ஒதுக்கப்பட்டுள்ள நிலங்களை தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி வசம் ஒப்படைக்கப்பட வேண்டும்.

மனுதாரர்கள் திரு. R. Raja and others மனைப்பிரிவில் சாலைக்கென ஒதுக்கப்பட்ட நிலங்களை தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு ஒப்படைக்க இசைவு தெரிவித்து தானப்பத்திரம் அளித்துள்ளார்கள்.

திரு. R. Raja and others மனைப்பிரிவு வேண்டி சமர்ப்பித்த திட்ட வரைபடத்தின்படி, குறைந்தபட்ச மொத்த பரப்பளவு 5361.00 சதுர மீட்டர் ஆகும். அவற்றில் சாலைக்கென 1309.17 சதுர மீட்டர் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டு மீதம் உள்ள 4051.83ச.மீ நிலம் 31 மனைப்பிரிவுகளாக பிரிக்கப்பட்டு திட்ட வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளது.

எனவே, திரு. R. Raja and others அவர்களிடமிருந்து தானப்பத்திரம் மூலம் சாலை அமைப்பதற்குரிய நிலங்களை பெருநகர சென்னை மாநகராட்சி வசம் எடுத்துக் கொள்ளலாம் என கருதப்படுகிறது.

மனைப்பிரிவில் ஒதுக்கப்பட்டுள்ள சாலை பகுதிகளில் சாலைகளை அமைக்க ஆகும் செலவினம் விண்ணப்பதாரரிடம் இருந்து வசூலிக்கப்பட வேண்டும்.

இரண்டாம் முழுமை திட்டத்தின் வளர்ச்சி விதிமுறைகளின்படி மனுதாரர் *3000* ச.மீ பரப்பளவுக்கு மேல் மற்றும் *10,000* ச.மீ பரப்பளவு நிலத்திற்கு உட்பட்டு இருந்தால் திறந்தவெளி ஒதுக்கீட்டிற்காக *10* சதவிகித நிலம் அல்லது அதற்கு ஈடான நிலத்தின் வழிகாட்டு மதிப்பின்படி உரிய விதிகளின்படி அதற்கான தொகையை செலுத்த வேண்டும். மனுதாரர்கள் இத்தொகையை செலுத்த இசைவு தெரிவித்துள்ளார்கள்..

தானமாக வழங்கப்பட்ட பகுதியில் சாலை பணிகளை மேற்கொள்ள செலவாகும் தொகை ரூ.17,30,000/- (ரூபாய் பதினேழு இலட்சத்து முப்பதாயிரம் மட்டும்) மனை உரிமையாளர் திரு. R. Raja and others அவர்களிடமிருந்து வசூலிக்கப்பட வேண்டும்,

எனவே,

(1) சர்வே எண்.225/25, 1A1A1A, 1A1A1B, 5B, 5D, 7, 8, 10B, 11A, 11B. 12, 13, 14, 15A, 15B, 16A, 16B and 19 Rice Mill Road, ஜல்லடியான்பேட்டை கிராமத்தில் அமைந்துள்ள நிலத்திற்கு மனைப்பிரிவு வேண்டி விண்ணப்பக்கப்பட்டுள்ள திட்ட வரைபடத்தில் சாலைக்காக ஒதுக்கப்பட்டுள்ள 1309.17 சதுர மீட்டர் நிலத்தை மனை உரிமையாளர்கள் திரு. R. Raja and others நபர்களிடமிருந்து தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி பெற்றுக் கொள்வதற்கும்,

(2) சாலைக்காக ஒதுக்கப்பட்டுள்ள நிலத்தில் சாலைகள் மற்றும் தெரு விளக்குகள் அமைக்க செலவின தொகை ரூ.17,30,000/- (ரூபாய் பதினேழு இலட்சத்து முப்பதாயிரம் மட்டும்) மனை உரிமையாளர்களிடமிருந்து ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி" என்ற பெயரில் வரைவு காசோலையாக வசூலிக்கவும்,

(3) 3000 ச.மீ பரப்பளவுக்கு மேல் மற்றும் 10,000 ச.மீ பரப்பளவு நிலத்திற்கு உட்பட்டு இருந்தால் திறந்தவெளி ஒதுக்கீட்டிற்காக 10 சதவிகித நிலம் அல்லது அதற்கு ஈடான நிலத்தின் வழிகாட்டு மதிப்பின்படி உரிய விதிகளின்படி அதற்கான தொகையை பெருநகர சென்னை மாநகராட்சிக்கு செலுத்துவதற்கும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி-நிலைக்குழு(நகரமைப்பு) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 03.07.2019 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

"1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி- நிலைக்குழு(நகரமைப்பு) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".

******

ம.அ.11.ந.க.எண்.சி1/5671/2019

தீர்மான எண். 357/2019 **நாள்:03-07-2019**

மண்டலம்-11 - துப்புரவு பணியாளர்கள் - கோட்டங்கள் - 143 முதல் 155 வரை துப்புரவு பணி மேற்கொள்வது - ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள நிர்வாக அனுமதிக்கான காலம் 30.06.2019 உடன் முடிவுறுதல் - 01.07.2019 முதல் 30.09.2019 வரை 92 நாட்களுக்கு நிர்வாக அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-11, வளசரவாக்கம் மண்டலம் 28.51 சதுர கிலோ மீட்டர் பரப்பளவுடன் 143 முதல் 155 வரையிலான 13 கோட்டங்களை உள்ளடக்கியதாகும். இம்மண்டலத்தின் தற்போதைய மக்கள்தொகை சுமார் 4,33,000 ஆகும். இந்த மண்டலத்தில் 415 கீ.மீ. நீளத்தில் 3111 சாலைகள்/தெருக்களும் (11 பேருந்து சாலைகள் மற்றும் 3100 உட்புற சாலைகள்) சுமார் 85,406 குடியிருப்புகளும், 2,687 வணிக நிறுவன கட்டமைப்புகள் மற்றும் 52 கல்வி நிலையங்களும், 102.95 கி.மீ. நீளத்தில் மழைநீர் வடிகால்வாய்களும், 4.00கி.மீ நீளத்தில் கூவம் ஆறும், சுமார் 91.608 கி.மீ நீளத்தில் திறந்தநிலைக் கால்வாய்களும் உள்ளன. இப்பகுதிகளில் தினமும் தூய்மை பணிகள் மேற்கொண்டு சுத்தம் சுகாதாரம் பேண வேண்டியது அவசியமாகிறது.

மாமன்ற தீர்மானம் எண்.179/2016 நாள். 26.02.2016ல், 01.04.2016 முதல் ஓராண்டிற்கு 520 சுவர்ண ஜெயந்தி வேலைவாய்ப்புத் திட்டக்குழு (SJSRY) உறுப்பினர்களை துப்புரவு பணியில் ஈடுபடுத்த நிர்வாக அனுமதி பெறப்பட்டு 31.03.2017 உடன் முடிவடைந்ததை தொடர்ந்து மண்டலம்-11ல் தேசிய நகர்புற வாழ்வாதார திட்டம் (NULM) மூலமாக ஏற்கனவே பணிபுரிந்த குழு உறுப்பினர்களைக்கொண்டு 2017-2018, 2018-2019 ஆகிய நடப்பாண்டுகளில் ஒவ்வொரு மூன்று மாத காலத்திற்கும் பணி நீட்டிப்பு செய்து ஆணை பெறப்பட்டும் சிறப்பு அதிகாரி (மன்றம்) அவர்களின் மூலமாக நிர்வாக அனுமதி பெறப்பட்டடு துப்புரவு பணிமேற்கொள்ளப்பட்டு வந்தது.

சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களின் 16.05.2018 நாளிட்ட செயல்முறை ஆணையில் நிர்ணயிக்கப்பட்ட 2018-2019 ஆம் ஆண்டிற்கான நிர்ணயிக்கப்பட்ட விலை விகிதத்தின்படி, துப்புரவு பணியாளர்களுக்கு ரூ. 362/- ஆக உயர்த்தி ஆணையிடப்பட்டதனை தொடர்ந்தும் மற்றும் ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி அவர்களின் சுற்றறிக்கை தி.க.மே.து.ந.க.எண்.அ3/1769/2018, நாள் 06.06.2018ன்படி, மண்டலம்-11ல் பணிபுரியும் தேசிய நகர்புற வாழ்வாதார திட்டத்தின் மூலம் பணியமர்த்தப்படும் துப்புரவு பணியாளர்களுக்கு (NULM) 2018-2019 ஆம் ஆண்டிற்கான நிர்ணயிக்கப்பட்ட தினக்கூலி ஊதியமான ரூ.346/-லிருந்து ரூ.362/- ஆக உயர்த்தி ஆணையிடப்பட்டுள்ளதன் அடிப்படையில், சிறப்பு அதிகாரி மன்ற தீர்மான எண். 146/2019, நாள். 28.02.2019ன்படி, தேசிய நகர்புற வாழ்வாதார திட்டத்தின் மூலமாக (NULM) ஏற்கனவே பணிபுரிந்த குழு உறுப்பினர்களைக்கொண்டு 2019-2020 ஆம் ஆண்டிற்கான 01.04.2019 முதல் 30.06.2019 வரை மூன்று மாத காலத்திற்கு முறையாக பணிநீட்டிப்பு செய்து ஆணை பெறப்பட்டும், துப்புரவு பணிமேற்கொள்ளப்பட்டு வருகிறது.

சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களால் நிர்ணயிக்கப்பட்ட 2019-2020 ஆம் ஆண்டிற்கான நிர்ணயிக்கப்பட்ட விலை விகிதத்தின்படி, துப்புரவு பணியாளர்களுக்கு ரூ. 379/- ஆக உயர்த்தி ஆணையிடப்பட்டுள்ளது.

மேற்கண்ட நிர்வாக அனுமதி பெறப்பட்ட காலம் 30.06.2019 உடன் முடிவடையவுள்ள நிலையில், 2019-2020ஆம் ஆண்டிற்கான அடுத்த மூன்று மாத காலமான 01.07.2019 முதல் 30.09.2019 வரை பணியாளர்களை பணியமர்த்த வேண்டியுள்ளது அவசியமாகிறது.

எனவே, மண்டலம்-11ல் பகுதி-32, 33 மற்றும் 34ல் உள்ள கோட்டங்களான 143 முதல் 155 வரை உள்ள பகுதிகளில் ஈடுபடுத்தப்பட உள்ள பணியாளர்கள் மற்றும் தினக்கூலி ஊதியம் வழங்க விவரங்கள் அடங்கிய பட்டியல் கீழ்கண்டவாறு குறிப்பிடப்படுகிறது.

விவரங்கள்

வ.எண்	பகுதி	வார்டு எண்	பணியாளர்கள் எண்ணிக்கை	மொத்தம்	ஒரு நபருக்கு ஒரு நாளுக்கு ரூ.379/- வீதம் 92 நாட்களுக்கு செலவாகும் தொகை
1	32	143	40		
2		144	40		
3		146	40		
4		147	45	165	**57,53,220/-**
5	33	145	40		
6		148	40		
7		149	40		
8		152	45	165	**57,53,220/-**
9	34	150	35		
10		151	38		
11		153	37		
12		154	35		
13		155	45	190	**66,24,920/-**
மொத்தம்			520	520	**1,81,31,360/-**

எனவே, இம்மண்டலத்தின் துப்புரவு பணியின் முக்கியத்துவம் கருதி,

1. விரிவாக்கப்பட்ட மண்டலங்களில் துப்புரவு பணி தனியார் மயமாக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருவதால் மண்டலம்-11, பகுதி-32, 33 மற்றும் 34ல் துப்புரவு பணிக்காக தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கம் (NULM) மூலம் பணியமர்த்தப்பட்ட 520 துப்புரவு பணியாளர்களை 01.07.2019 முதல் 30.09.2019 வரை மேலும் மூன்று மாத காலத்திற்கு (92 நாட்களுக்கு) கால நீட்டிப்பு செய்து பணியமர்த்த நிர்வாக அனுமதி வேண்டியும்,
2. மேற்கண்டவாறு பணியமர்த்தப்படுவதற்கு ஆகும் செலவினத் தொகை (520 நபர்கள் x 92 நாட்கள் x ரூ.379/- தினக்கூலி ஊதியம்) ரூ.1,81,31,360/- (ரூபாய் ஒரு கோடியே எண்பத்தொரு இலட்சத்து முப்பத்தொராயிரத்து முன்னூற்று அறுபது மட்டும்) ஒதுக்கீடு செய்ய அனுமதியும்,
3. மேற்கண்ட பணிக்கு செலவாகும் தொகைக்கு பிரிவு குறியீடு எண்.40-41-03 மற்றும் கணக்கு குறியீடு எண்.230-15-01-00 கீழ் தனியார்மயம் துப்புரவு என்ற தலைப்பில் 2019-2020 ஆம் நிதியாண்டில் போதிய நிதி ஒதுக்கீடு செய்து பட்டியை தீர்வு செய்ய ஆணை வேண்டியும்,
4. மண்டலம்-11ல் பகுதி 32, 33 மற்றும் 34ல் பகுதிகளில் துப்புரவு பணிமேற்கொள்ள 01.07.2019 முதல் 30.09.2019 வரை மூன்று மாத காலத்திற்கு (92 நாட்களுக்கு) ஏற்கனவே பணிபுரிந்த தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கம் (NULM) பணியாளர்களைக் கொண்ட 37 குழு ஊக்குவிப்பாளர்களுக்கு மண்டல அலுவலர்-11 அவர்களின் மூலமாக பணி ஆணை வழங்கவும்,

ம.அ.11.ந.க.எண்.சி1/5671/2019

மேற்கண்ட 1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி-நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 03.07.2019 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

"1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி- நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".

******

ம.அ.12.ந.க.எண்.சி1/2670/2019

தீர்மான எண். 358/2019 **நாள்:03-07-2019**

மண்டலம்-12 - திடக்கழிவு மேலாண்மை - பகுதி-35,36 மற்றும் 37 - வார்டுகள் 156 முதல் 167 வரை - துப்புரவு பணி - தற்போது தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கத்தின் (National Urban Livelyhood Mission - NULM) கீழ் பணிபுரியும் பணியாளர்களின் பணிக்காலம் 30.06.2019 உடன் முடிவடைவதால் 01.07.2019 முதல் 3 மாத காலத்திற்கு கால நீட்டிப்பு அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-12 ஆலந்தூர் பகுதியானது 41.50 சதுர கிலோ மீட்டர் பரப்பளவுடன் 156 முதல் 167 வரையிலான 12 வார்டுகளை உள்ளடக்கி 1691 சாலைகள்/தெருக்கள் (263.48 கி.மீ. நீளம்) கொண்ட பகுதியாகும். இது தவிர ஜி.எஸ்.டி. சாலை மற்றும் சென்னை விமான நிலையம் வரை உள்ள முக்கியமான பிரதான சாலை உள்ளடங்கியதாகும். இம்மண்டலத்தின் மக்கள் தொகை சுமார் 2.57 இலட்சம் ஆகும். இம்மண்டல பகுதியில் தினமும் சுமார் 1.50 இலட்சத்திற்கு மேல் மக்கள் வந்து செல்கிறார்கள். இம்மண்டலத்தில் தினசரி சேகரமாகும் குப்பையின் அளவு 175 மெட்ரிக் டன் என்று கணக்கிடப்பட்டுள்ளது.

இம்மண்டலத்தின் துப்புரவு பணிகளை முழுமையாக மேற்கொள்ள 1170 பணியாளர்கள் தேவை என்று கீழே கண்டவாறு பட்டியலிடப்பட்டுள்ளது. தற்போது மண்டலம்-12, பகுதி-35, 36 மற்றும் 37க்கு உட்பட்ட வார்டுகளான 156 முதல் 167 வரை மற்றும் ஜி.எஸ்.டி சாலையில் தேவையான பணியாளர்கள், தற்போது பணிபுரியும் பணியாளர்கள் மற்றும் குறைவான பணியாளர்களின் எண்ணிக்கை ஆகிய விவரங்கள் கீழ் கண்ட அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆலந்தூர் மண்டலத்தில் சென்னை விமான நிலையம் மற்றும் தற்போது ஜி.எஸ்.டி. சாலையில் மெட்ரோ ரயில் சேவை துவங்கியுள்ளதாலும், மேலும் மவுண்ட் பூந்தமல்லி சாலையில் சென்னை வர்த்தக மையம், D.L.F.நிறுவனம் ஆகிய அமைந்துள்ளதாலும் மக்கள் நடமாட்டம் அதிகம் உள்ள மண்டலமாக உள்ளதாலும் ஆலந்தூர் மண்டல வளர்ச்சியை கணக்கில் கொண்டு கீழ்கண்டவாறு திடக்கழிவு மேலாண்மை துறையின் வழிகாட்டுதலின்படி பணியாளர்களின் எண்ணிக்கை ஏற்கனவே நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

	வார்டு	தேவையான பணியாளர்கள்	தற்போது பணிபுரிபவர்கள்			தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கம்மூலம் பணியமர்த்தப்பட்ட பணியாளர்களின் எண்ணிக்கை
			நிரந்தரம்	தினக்கூலி	மொத்தம்	
1.	156	140	39	28	57	55
2.	157	110	23	18	41	47
3.	158	92	28	21	49	36
4.	159	40	15		15	23
5.	160	85	42		42	38
6.	161	90	47		47	34
7.	162	90	47		47	36
8.	163	73	41		41	35
9.	164	78	54		54	32
10.	165	94	65		65	36
11.	166	94	41		41	44
12.	167	135	66		66	51
13.	ஜி.எஸ்.டி ரோடு.	49	16		16	29
மொத்தம்		1170	524	67	591	496

ம.அ.12.ந.க.எண்.சி1/2670/2019

சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் 16.05.2018 நாளிட்ட செயல்முறை ஆணை C2/7393/2018 ன்படி உறுதி செய்யப்பட்ட ஒரு துப்புரவு தொழிலாளியின் தினக்கூலி ரூ.362/- என்ற அடிப்படையில் மண்டலம்-12ல் தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கத்தின் (National Urban Livelyhood Mission – NULM) குழு உறுப்பினர்களை ஈடுபடுத்தி மேற்கொள்ளப்பட்டு வரும் 496 தினக்கூலி துப்புரவு பணியாளர்களின் பணிக்காலம் 30.06.2019 அன்றுடன் முடிவடைகிறது. எனவே, தற்போது நடைமுறையில் உள்ள தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கம் (National Urban Livelyhood Mission – NULM) மூலமாகவே மேலும் 01.07.2019 முதல் 3 மாதங்களுக்கு மட்டும் தொடர்ந்து பணியாளர்களை நியமித்து துப்புரவு பணி மேற்கொள்ள கீழ்கண்டவாறு உத்தேச மதிப்பீடு கணக்கிடப்படுகிறது.

1. மொத்த பணியாளர்கள் - 496 நபர்கள்
2. தினசரி ஊதியம் / நபர் - ரூ.379/-
3. மொத்த பணி நாட்கள் - 92 நாட்கள்
4. மதிப்பீடு - 496 x 379 x 92 நாட்கள் = ரூ.1,72,94,528/- (ரூபாய் ஒரு கோடியே எழுபத்திரண்டு லட்சத்து தொண்ணூற்று நான்காயிரத்து ஐநூற்று இருபத்தெட்டு மட்டும்)..

எனவே,

(அ) மேற்கண்ட துப்புரவு பணியினை ஏற்கனவே பணிக்காலம் நீடிப்பு செய்யப்பட்டுள்ளது. தற்போது பணி மேற்கொண்டு வரும் தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கத்தின் குழுக்கள் மூலம் (National Urban Livelyhood Mission - NULM) பணியிலுள்ள 496 தினக்கூலி துப்புரவு பணியாளர்களின் பணிக்காலத்தினை 01.07.2019 முதல் 3 மாதங்களுக்கு சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களால் நிர்ணயிக்கப்பட்ட ரூ.379/- என்ற தினக்கூலி அடிப்படையில் கால நீட்டிப்பு செய்ய அனுமதி வேண்டியும்,

(ஆ) மேற்படி பணிக்குண்டான 3 மாத காலத்திற்கான மொத்த மதிப்பீட்டுத் தொகை ரூ.1,72,94,528/-ஐ தீர்வு செய்ய இப்பணிக்கான கணக்கு தலைப்புஎண்.40:41:03 கணக்கு உட்பிரிவு எண்.230-150-100ல் நிதி ஒதுக்கீடு செய்யவும், இதற்க்கான செலவினத்தை மேற்கொள்ள அனுமதி வேண்டியும்,

மேற்கண்ட (அ) மற்றும் (ஆ) ஆகிய இனங்களுக்கு சிறப்பு அதிகாரி-நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 02.07.2019 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

"(அ) மற்றும் (ஆ) ஆகிய இனங்களுக்கு சிறப்பு அதிகாரி- நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".

******

ம.அ2.ந.க.எண். C1/1981/2019

தீர்மான எண். 359/2019 **நாள்:03-07-2019**

மண்டலம் - 2 (மணலி) -பகுதி-4 மற்றும் 5க்கு உட்பட்ட பகுதிகளில் NULM அடிப்படையில் பணியமர்த்தப்பட்ட துப்புரவு பணியாளர்கள் பணிக்காலம் 30.06.2019 உடன் முடிகிறது- 01.07.2019 முதல் 31.12.2019 வரை தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கம் (NULM) மூலம் நியமிக்க நிர்வாக அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட மணலி மண்டலம் - 2ல் பகுதி 4 மற்றும் 5 வார்டு 15 முதல் 21 வரை 42.33 சதுர கி. மீ பரப்பளவுள்ள 7 வார்டுகளை உள்ளடக்கிய பகுதியாகும். இந்த மண்டலத்தில் 7 எண்ணிக்கையிலான பேருந்து சாலைகளும் மற்றும் 1038 எண்ணிக்கையில் உட்புற சாலைகளும் பெருநகர சென்னை மாநகராட்சியால் பராமரிக்கப்பட்டு துப்புரவு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நகரமயமாக்குதலுக்கு பின்னர் நாளுக்கு நாள் இம்மண்டலத்தின் மக்கள் தொகை வளர்ச்சி அடைந்து வருகிறது.

மண்டலம் -2 மணலி பகுதியில் தோராயமாக 45 மெட்ரிக் டன் குப்பைகள் தினந்தோறும் சேகரிக்கப்படுகிறது. வார்டு 15 முதல் 21 வரை 7 வார்டுகளில் துப்புரவு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பணிகளை திறம்பட செய்ய 365 பணியாளர்களை தேவை என்றாலும் ஏற்கனவே பணிபுரிந்து வந்த 21 நிரந்தர பணியாளர்களில் தற்போது பணிபுரியும் 11 பணியாளர்கள் மற்றும் 19 NMR துப்புரவு பணியாளர்களை தவிர்த்து தற்போது துப்புரவு பணிகளை மேற்கொள்ள கூடுதலாக 325 பேர் பணி அமர்த்த வேண்டியுள்ளது. எனவே, ஒப்பந்த அடிப்படையில் தற்காலிக தொழிலாளர்களை நியமித்து அனைத்து வார்டுகளிலும் மேற்கண்ட பணிகளை மேற்கொள்ளவேண்டி உள்ளது.

சிறப்பு அதிகாரி, மன்றத்தீர்மான எண்.211/2019, நாள்:23.03.2019ன்படி பெருநகர சென்னை மாநகராட்சி, வடக்கு வட்டாரம் மண்டலம் -2 (மணலி), பகுதி 4 மற்றும் 5க்கு (வார்டு 15 முதல் 21 வரை)உட்பட்ட பகுதிகளில் துப்புரவு பணியானது தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கம் (NULM) மூலம் 01.04.2019 முதல் 30.06.2019 வரை நிர்வாக அனுமதி பெற்று 325 துப்புரவு பணியாளர்களைக் கொண்டு தற்போது பணி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இப்பணி 30.06.2019 அன்றுடன் முடிவடைகிறது.

சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களின் நடவடிக்கை ந.க.எண். C2/7390/2017 நாள் 06.05.2018ன்படி துப்புரவு பணியாளர்களுக்கு நாள் ஒன்றுக்கு ஊதியம் ரூ.362/- என வரிசை எண்:64ல் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

எதிர்வரும் காலங்களில் பொது சுகாதாரம் சீர்கெடாத வகையில் மக்கள் நலன் கருதியும் நிர்வாக நலன் கருதியும் துப்புரவு பணிகளை தொடர்ந்து மேற்கொள்ள வேண்டியுள்ளதாலும், எந்த ஒரு தெருவும் விடுபடாமல் ஆய்வு மற்றும் அளவீடு செய்து அதன் பின்னர் ஒருங்கிணைந்து அதன் அடிப்படையில் ஏற்கனவே நடைமுறையில் உள்ள வழி காட்டுதல்களின் அடிப்படையில் மண்டலம்-2ல் மேற்படி பணியினை திறம்பட செயல்படுத்த தற்போது அங்கீகரிக்கப்பட்ட விலைப்படி நாள் ஒன்றுக்கு ரூ.362/- வீதம் 325 பணியாளர்களுக்கு ஆகும் செலவு ரூ.362 x 325 x 184 என 6 மாத காலத்திற்கு (01.07.2019 -31.12.2019) ரூ.2,16,47,600/- (ரூபாய் இரண்டு கோடியே பதினாறு இலட்சத்து நாற்பத்தி ஏழாயிரத்து அறுநூறு மட்டும்) தொகை தேவைப்படும் என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கம் (NULM) மூலமாக பணியாட்களை நியமிக்கும் போது அவர்களுக்கான பாதுகாப்பு நலப் பொருட்களை பெருநகர சென்னை மாநகராட்சி மூலமே

ம.அ2.ந.க.எண். C1/1981/2019

வழங்க வேண்டி உள்ளது. அதன்படி தற்போதுள்ள NULM துப்புரவு பணியாளருக்கு 30.06.2018 வரை நலப்பொருட்கள் வழங்கப்பட்டுள்ளது. மேலும் ஒரு நபருக்கு 6 மாத காலத்திற்கு தேவைப்படும் நலப்பொருட்களின் விவரம் பின்வருமாறு அளிக்கப்படுகின்றது.

அதன்படி ஒரு நபருக்கு 6 மாத காலத்திற்கு தேவைப்படும் நலப்பொருட்களின் விவரம் பின்வருமாறு அளிக்கப்படுகின்றது.

1. ஒளிரும் ஆடை - 3 எண்ணிக்கை (60 நாட்களுக்கு ஒன்று)
2. கையுறை - 18 எண்ணிக்கை (10 நாட்களுக்கு ஒன்று)
3. முக கவசம் - 184 எண்ணிக்கை (ஒரு நாளைக்கு ஒன்று)

மேற்கண்ட நலப்பொருட்களின் அடிப்படையில் 325 துப்புரவு பணியாளர்களுக்கு 6 மாத காலத்திற்கு ஆகும் செலவு விவரம்

1. ஒளிரும் ஆடை - 3 x 325 x 110 = 1,07,250/-
2. கையுறை - 18 x 325 x 15 = 87,750/-
3. முக கவசம் - 184 x 325 x 3 = 1,79,400/-

மொத்தம் 6 மாதத்திற்கு நலப்பொருட்களுக்கு ஆகும் செலவுத் தொகை ரூ.3,74,400/- ஆகும்.

எனவே, மேற்கண்ட தகவல்களின் அடிப்படையில், மண்டலம் -2 (மணலி) பகுதி 4 மற்றும் 5க்கு (வார்டு 15 முதல் 21 வரை)உட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்படும் துப்புரவு பணிக்கு 325 எண்ணிக்கை துப்புரவு பணியாளர்களை 6 மாத காலத்திற்கு (01.07.2019 -31.12.2019) தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கம் (NULM) மூலம் பணியமர்த்தப்பட வேண்டி உள்ளது.

இப்பணிக்கான கணக்கு குறியீட்டு எண் 40-41-03 கணக்கு தலைப்பு எண் 230-150-100 கீழ் நடப்பு ஆண்டில் ரூ.5,00,00,000/- நிதி ஒதுக்கப்பட்டு செலவினம் போக தற்போது ரூ.4,30,98,470/- இருப்பு உள்ளது என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

எனவே,

1. இப்பணிக்காக மண்டலம் -2 (மணலி), பகுதி 4 மற்றும் 5க்குஉட்பட்ட பகுதிகளில் துப்புரவு பணி மேற்கொள்ள தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கம் (NULM) மூலம் 325 பணியாளர்களை 6 மாத காலத்திற்கு(01.07.2019 முதல் 31.12.2019 வரை) பணியமர்த்தவும். 01.07.2019லிருந்து இப்பணிக்கு அனுமதி வேண்டியும்
2. எதிர்வரும் காலத்தில் மண்டலம்-2 துப்புரவுப்பணியானது தனியார் வசம் ஒப்படைக்கப்பட்டு அவர்கள் இப்பணியினை மேற்கொள்ளும் பட்சத்தில் தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் மூலம் மேற்கொள்ளப்படும் இப்பணியாணையினை ரத்து செய்ய அனுமதி வேண்டியும்
3. மேற்கண்ட தொழிலாளர்களுக்கான குறைந்தபட்ச அடிப்படை ஊதியமாக நாள் ஒன்றுக்கு ரூ.362/- வீதம் 325 பணியாளர்களுக்கு 6 மாத காலத்திற்கு ஆகும் செலவு தொகை ரூ.362 x 325 x 184 ரூ.2,16,47,600/- (ரூபாய் இரண்டு கோடியே பதினாறு இலட்சத்து நாற்பத்தி ஏழாயிரத்து அறுநூறு மட்டும்) தொகை தேவைப்படும்,

4. மேற்கண்ட தொழிலாளர்களுக்கான குறைந்தபட்ச அடிப்படை ஊதியமாக நாள் ஒன்றுக்கு ரூ.362/- என்பது 2018 – 2019 ஆம் ஆண்டு அரசினால் நிர்ணயம் செய்யப்பட்ட ஊதியம், எதிர்வரும் காலங்களில் 2019-2020 ஆம் ஆண்டிற்கான தினக்கூலி ஊதியம் உயர்த்தி அரசினால் நிர்ணயம் செய்யப்படின் உயர்த்தி வழங்கிய தினக்கூலி ஊதியத்தை நிர்ணயம் செய்து வழங்க சிறப்பு அனுமதி வேண்டியும்,

5. துப்புரவு பணிக்காக பணியமர்த்ப்படும் பணியாளர்களுக்கு 6 மாத காலத்திற்கு வழங்கப்பட வேண்டிய நலப்பொருட்களான

   1. ஒளிரும் ஆடை - 3 எண்ணிக்கை (60 நாட்களுக்கு ஒன்று)
   2. கையுறை - 18 எண்ணிக்கை (10 நாட்களுக்கு ஒன்று)
   3. முக கவசம் - 184 எண்ணிக்கை (ஒரு நாளைக்கு ஒன்று)

   இவற்றை பெருநகர சென்னை மாநகராட்சியே வெளிசந்தையில் கொள்முதல் செய்து வழங்க ஒப்புதல் அளிக்கவும், மேற்படி நலப்பொருட்களுக்கு ஆகும் செலவு தொகை தோராயமாக ரூ.3,74,400/- (ரூபாய் மூன்று இலட்சத்து எழுபத்தி நான்காயிரத்து நானூறு மட்டும்)க்கு நிர்வாக அனுமதி வழங்கவும்,

6. இப்பணிக்கான செலவுத் தொகையை கணக்கு குறியீட்டு எண் 40-41-03 கணக்கு தலைப்பு எண் 230-150-100 கீழ் மேற்கெள்ளவும்,

மேற்கண்ட 1 முதல் 6 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி-நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 03.07.2019 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

"1 முதல் 6 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி- நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".

******

ம.அ.15.ந.க.எண்.அ2/880/2018

தீர்மான எண். 360/2019 **நாள்:03-07-2019**

மண்டலம் 15 - துப்புரவு பணியாளர்கள் - பகுதி - 44 மற்றும் 45 - கோட்டங்கள் -192 முதல் 200 வரை - துப்புரவு பணி மேற்கொள்வது - ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள நிர்வாக அனுமதிக்கான காலம் 30.06.2019 உடன் முடிவுறுதல் - 01.07.2019 முதல் 30.09.2019 வரை மேலும் மூன்று மாத காலத்திற்கு 92 நாட்களுக்கு தொடர் பணி செய்ய கால நீடிப்பு வழங்க அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-15, சோழிங்கநல்லுhர் பகுதியானது 42.23 சதுர கி.மீ பரப்பளவுடன் 192 முதல் 200 வரையிலான 9 வார்டுகளை உள்ளடக்கி 386 கி.மீ. நீளமுள்ள 2091 சாலைகள் / தெருக்கள் கொண்ட பகுதியாகும். இம்மண்டலத்தில் மக்கள் தொகை சுமார் 3.03 இலட்சம் ஆகும். இம்மண்டலத்தில் தினசரி சேகரிக்கும் குப்பையின் அளவு 180 MT என்று கணக்கிடப்பட்டுள்ளது. இப்பகுதிகளில் தினமும் தூய்மை பணிகள் மேற்கொண்டு சுத்தம் சுகாதாரம் பேணவேண்டியது அவசியமாகிறது.

சிறப்பு அதிகாரி மன்றம் அவர்களின் தீர்மானம் எண்.147/2018, நாள். 28.02.2019ன்படி, தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் (NULM) மூலமாக ஏற்கனவே பணிபுரிந்த குழு உறுப்பினர்களைக் கொண்டு 01.04.2019 முதல் 30.06.2019 வரை மூன்று மாத காலத்திற்கு பணி நீட்டிப்பு செய்து ஆணை பெறப்பட்டு, துப்புரவு பணிகள் தொய்வின்றி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அனுமதி பெறப்பட்ட காலம் 30.06.2019 உடன் முடிவடைய உள்ள நிலையில் மேலும் மூன்று மாத காலத்திற்கு 01.07.2019 முதல் 30.09.2019 வரை 92 நாட்களுக்கு NULM இயக்கத்தின் மூலம் தொடர்ந்து துப்புரவு பணி மேற்கொள்வதற்கு அனுமதி வேண்டப்படுகிறது.

சென்னை மாவட்ட ஆட்சி தலைவர் அவர்களின் செயல்முறை ஆணையின்படி மண்டலம்-15க்கு தேவைப்படும் 880 தினக்கூலி துப்புரவு பணியாளர்களுக்கு (01.07.2019 முதல் 30.09.2019 வரை) 92 நாட்களுக்கு **(ரூ.379/- X 880 X 92 = ரூ.3,06,83,840/-** (ரூபாய் மூன்று கோடியே ஆறு இலட்சத்து எண்பத்து மூன்றாயிரத்து எண்ணூற்று நாற்பது மட்டும்) தேவைப்படுகிறது.

எனவே, மண்டலம்-15ல் பகுதி-44 மற்றும் 45க்குட்பட்ட கோட்டங்களான 192 முதல் 200 வரை உள்ள பகுதிகளில் இதுநாள் வரை பணியில் ஈடுப்படுத்தப்பட்ட தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கம் உறுப்பினர்களின் விவரங்கள் அடங்கிய பட்டியல் கீழ்கண்டவாறு குறிப்பிடப்படுகிறது.

தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கம் (NULM)
பணியாளர்களின் விவரங்கள்

வ. எண்	வார்டு எண்.	தேவையான பணியாளர்கள்	தற்போது பணிபுரிபவர்கள்			பணியாளர்களின் எண்ணிக்கை
			நிரந்தரம்	தினக்கூலி	மொத்தம்	
1	192	114	8	31	39	75
2	193	88	11	15	26	62
3	194	105	13	19	32	73
4	195	141	18	17	35	106
5	196	139	16	25	41	98
6	197	117	26	16	42	75
7	198	152	25	6	31	121
8	199	61	8	7	15	46
9	200	95	13	12	25	70
		1012	138	148	286	726
தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் மூலம் மறு குடியமர்த்தப்பட்ட பகுதிகள்		பெரும்பாக்கம்	-	-	-	46
		எழில் நகர் (ஒக்கியம் துரைப்பாக்கம்)	-	-	-	49
		பெரும்பாக்கம் விரிவு	-	-	-	59
		மொத்தம்	-	-	-	880

எனவே, இம்மண்டலத்தின் துப்புரவு பணியின் முக்கியத்துவம் கருதி,

1. விரிவாக்கப்பட்ட மண்டலங்களில் துப்புரவு பணி தனியார் மயமாக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருவதால் மண்டலம்-15, பகுதி-44 மற்றும் 45ல் துப்புரவு பணிக்காக தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கம் (NULM) மூலம் பணியமர்த்தப்பட்ட 880 துப்புரவு பணியாளர்களை 01.07.2019 முதல் 30.09.2019 வரை மேலும் மூன்று மாத காலத்திற்கு (92 நாட்களுக்கு) காலநீட்டிப்பு செய்து பணியமர்த்த நிர்வாக அனுமதி வேண்டியும்,
2. மேற்கண்டவாறு பணியமர்த்தப்படுவதற்கு ஆகும் செலவினத் தொகை (880 நபர்கள் x 92 நாட்கள் x ரூ.379/- ஒரு நாளைக்கு தினக்கூலி ஊதியம்) **ரூ.3,06,83,840/-** (ரூபாய் மூன்று கோடியே ஆறு இலட்சத்து எண்பத்து மூன்றாயிரத்து எண்ணூற்று நாற்பது மட்டும்) ஒதுக்கீடு செய்ய அனுமதியும்,
3. மேற்கண்ட பணிக்கு செலவாகும் தொகை பிரிவு குறியீடு எண்.40-41-03 மற்றும் கணக்கு குறியீடு எண். 230-15-01-00 கீழ் தனியார் மயம் துப்புரவு என்ற தலைப்பில் 2019-2020ஆம் நிதியாண்டில் போதிய நிதி ஒதுக்கீடு செய்து பட்டி தீர்வு செய்ய ஆணை வேண்டியும்,
4. மண்டலம்-15ல் பகுதி-44 மற்றும் 45ல் பகுதிகளில் துப்புரவு பணி மேற்கொள்ள 01.07.2019 முதல் 30.09.2019 வரை மூன்று மாத காலத்திற்கு (92 நாட்களுக்கு) ஏற்கனவே பணிபுரிந்த தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கம் உறுப்பினர்களை கொண்டு (NULM) 49 குழு ஊக்குவிப்பாளர்களுக்கு மண்டல அலுவலர்-15 அவர்கள் மூலமாக பணி ஆணை வழங்கவும்,

மேற்கண்ட 1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி-நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 03.07.2019 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

"1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி- நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".

******

பொ.சு.து.ந.க.எண்.பி1/3165/2019

தீர்மான எண். 361/2019 **நாள்:03-07-2019**

பொது சுகாதாரத்துறை -மண்டலம் -15-ல் வ.உ.சி தெருவில் எண்-196-ல் புதிதாக கட்டப்பட்டுவரும் நகர சமுதாய நல மைத்தில் இரத்த சுத்திகரிப்பு சிகிச்சை மேற்கொள்ள M/s. Free Mason Lodge Accountants - No. 194 அவர்களின் மூலம் வழங்கப்படவுள்ள 10 டயாலிஸிஸ் இயந்திரங்களை பெற்று அமைத்திடவும், M/s.Tanker Foundation அவர்கள் மூலம் இரத்த சுத்திகரிப்பு சிகிச்சையினை மேற்கொள்ளவும் அனுமதி.

M/s. Free Mason Lodge Accountants - No. 194 அவர்களின் *27.06.2019* நாளிட்ட கடிதத்தில், ஈஞ்சம்பாக்கத்தில் புதிதாக கட்டப்பட்டு வரும் நகர சமுதாய நல மையத்திற்கு *10* எண்ணிக்கையில் டயாலிஸிஸ் இயந்திரங்கள் வழங்கப்படவுள்ளதாகவும், M/s.Tanker Foundation அவர்கள் மூலம் இரத்தத சுத்திகரிப்பு சிகிச்சை மேற்கொள்ளவும், அனுமதி வழங்குமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

பெருநகர சென்னை மாநகராட்சி பொது சுகாதாரத் துறையின் கீழ் உள்ள வள்ளுவர் கோட்டம் பகுப்பாய்வு கூடத்தில் *M/s.Tanker Foundation* அவர்கள் மூலம் நோயளிகளுக்கு நல்ல முறையில் சிகிச்சைகள் அளிக்கப்பட்டு வருகிறது. எனவே *M/s.Tanker Foundation* அவர்கள் மூலம் மண்டலம் *-15*, ஈஞ்சம்பாக்கம் வ.உ.சி தெருவில் எண்*-196*-ல் புதிதாக கட்டப்பட்டுவரும் நகர சமுதாய நல மையத்தில் இரத்த சுத்திகரிப்பு சிகிச்சையினை தொடரலாம் எனவும், இப்பணியினை தமிழக அரசின் முதலமைச்சர் விரிவான காப்பீட்டு திட்டத்தின் மூலம் செயல்படுத்தலாம் எனவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

எனவே,

1. பெருநகர சென்னை மாநகராட்சி, பொது சுகாதாரத்துறை, மண்டலம்–*15*, ஈஞ்சம்பாக்கம் வ.உ.சி தெரு, எண் *196*-ல் புதிதாக கட்டப்பட்டு வரும் நகர சமுதாய நல மையத்திற்கு *M/s. Free Mason Lodge Accountants - No. 194* அவர்கள் மூலம் வழங்கப்படவுள்ள *10* டயாலிஸிஸ் இயந்திரங்களை கொண்டு பொது மக்களுக்கு இரத்த சுத்திகரிப்பு சிகிச்சையினை (Dialysis) மேற்கொள்ள அனுமதியும்,
2. பெருநகர சென்னை மாநகராட்சி மூலம் செயல்படுத்தப்படவுள்ள அனைத்து விதமான பணிகளையும் கட்டிடத்துறை மற்றும் மண்டல அலுவலர்–*15*- அவர்கள்மூலம் மேற்கொள்ளவும்,
3. M/s.Tanker Foundation அவர்கள் மூலம் ஈஞ்சம்பாக்கம் நகர சமுதாய நல மையத்தில் இரத்த சுத்திகரிப்பு சிகிச்சையினை மேற்கொள்ள, தமிழக அரசின் முதலமைச்சர் விரிவான காப்பீட்டுத் திட்டத்தின் மூலம் செயல்படுத்த அனுமதியும்,
4. மண்டலம்–*15*ன் கீழ் உள்ள ஈஞ்சம்பாக்கம் நகர சமுதாய நல மையத்தில் அமைக்கப்படவுள்ள டயாலிஸிஸ் மையங்கள் செயல்படுத்த, தேவையான அனைத்து செலவினங்கள் மற்றும் தமிழக அரசின் முதலமைச்சர் விரிவான காப்பீட்டுத் திட்ட அட்டைகள் இல்லாத நோயாளிகளுக்கு ஆகும் செலவினங்களை மண்டல அளவில் மண்டல சுகாதார அலுவலர் மூலமாக மேற்கொள்ளவும்,
5. பெருநகர சென்னை மாநகராட்சிக்கு M/s.Tanker Foundation மூலம் வழங்கப்படும் சிறுநீரக சிகிச்சை மேற்கொண்ட நோயாளிகளின் பெயர் பட்டிகளில் தமிழக அரசின் முதலமைச்சர் விரிவான காப்பீட்டுத்திட்டத்தில் பயன் பெறும் நோயாளிகள் எவரும் இடம் பெறாமல் இருப்பதற்கும்,

6. தமிழக அரசின் முதலமைச்சர் விரிவான காப்பீட்டுத்திட்டத்தில் பயன் பெறும் நோயாளிகள் பெருநகர சென்னை மாநகராட்சியில் தீர்வு செய்யப்படும் பட்டிகளில் இடம் பெற்றிருந்தால், M/s.Tanker Foundation அவர்களுக்கு வழங்கப்படும் பணியாணையினை எவ்வித முன்னறிவிப்பின்றி ரத்து செய்ய அனுமதியும்,
7. தமிழக அரசின் முதலமைச்சர் விரிவான காப்பீட்டுத்திட்டத்தின்படி, M/s.Tanker Foundation அவர்கள் மூலம் சிறுநீரக சிகிச்சை மேற்கொள்வதற்கு பெருநகர சென்னை மாநகராட்சியுடன் ***3*** வருட காலத்திற்கு ஒப்பந்த உடன்படிக்கை மேற்கொள்ளவும்,
8. M/s.Tanker Foundation அவர்கள் மூலம் சிறுநீரக சிகிச்சை மேற்கொண்டதற்கான அனைத்து விவரங்களையும், தமிழக அரசின் முதலமைச்சர் விரிவான காப்பீட்டுத்திட்டத்திற்கு வழங்கப்பட்ட பின்னர், ஒரு நபருக்கு ஒரு முறை டயாலிஸிஸ் செய்ய வழங்கப்படும் தொகையினை, தமிழக அரசின் முதலமைச்சர் விரிவான காப்பீட்டுத்திட்டத்தின் மூலம் 75 சதவீதம் M/s.Tanker Foundation அவர்களுக்கும், இடவசதி மற்றும் பராமரிப்புக்காக 25 சதவீதம் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு வழங்கிட அனுமதியும்,
9. மேற்படி தொகையினை பிரித்து அளிப்பதற்கு, மண்டலடம்-15, மண்டல சுகாதார அலுவலர் மூலம் தமிழக அரசின் முதலமைச்சர் விரிவான காப்பீட்டுத் திட்டத்திற்கு கடிதம் அனுப்பவும்,
10. தமிழக அரசின் முதலமைச்சர் விரிவான காப்பீட்டுத்திட்டத்தின் மூலம் பயன்பெற இயலாமல், M/s.Tanker Foundation அவர்கள் மூலம் சிறுநீரக சிகிச்சை மேற்கொள்ளும் நோயாளிகளுக்கு ஏற்படும் செலவினங்களை, பெருநகர சென்னை மாநகராட்சிக்கு இடவசதி பராமரிப்புக்காக வழங்கப்படும் 25 சதவீதம் தொகையினை சம்மந்தப்பட்ட மண்டல சுகாதார அலுவலர் மூலம் பயன்படுத்த அனுமதியும்,
11. தமிழக அரசின் முதலமைச்சர் விரிவான காப்பீட்டுத்திட்டத்தின் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு வழங்கப்படும் 25% தொகையினை ஈஞ்சம்பாக்கம் நகர சமுதாய நல மையத்தின் *(UCHC)* பெயரில் புதிதாக வங்கி கணக்கு துவங்கி வரவு வைக்கவும் மற்றும் பராமரிக்கவும்,
12. மேற்படி தொகையினை, தமிழக அரசின் முதலமைச்சர் விரிவான காப்பீட்டுத்திட்டத்தின் மூலம் பயன்பெற இயலாத நோயாளிகளுக்கு ஒரு நோயாளிகளுக்கு ஒரு முறை இரத்த சுத்திகரிப்பு செய்ய தொகை ரூ.600/- வீதம் M/s.Tanker Foundation அவர்களுக்கு வழங்கிட சம்மந்தப்பட்ட உதவி சுகாதார அலுவலர், மாநகர நல அலுவலர் அவர்கள் மூலம், துணை ஆணையர் (சுகாதாரம்) அவர்களின் ஆணை பெற்று (இனம் 11ல் உள்ளபடி) மண்டல அளவிலேயே செலவழிக்கவும்,
13. M/s.Tanker Foundation அவர்கள் மூலம் மேற்படி காப்பீடுத்திட்டத்திற்கான அனைத்து விதமான பணிகள் மற்றும் செலவினத் தொகையினை மேற்கொள்ளவும், *M/s. Free Mason Lodge Accountants - No.194* அவர்கள் மூலம் வழங்கப்படவுள்ள *10* டயாலிஸிஸ் இயந்திரங்களுடன் சேர்த்து பெருநகர சென்னை மாநகராட்சியுடன் *(*ஒப்பந்தத்தில் குறிப்பிட்டுள்ளபடி அனைத்து பணிகளையும் செயல்படுத்திட*)* ஒப்பந்த உடன்படிக்கை செய்து கொண்ட

பின்னரே M/s.Tanker Foundation அவர்களுக்கு "ஆட்சேபணை இன்மை சான்றிதழ்" மண்டல சுகாதார அலுவலர் -15 அவர்களின் மூலம் வழங்கிட அனுமதியும்,

மேற்கண்ட 1 முதல் 13 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி-நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 03.07.2019 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

"1 முதல் 13 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி- நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".

******

பொ.சு.து.ந.க.எண்.பி1/2867/2019

தீர்மான எண். 362/2019 **நாள்:03-07-2019**

பொது சுகாதாரத்துறை - தேசிய நகர்புற சுகாதார திட்டம் - இரண்டு நகர்புற ஆரம்ப சுகாதார நிலையங்களின் புதிய கட்டுமான பணிகளுக்கு *Mission Director (NUHM)* அவர்களால் அனுமதிக்கப்பட்ட தொகை ரூ.1,57,00,000/-ஐ தேசிய நகர்புற சுகாதார திட்டத்தின் கீழ் உள்ள நகர ஆரம்ப சுகாதார மையத்தின் வாடகை நிதியிலிருந்து ஒதுக்கப்பட்டுள்ளது - *The Mission Director, NUHM-TN* அவர்களால் அனுமதிக்கப்பட்டுள்ள தொகை ரூ.75 இலட்சத்தில் - மண்டலம் - 6ல் உள்ள புளியந்தோப்பு நகர ஆரம்ப சுகாதார மையம் மற்றும் மண்டலம் - 8ன் கீழ் உள்ள அமைந்தகரை கிழக்கு நகர்புற ஆரம்ப சுகாதார மையங்களின் உபயோகத்தன்மை குறைவாக உள்ள கட்டிடத்தை தேசிய நகர்புற சுகாதார திட்டத்தில் ஏற்கனவே உள்ள விதிகளின் படி புதுப்பிப்பதற்கு பதிலாக புதிய கட்டுமான பணிகளை மேற்கொள்ளவும் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது - ஆணையர் அவர்களின் ஆணை பெறப்பட்டுள்ளது - மண்டலம்-8 புதிதாக கட்டப்பட்டு வரும் அமைந்தகரை கிழக்கு ஆரம்ப சுகாதார நிலையத்தில் இரத்த சுத்திகரிப்பு சிகிச்சை மேற்கொள்ள *M/s. Rotary Club of Chennai Galaxy* அவர்களின் மூலம் வழங்கப்படவுள்ள 10 டயாலிஸிஸ் இயந்திரங்கள் மற்றும் 10 எண்ணிக்கையில் மெத்தைகள் ஆகியவற்றை பெற்று அமைத்திடவும் - *M/s.Tanker Foundation* மூலம் இரத்த சுத்திகரிப்பு சிகிச்சையினை மேற்கொள்ளவும் அனுமதி.

தேசிய சுகாதார நல திட்டம் குறித்த ஆய்வுக் கூட்டம் கடந்த 02.01.19, அன்று தலைமைச் செயலகத்தில் 4-வது மாடியில் உள்ள அரங்க கூட்டத்தில் சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை குறித்து நடைபெற்றதாகவும், அதில் பெருநகர சென்னை மாநகராட்சியில் 2013-14-ற்கு பிறகு நகரப்புற ஆரம்ப சுகாதார மையங்கள் வாடகை கட்டிடத்தில் இயங்குவதற்காக வழங்கப்பட்ட தொகை ரூ.1,57,00,000/-ஐ இதுநாள் வரை செலவிடப்படாமல் உள்ளதாகவும், அத்தொகையில் இருந்து மண்டலம்-6-ல் உள்ள ஆரம்ப சுகாதாரம் நிலையம் மற்றும் மண்டலம்-8-ல் உள்ள அமைந்தகரை கிழக்கு நகர்ப்புற ஆரம்ப சுகாதார மையங்களின் உபயோகத்தன்மை குறையாக உள்ள கட்டிடத்தை தேசிய நகர்ப்புற திட்டத்தில் ஏற்கனவே உள்ள விதிகளின் படி புதுப்பிப்பதற்கு பதிலாக புதிய கட்டுமான பணிகளை மேற்கொள்ள இரண்டு ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு தலா தொகை ரூ.75,00,000/- இலட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளதாக (மிஷன் டைரக்டர், தேசிய சுகாதார திட்டம், தமிழ்நாடு அவர்களின் 21.12.2018 நாளிட்ட கடிதம் மற்றும் Minutes of the 36th EC meeting of SHS-TN, Ch-06 held on. 02.01.2019ல் உள்ளபடி) பொருள் எண்:33 - ன்படி, தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி அவர்களின் 12.02.2019 நாளிட்ட ஆணை பெறப்பட்டுள்ளது.

மண்டலம் - 8ல் புதிதாக கட்டப்பட்டு வரும் அமைந்தகரை ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு இரத்த சுத்திகரிப்பு சிகிச்சை மேற்கொள்ள 10 டயாலிஸிஸ் இயந்திரங்கள் மற்றும் 10 எண்ணிக்கையில் மெத்தைகள் ஆகியவற்றை M/s. Rotary Club of Chennai Galaxy அவர்களின் 13.06.2019 நாளிட்ட கடிதத்தில் தெரிவித்துள்ளதற்கிணங்க M/s.Tanker Foundation அவர்கள் மூலம் இரத்த சுத்திகரிப்பு சிகிச்சையினை மேற்கொள்ளவும் அனுமதி வழங்குமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

மேலும், வள்ளுவர் கோட்டம் பகுப்பாய்வு கூடத்தில் நோயாளிகளுக்கு நல்ல முறையில் டயாலிஸிஸ் சிகிச்சை மேற்கொள்ளப்பட்டு வரும் M/s.Tanker Foundation அவர்கள் மூலம், மண்டலம்-8ன் கீழ் உள்ள அமைந்தகரை கிழக்கு ஆரம்ப சுகாதார நிலையத்தில் டயாலிஸிஸ் சிகிச்சையினை தொடரலாம் எனவும், இப்பணியினை தமிழக அரசின் முதலமைச்சர் விரிவான காப்பீட்டு திட்டத்தின் மூலம் செயல்படுத்தலாம் எனவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

எனவே,

1. பெருநகர சென்னை மாநகராட்சி, பொது சுகாதாரத்துறை, மண்டலம்-8ன் கீழ் உள்ள அமைந்தகரை கிழக்கு நகர்புற ஆரம்ப சுகாதார நிலையங்களின் உபயோகத்தன்மை குறைவாக உள்ள கட்டிடத்தை, தேசிய நகர்புற சுகாதார திட்டத்தில் ஏற்கனவே உள்ள விதிகளின்படி புதுப்பிப்பதற்கு பதிலாக புதிய கட்டுமான பணிகள் மேற்கொள்ளபட்டு புதிதாக கட்டப்பட்டு வரும் கட்டிடத்தில் மேற்கொள்ள அனுமதியும், M/s.Rotary Club of Chennai Galaxy அவர்கள் மூலம் வழங்கப்படவுள்ள 10 டயாலிஸிஸ் இயந்திரங்கள் மற்றும் 10 எண்ணிக்கையில்

மெத்தைகள் ஆகியவற்றை கொண்டு பொது மக்களுக்கு இரத்த சுத்திகரிப்பு சிகிச்சையினை (Dialysis) மேற்கொள்ள அனுமதியும்,

2. பெருநகர சென்னை மாநகராட்சி மூலம் செயல்படுத்தப்படவுள்ள அனைத்து விதமான பணிகளையும் கட்டிடத்துறை மற்றும் மண்டல அலுவலர்-8 அவர்கள் மூலம் மேற்கொள்ளவும்,
3. M/s.Tanker Foundation மூலம் அமைந்தகரை UPHC-ல் இரத்த சுத்திகரிப்பு சிகிச்சையினை மேற்கொள்ள, தமிழக அரசின் முதலமைச்சர் விரிவான காப்பீட்டுத் திட்டத்தின் மூலம் செயல்படுத்த அனுமதியும்,
4. மண்டலம்-8ன் கீழ் உள்ள அமைந்தகரை கிழக்கு ஆரம்ப சுகாதார நிலையத்தில் அமைக்கப்படவுள்ள டயாலிஸிஸ் மையங்கள் செயல்படுத்த தேவையான அனைத்து செலவினங்கள் மற்றும் தமிழக அரசின் முதலமைச்சர் விரிவான காப்பீட்டுத் திட்ட அட்டைகள் இல்லாத நோயாளிகளுக்கு ஆகும் செலவினங்களை மண்டல அளவில் மண்டல சுகாதார அலுவலர் மூலமாக மேற்கொள்ளவும்,
5. பெருநகர சென்னை மாநகராட்சிக்கு M/s.Tanker Foundation மூலம் வழங்கப்படும் சிறுநீரக சிகிச்சை மேற்கொண்ட நோயாளிகளின் பெயர் பட்டிகளில் தமிழக அரசின் முதலமைச்சர் விரிவான காப்பீட்டுத்திட்டத்தில் பயன் பெறும் நோயாளிகள் எவரும் இடம் பெறாமல் இருப்பதற்கும்,
6. தமிழக அரசின் முதலமைச்சர் விரிவான காப்பீட்டுத்திட்டத்தில் பயன் பெறும் நோயாளிகள் பெருநகர சென்னை மாநகராட்சியில் தீர்வு செய்யப்படும் பட்டிகளில் இடம் பெற்றிருந்தால், M/s.Tanker Foundation அவர்களுக்கு வழங்கப்படும் பணியாணையினை எவ்வித முன்னறிவிப்பின்றி ரத்து செய்ய அனுமதியும்,
மண்டலம்-12, கோட்டம்-157ல், திருமதி. Meeradevi Chakravarthy & திருமதி. Jayanthy Rajasekar அவர்கள் சர்வே எண்.36/1A1, 36/1A2 & 36/1B மணப்பாக்கம் கிராமம் என்ற இடத்தில் அமைந்துள்ள நிலத்திற்கு மனைப்பிரிவு அனுமதி வேண்டி SD/WDCN12/00119/2019 நாள்:08.03.2019ன்படி விண்ணப்பம் அளித்துள்ளார்கள்.

மனைப்பிரிவில் காட்டப்பட்டுள்ள சாலைக்கான நிலங்களை சம்மந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளிடம் தானப்பத்திரம் மூலம் வழங்க வேண்டும் என்று அரசாணை எண். G.O.No.654, வீட்டு வசதி மற்றும் ஊரக வளர்ச்சி துறை, நாள் 21.08.1984ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, இம்மனைப்பிரிவில் சாலைக்காக ஒதுக்கப்பட்டுள்ள நிலங்களை தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி வசம் ஒப்படைக்கப்பட வேண்டும்.

விண்ணப்பதாரர் திருமதி. Meeradevi Chakravarthy & திருமதி. Jayanthy Rajasekar மனை உட்பிரிவில் சாலைக்கென ஒதுக்கப்பட்ட நிலங்களை தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு ஒப்படைக்க இசைவு தெரிவித்து தானப்பத்திரம் அளித்துள்ளார்.

திருமதி. Meeradevi Chakravarthy & திருமதி. Jayanthy Rajasekar மனை உட்பிரிவு வேண்டி சமர்ப்பித்த திட்ட வரைபடத்தின்படி, மொத்த பரப்பளவு 6360.10 சதுர மீட்டர் ஆகும். அவற்றில் சாலைக்கென 1038.73 சதுர மீட்டர் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டு மீதம் உள்ள 5321.37 ச.மீ பரப்பளவு நிலத்தில் 0.50% சதவிகித பரப்பளவு நிலம் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கும் மற்றும் 0.50% சதவிகித பரப்பளவு நிலம் பெருநகர சென்னை மாநகராட்சிக்கும் இலவசமாக ஒப்படைப்பு செய்ய Tamil Nadu Combined Development & Building Rules, 2019 Rule – 47 (8) அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ளதால் 27.03 ச.மீ நிலம் மின்சார வாரியத்திற்கும் 27.51 ச.மீ நிலம் சென்னை மாநகராட்சிக்கும் தானமாக வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு மீதம் உள்ள நிலத்தில் 13 மனைகளாக பிரிக்கப்பட்டு திட்ட வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளது.

மனைப்பிரிவு வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள மனைகள் மற்றும் சாலைகள் Tamil Nadu Combined Development & Building Rules, 2019 ன்படி உள்ளது. மேலும், ஆவணங்களை கூர்ந்தாய்வு செய்யப்பட்டதில் திருமதி. Meeradevi Chakravarthy & திருமதி. Jayanthy Rajasekar அபிவிருத்தி செய்வதற்கு உரிமை உள்ளவராக அறியப்படுகிறார்.

எனவே, திருமதி. Meeradevi Chakravarthy & திருமதி. Jayanthy Rajasekar யிடமிருந்து தானப்பத்திரம் மூலம் சாலை அமைப்பதற்குரிய நிலம் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு வழங்கப்பட்ட நிலம் ஆகியவற்றை மாநகராட்சி வசம் எடுத்துக் கொள்ளலாம் என கருதப்படுகிறது.

மனைப்பிரிவில் ஒதுக்கப்பட்டுள்ள சாலை பகுதிகளில் சாலைகளை அமைக்க ஆகும் செலவினம் விண்ணப்பதாரரிடம் இருந்து வசூலிக்கப்பட வேண்டும்.

தானமாக வழங்கப்பட்ட பகுதியில் சாலை பணிகளை மேற்கொள்ள செலவாகும் தொகை ரூ.14,04,000/- (ரூபாய் பதினான்கு இலட்சத்து நான்காயிரம் மட்டும்) உரிமையாளர் திருமதி. Meeradevi Chakravarthy & திருமதி. Jayanthy Rajasekar யிடமிருந்து வசூலிக்கப்பட வேண்டும்,

எனவே,

(1) சர்வே எண்.36/1A1, 36/1A2 & 36/1B, மணப்பாக்கம் கிராமத்தில் அமைந்துள்ள நிலத்திற்கு மனை உட்பிரிவு வேண்டி விண்ணப்பிக்கப்பட்டுள்ள திட்ட வரைபடத்தில் சாலைக்காக ஒதுக்கப்பட்டுள்ள 1038.73 சதுர மீட்டர் நிலம் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சியின் பயன்பாட்டிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட நிலம் 27.51 சதுர மீட்டர் நிலம் ஆகியவற்றை உரிமையாளர் திருமதி. Meeradevi Chakravarthy & திருமதி. Jayanthy Rajasekarயிடமிருந்து தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி பெற்றுக் கொள்வதற்கும்,

(2) சாலைக்காக ஒதுக்கப்பட்டுள்ள நிலத்தில் சாலை மற்றும் தெரு விளக்குகள் அமைக்க தேவையான ரூ.14,04,000/- (ரூபாய் பதினான்கு இலட்சத்து நான்காயிரம் மட்டும்) விண்ணப்பதாரரிடமிருந்து ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி" என்ற பெயரில் வரைவு காசோலையாக வசூலிக்கவும்,

மேற்கண்ட 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு சிறப்பு அதிகாரி- நிலைக்குழு(நகரமைப்பு) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 19.07.2019 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

"1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(நகரமைப்பு) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".

*****

ப.து.ந.க.எண்.*D1/SD/WDCN12/00167/2019*

தீர்மான எண்.402/2019 **நாள்:25-07-2019**

தானப்பத்திரம்

Thiru. R.Vijay & Tmt.R.Geetha அவர்கள் புல எண். 37/1B, மணப்பாக்கம் கிராமத்தில் அமைந்துள்ள நிலத்திற்கு மனைப்பிரிவு அனுமதி வேண்டி SD/WDCN12/00167/2019, நாள்: 22.03.2019ன்படி விண்ணப்பம் அளித்துள்ளார்கள்.

மனைப்பிரிவில் காட்டப்பட்டுள்ள சாலைக்கான நிலங்களை சம்மந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளிடம் தானப்பத்திரம் மூலம் வழங்க வேண்டும் என்று அரசாணை எண். G.O.No.654, வீட்டு வசதி மற்றும் ஊரக வளர்ச்சி துறை, நாள்.21.08.1984ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, இம்மனைப்பிரிவில் சாலைக்காக ஒதுக்கப்பட்டுள்ள நிலங்களை தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி வசம் ஒப்படைக்கப்பட வேண்டும்.

விண்ணப்பதாரர்கள் Thiru.R.Vijay & Tmt.R.Geetha மனைப்பிரிவில் சாலைக்கென ஒதுக்கப்பட்ட மற்றும் திறந்தவெளி பூங்காவிற்கான நிலங்களை தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு ஒப்படைக்க இசைவு தெரிவித்து தானப்பத்திரம் அளித்துள்ளார்கள்.

இது தொடர்பாக கீழ்கண்டவாறு தெரிவித்துக் கொள்ளப்படுகின்றது:

(அ)Thiru.R.Vijay & Tmt.R.Geetha மனைப்பிரிவு, வேண்டி சமர்ப்பித்த திட்ட வரைபடத்தின்படி, மனையின் மொத்த பரப்பளவு 11,000.00 சதுர மீட்டர் ஆகும். அவற்றில் சாலைக்கென 2144.00 சதுர மீட்டர் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளது. சாலைகள் அனைத்தும் 9.00 மீ, 7.20 மீ மற்றும் 4.80 மீ அகலம் உள்ளது. மனைப்பிரிவிற்கு அணுகு சாலையாக நெடுஞ்சாலை துறையின் சாலை அமைந்துள்ளது.

(ஆ) Thiru.R.Vijay & Tmt.R.Geetha ஆகியவர்களுக்கு இச்சொத்து கிடைக்கப்பெற்ற விவரம் பின்வருமாறு திரு.G. Parthasarathy Reddiar அவர்களுக்கு பாகப்பிரிவினை பத்திர எண்.*2032/1960* மூலம் *4.48* ஏக்கர் பரப்பளவு நிலம் புல எண். 37/1 part ல் கிடைக்கப்பெற்றது. பின்னர் ஏற்பட்ட குடும்ப பாகப்பிரிவினை (Memorandum of Partition)ல் குடும்ப உறுப்பினர்களுக்குள் 1964ம் வருடம் செப்டம்பர் 7 ம் தேதி அன்று ஏற்பட்ட பதிவு செய்யப்படாத பாகப்பிரிவினை பத்திரம் (unregistered memorandum of partition) மூலம் 3.00 ஏக்கர் பரப்பளவு நிலம், புல எண். 37/1 part ல் விண்ணப்பதாரர்களின் தந்தை மற்றும் கணவருமான திரு. P. Radhakrishnan அவர்களுக்கு கிடைக்கப்பெற்றது. பின்னர் திரு. P. Radhakrishnan அவர்கள் 06.10.2002 அன்று காலமானதால் அவரின் வாரிசுதாரர்கள் (வாரிசு சான்றிதழ் எண்.பமு/8811/2002 நாள் 30.11.2003) என்கிற முறையில் Thiru.R.Vijay & Tmt. R.Geetha அவர்களுக்கு கிடைக்கப்பெற்றது. இம்மனையினை அபிவிருத்தி செய்ய விண்ணப்பதாரர்கள் உரிமையுள்ளவராக அறியப்படுகிறார்கள். இதனால், விண்ணப்பம் சமர்ப்பிக்க உரிமையுடையவராக உள்ளார்கள். மனை உரிமையாளர்கள் மனைக்கான பட்டாவினை, வட்டாட்சியர், ஸ்ரீபெரும்புதூர் வட்டம் அவர்களிடம் இருந்து பெற்றுள்ளார்கள்.

(இ)மனைப்பிரிவில் மொத்த நிலம் 10,000 ச.மீ பரப்பளவுக்கு மேல் இருப்பின் விண்ணப்பதாரர்கள் திறந்தவெளி ஒதுக்கீடு சம்பந்தப்பட்ட நிலங்களை உள்ளாட்சி அமைப்புகளிடம் ஒப்படைக்க வேண்டும் என்று விதிகள் உள்ளது. Thiru. R. Vijay & Tmt. R.Geetha அவர்கள் இவ்விண்ணப்பத்தில் திறந்தவெளி ஒதுக்கீட்டு நிலத்தை ஒப்படைக்க இசைவு தெரிவித்துள்ளார்கள்.

(ஈ) மனைப்பிரிவில் காட்டப்பட்டுள்ள சாலையினை அமைப்பதற்கு தேவையான தோராய அபிவிருத்தி கட்டணமாக விண்ணப்பதாரரிடம் இருந்து கட்டணம் வசூலிக்க வேண்டும். மனைப்பிரிவில் காட்டப்பட்டுள்ள சாலையினை அபிவிருத்தி செய்ய தேவையான தொகை ரூ.28,54,000/- வசூலிக்கப்பட வேண்டும்.

மனைப்பிரிவு வரைபடம் விதிமுறைக்கு உட்பட்டு உள்ளதாலும், விண்ணப்பதாரர் Thiru. R.Vijay & Tmt. R.Geetha அம்மனையினை மேம்படுத்துவதற்கு உரிமை உள்ளவராக இருப்பதால் சாலைக்கென ஒதுக்கப்பட்ட 2144.00 ச.மீ பரப்பளவு நிலமும், பூங்கா பயன்பாட்டிற்காக 887.00 ச.மீ பரப்பளவு நிலத்தையும் தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி எடுத்துக் கொள்ளலாம் என்று கருத்தபடுகிறது.

எனவே,

(1) S.No.37/1B மணப்பாக்கம் கிராமம் என்கிற இடத்தில், சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் மனைப்பிரிவு வரைபடத்தில் 2144 சதுர மீட்டர் நிலத்தை சாலைக்கெனவும், 887 சதுர மீட்டர் நிலத்தை திறந்தவெளி பகுதியாகவும் (பூங்காவிற்கென) ஒதுக்கப்பட்டுள்ளதை Thiru. R. Vijay & Tmt. R. Geetha யிடமிருந்து தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி பெற்றுக் கொள்வதற்கும்,

(2) சாலைக்கென ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் சாலை பணி, மழைநீர் வடிகால் மற்றும் தெரு விளக்கு அமைக்கும் பணியினை பெருநகர சென்னை மாநகராட்சி மூலம் மேற்கொள்ள மனை உரிமையாளர்களிடமிருந்து கட்டணமாக ரூ.28,54,000ஐ (ரூபாய் இருபத்தி எட்டு லட்சத்து ஐம்பத்தி நான்காயிரம் மட்டும்) ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி" என்ற பெயரில் வரைவு காசோலையாக வசூலிக்கவும்,

மேற்கண்ட 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு சிறப்பு அதிகாரி- நிலைக்குழு(நகரமைப்பு) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 19.07.2019 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

"1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(நகரமைப்பு) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".

*****

ப.து.ந.க.எண்.*D1/LA/SD/WDCN04/219/2019*

தீர்மான எண்.403/2019 **நாள்:25-07-2019**

தானப்பத்திரம்

திரு. L. குமார், அவர்கள் Demonte Avenue பழைய சர்வே எண்.44/1A & 44/1B, T.S.No.85/1, பிளாக் எண்.7 ஜம்பூலி கிராமம் என்ற இடத்தில் அமைந்துள்ள நிலத்திற்கு மனைப்பிரிவு அனுமதி வேண்டி LA/SD/WDCN04/00219/2019, நாள்.24.04.2019ன்படி விண்ணப்பம் அளித்துள்ளார்.

மனைப்பிரிவில் காட்டப்பட்டுள்ள சாலைக்கான நிலங்களை சம்மந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளிடம் தானப்பத்திரம் மூலம் வழங்க வேண்டும் என்று அரசாணை எண். G.O.No.654, வீட்டு வசதி மற்றும் ஊரக வளர்ச்சி துறை, நாள். 21.08.1984ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, இம்மனைப்பிரிவில் சாலைக்காக ஒதுக்கப்பட்டுள்ள நிலங்களை தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி வசம் ஒப்படைக்கப்பட வேண்டும். மேலும், ஒருங்கிணைந்த முழுமையான வளர்ச்சி மற்றும் கட்டுமான விதி *2019*, விதி எண் *47(8)* ன் படி மொத்த நிலப்பரப்பில் (சாலை பகுதி நீங்கலாக) 0.5% நிலத்தினை உள்ளாட்சி பயன்பாட்டிற்கு மற்றும் 0.5% நிலத்தினை மின்வாரிய பயன்பாட்டிற்காக ஒப்படைக்கப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

மனுதாரர் திரு. L. குமார் அவர்கள் மனைப்பிரிவில் சாலைக்கென ஒதுக்கப்பட்ட நிலம் மற்றும் உள்ளாட்சி பயன் பாட்டிற்கான 0.5% நிலங்களை தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு ஒப்படைக்க இசைவு தெரிவித்து தானப்பத்திரம் அளித்துள்ளார்.

திரு. L. குமார் மனைப்பிரிவு வேண்டி சமர்ப்பித்த திட்ட வரைபடத்தின்படி, மொத்த பரப்பளவு 5,036.94 ச.மீ ஆகும். அவற்றில் சாலைக்கென 892.30 ச.மீ நிலம் மற்றும் உள்ளாட்சி பயன்பாட்டிற்காக 22.30 ச.மீ மற்றும் மின்வாரிய பயன்பாட்டிற்கு 22.30 ச.மீ ஒதுக்கீடு செய்யப்பட்டு மீதம் உள்ள 4,100.04 ச.மீ நிலம் 30 மனைகளாக பிரிக்கப்பட்டு திட்ட வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளது.

எனவே, திரு. L. குமார் அவர்களிடமிருந்து தானப்பத்திரம் மூலம் சாலை அமைப்பதற்குரிய நிலங்களை பெருநகர சென்னை மாநகராட்சி வசம் எடுத்துக் கொள்ளலாம் என கருதப்படுகிறது.

மேலும், மின் வாரிய பயன்பாட்டிற்கு அளிக்க படவேண்டிய 22.30ச.மீ நிலத்தினை மின்வாரியம் தானமாக பெற்று கொள்ள கடிதம் அனுப்பபட்டுள்ளது.

மனைப்பிரிவில் ஒதுக்கப்பட்டுள்ள சாலை பகுதிகளில் சாலைகளை அமைக்க ஆகும் செலவினம் விண்ணப்பதாரரிடம் இருந்து வசூலிக்கப்பட வேண்டும்.

இரண்டாம் முழுமை திட்டத்தின் வளர்ச்சி விதிமுறைகளின்படி மனுதாரர் *3000* ச.மீ பரப்பளவுக்கு மேல் மற்றும் *10,000* ச.மீ பரப்பளவு நிலத்திற்கு உட்பட்டு இருந்தால் திறந்தவெளி ஒதுக்கீட்டிற்காக *10* சதவிகித நிலம் அல்லது அதற்கு ஈடான நிலத்தின் வழிகாட்டு மதிப்பின்படி உரிய விதிகளின்படி அதற்கான தொகையை செலுத்த வேண்டும். மனுதாரர் இத்தொகையினை செலுத்த இசைவு தெரிவித்துள்ளார்.

தானமாக வழங்கப்பட்ட பகுதியில் சாலை பணிகளை மேற்கொள்ள செலவின தொகை ரூ.12,30,000/-ஐ (ரூபாய் பன்னிராண்டு இலட்சத்து முப்பதாயிரம் மட்டும்) மனை உரிமையாளர் திரு. L. குமார் அவர்களிடமிருந்து வசூலிக்கப்பட வேண்டும்,

எனவே,

(1) Demonte Avenue, பழைய சர்வே எண்.44/1A & 44/1B, T.S.No.85/1, பிளாக் எண்.7, ஜம்பூலி கிராமம் அமைந்துள்ள நிலத்திற்கு மனைப்பிரிவு வேண்டி விண்ணப்பிக்கப்பட்டுள்ள திட்ட வரைபடத்தில் சாலைக்காக ஒதுக்கப்பட்டுள்ள 892.30 ச.மீ நிலம் மற்றும் உள்ளாட்சி பயன்பாட்டிற்கான 22.30ச.மீ நிலமும் உரிமையாளர் திரு. L. குமார் அவர்களிடமிருந்து தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி பெற்றுக் கொள்வதற்கும்,

(2) சாலைக்காக ஒதுக்கப்பட்டுள்ள நிலத்தில் சாலைகள் மற்றும் தெரு விளக்குகள் அமைக்க செலவின தொகை ரூ.12,30,000/-ஐ (ரூபாய் பன்னிரெண்டு இலட்சத்து முப்பதாயிரம் மட்டும்) மனை உரிமையாளரிடமிருந்து ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி" என்ற பெயரில் வரைவு காசோலையாக வசூலிக்கவும்,

மேற்கண்ட 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு சிறப்பு அதிகாரி- நிலைக்குழு(நகரமைப்பு) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 19.07.2019 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

"1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(நகரமைப்பு) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".

*****

ப.து.நக.எண்.*D1/SD/WDCN07/299/2019*

தீர்மான எண்.404/2019 **நாள்:25-07-2019**

தானப்பத்திரம்

M/s. Auraplus Homes LLP represented by its Partners Mr. Raunaq Rungta and Mr. Mohit Kumar (பொது அதிகார முகவர்) அவர்கள் நகர புல எண். 6/2, மண்ணூர்பேட்டை கிராமம் மற்றும் நகர புல எண்.28/2, 29/1,2, 3, 4, 5 & 30/3, 4 அத்திபட்டு கிராமத்தில் அமைந்துள்ள நிலத்திற்கு மனைப்பிரிவு அனுமதி வேண்டி SD/WDCN07/00299/2019 நாள்:29.05.2019ன்படி விண்ணப்பம் அளித்துள்ளார்.

மனைப்பிரிவில் காட்டப்பட்டுள்ள சாலைக்கான நிலங்களை சம்மந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளிடம் தானப்பத்திரம் மூலம் வழங்க வேண்டும் என்று அரசாணை எண். G.O.No.654, வீட்டு வசதி மற்றும் ஊரக வளர்ச்சி துறை நாள் 21.08.1984ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, இம்மனைப்பிரிவில் சாலைக்காக ஒதுக்கப்பட்டுள்ள நிலங்களை தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி வசம் ஒப்படைக்கப்பட வேண்டும்.

விண்ணப்பதாரர் M/s. Auraplus Homes LLP represented by its Partners Mr. Raunaq Rungta and Mr. Mohit Kumar (பொது அதிகார முகவர்) மனைப்பிரிவில் சாலைக்கென ஒதுக்கப்பட்ட நிலங்களை தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு ஒப்படைக்க இசைவு தெரிவித்து தானப்பத்திரம் அளித்துள்ளார்.

இது தொடர்பாக கீழ்கண்டவாறு தெரிவித்துக் கொள்ளப்படுகின்றது:

(அ) M/s. Auraplus Homes LLP represented by its Partners Mr. Raunaq Rungta and Mr. Mohit Kumar (பொது அதிகார முகவர்) மனைப்பிரிவு, வேண்டி சமர்ப்பித்த திட்ட வரைபடத்தின்படி, மனையின் மொத்த பரப்பளவு 7894.00 சதுர மீட்டர் ஆகும். அவற்றில் சாலைக்கென 2080.50 சதுர மீட்டர் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளது. சாலைகள் அனைத்தும் 7.2மீ அகலம் உள்ளது. மனைப்பிரிவிற்கு அணுகு சாலையாக தேசிய நெடுஞ்சாலை புற வழிச் சாலை அமைந்துள்ளது.

(ஆ) M/s. Auraplus Homes LLP represented by its Partners Mr. Raunaq Rungta and Mr. Mohit Kumar (பொது அதிகார முகவர்) அவர்கள் மனையினை அபிவிருத்தி செய்ய உரிமையுள்ளவராக அறியப்படுகிறார். மனையின் உரிமையாளர்கள் திரு. G. Narayanan மற்றும் பலர்களிடம் இருந்து, பதிவு செய்யப்பட்ட பொது அதிகாரப் பத்திரம் வாயிலாக, விண்ணப்பம் சமர்ப்பிக்க உரிமையுடையவராக உள்ளார். மனை உரிமையாளர்கள் மனைக்கான பட்டாவினை, வட்டாட்சியர், அம்பத்தூர் வட்டம் அவர்களிடம் இருந்து பெற்றுள்ளார்கள்.

(இ) விண்ணப்பதாரர் சமர்ப்பித்த வரைபடம் Tamil Nadu Combined Development & Building Rules, 2019க்கு ஏற்ப உள்ளது. மனைப்பிரிவிற்கு அணுகு சாலையாக தேசிய நெடுஞ்சாலை புற வழிச் சாலை அமைந்துள்ளது. அனைத்து மனைகளும் 72 ச.மீ பரப்பளவிற்கு குறையாமல் உள்ளது.

(ஈ) மனைப்பிரிவின் பரப்பளவு 3000 ச.மீ க்கு மேல் மற்றும் 10,000 ச.மீக்கு கீழே இருப்பின் விண்ணப்பதாரர் திறந்தவெளி ஒதுக்கீடு நிலமாகவோ அல்லது அதற்கு ஈடான தொகையாகவோ செலுத்தலாம் என்று விதிகள் உள்ளது. M/s. Auraplus Homes LLP represented by its Partners Mr. Raunaq Rungta and Mr. Mohit Kumar (பொது அதிகார முகவர்) அவர்கள் இவ்விண்ணப்பத்தில் திறந்தவெளி ஒதுக்கீட்டு நிலத்திற்கு ஈடாக தொகையினை செலுத்த இசைவு தெரிவித்துள்ளார்.

(உ) Tamil Nadu Combined Development & Building Rules, 2019 உள்ள விதிகளின் படி, மனைப்பிரிவு வேண்டி சமர்ப்பிக்கும் பொழுது, மனையின் பரப்பளவில் (சாலை பகுதி நீங்கலாக) மனை பரப்பளவில் 1%பொது பயன்பாட்டிற்கு ஒதுக்கப்பட வேண்டும். அதில் 0.5% TANGEDCO-விற்கு மற்றும்

0.5% பெருநகர சென்னை மாநகராட்சிக்கும் தானப்பத்திரம் மூலம் அளிக்க வேண்டும். M/s. Auraplus Homes LLP represented by its Partners Mr. Raunaq Rungta and Mr. Mohit Kumar (பொது அதிகார முகவர்) அவர்கள் அதற்கேற்றவாறு 29.25 ச.மீ பரப்பளவு பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தானமாக அளிக்க இசைவு தெரிவித்துள்ளார். அவ்வாறே 29.25 ச.மீ பரப்பளவு M/s. TANGEDCO விற்கும் ஒதுக்க இசைவு தெரிவித்துள்ளார்.

(ஊ) மனைப்பிரிவில் காட்டப்பட்டுள்ள சாலையினை அமைப்பதற்கு தேவையான தோராய அபிவிருத்தி கட்டணமாக விண்ணப்பதாரரிடம் இருந்து கட்டணம் வசூலிக்க வேண்டும். மனைப்பிரிவில் காட்டப்பட்டுள்ள சாலையினை அபிவிருத்தி செய்ய தேவையான தொகை ரூ.29,60,000/- வசூலிக்கப்பட வேண்டும்.

மனைப்பிரிவு வரைபடம் விதிமுறைக்கு உட்பட்டு உள்ளதாலும், விண்ணப்பதாரர் M/s. Auraplus Homes LLP represented by its Partners Mr. Raunaq Rungta and Mr. Mohit Kumar (பொது அதிகார முகவர்) அம்மனையினை மேம்படுத்துவதற்கு உரிமை உள்ளவராக கருதுவதாலும் சாலைக்கென ஒதுக்கப்பட்ட 2080.50 ச.மீ பரப்பளவு நிலமும், பொது பயன்பாட்டிற்காக 29.25 ச.மீ பரப்பளவு நிலத்தையும் தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி எடுத்துக் கொள்ளலாம் என்று கருத்தபடுகிறது.

எனவே,

(1) நகர புல எண். 6/2, மண்ணூர்பேட்டை கிராமம் மற்றும் நகர புல எண்.28/2, 29/1,2, 3, 4, 5 & 30/3, 4 அத்திபட்டு கிராமத்தில் அமைந்துள்ள நிலத்திற்கு மனைப்பிரிவு வேண்டி விண்ணப்பிக்கப்பட்டுள்ள திட்ட வரைபடத்தில் சாலைக்காக ஒதுக்கப்பட்டுள்ள 2080.50 சதுர மீட்டர் நிலம் மற்றும் பொது பயன்பாட்டிற்கான ஒதுக்கப்பட்டுள்ள 29.25 ச.மீ நிலத்தினையும் M/s. Auraplus Homes LLP represented by its Partners Mr. Raunaq Rungta and Mr. Mohit Kumar (பொது அதிகார முகவர்) அவர்களிடமிருந்து தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி எடுத்துக் கொள்வதற்கும்,

(2) சாலைக்காக ஒதுக்கப்பட்டுள்ள நிலத்தில் சாலை மற்றும் தெரு விளக்குகள் அமைக்க செலவின தொகை ரூ.29,60,000/- (ரூபாய் இருபத்தி ஒன்பது லட்சத்து அறுபதாயிரம் மட்டும்) மனை உரிமையாளர்களிடமிருந்து ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி" என்ற பெயரில் வரைவு காசோலையாக வசூலிக்கவும்,

மேற்கண்ட 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு சிறப்பு அதிகாரி- நிலைக்குழு(நகரமைப்பு) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 19.07.2019 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

"1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(நகரமைப்பு) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".

*****

ப.து.ந.க.எண்.*A7/RL/WDCN02/01555/2019*

தீர்மான எண்.405 / 2019 **நாள்:25-07-2019**

தானப்பத்திரம்

Thiru. M.P. Palani and Tmt. Gajalakshmi அவர்களின் சர்வே எண்.132/2A1 & 132/2A2 மாத்தூர் கிராமத்தில் அமைந்துள்ள நிலத்திற்கு மனைப்பிரிவு வரண்முறைப்படுத்த அனுமதி வேண்டி விண்ணப்பம் பதிவு செய்துள்ளார்.

மனைப்பிரிவு வரன்முறைப்படுத்தும் வரைபடத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள சாலை மற்றும் திறந்தவெளி ஒதுக்கீட்டு நிலங்களை தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி வசம் ஒப்படைக்க விண்ணப்பதாரர்கள் Thiru. M.P. Palani and Tmt. Gajalakshmi அவர்களை அறிவுறுத்துமாறு உறுப்பினர்-செயலர் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் அவர்கள் *14/02/2019* நாளிட்ட கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

மனுதாரர்கள் Thiru. M.P. Palani and Tmt. Gajalakshmi அவர்கள் வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளவாறு சாலை மற்றும் திறந்தவெளி ஒதுக்கீட்டு நிலங்களை தானப்பத்திரம் மூலம் ஒப்படைக்க இசைவு தெரிவித்து தானப்பத்திரம் அளித்துள்ளார்.

மனைப்பிரிவின் பரப்பளவு 15070.00 சதுர அடி ஆகும். அவற்றில் சாலைக்கென 4288.00 சதுர அடியும் திறந்தவெளி ஒதுக்கீட்டிற்கென 970.00 சதுர அடியும் வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளது.

எனவே, Thiru. M.P.Palani and Tmt. Gajalakshmi அவர்களிடமிருந்து தானப்பத்திரம் மூலம் சாலை மற்றும் திறந்தவெளி ஒதுக்கீட்டு நிலங்களை பெருநகர சென்னை மாநகராட்சி வசம் எடுத்துக் கொள்ளலாம் என கருதப்படுகிறது.

மனைப்பிரிவில் ஒதுக்கப்பட்டுள்ள சாலை பகுதிகளில் சாலைகளை அமைக்க ஆகும் செலவினம் விண்ணப்பதாரரிடம் இருந்து வளர்ச்சி கட்டணமாக மனைப்பரப்பளவில் சதுர மீட்டருக்கு `.500/- வீதம் வசூலிக்கப்பட வேண்டும்.

எனவே,

(1) சர்வே எண்.132/2A1 & 132/2A2 மாத்தூர் கிராமத்தில் அமைந்துள்ள நிலத்தில் மனைப்பிரிவு வரன்முறைப்படுத்த வேண்டி விண்ணப்பிக்கப்பட்டுள்ள வரைபடத்தில் சாலைக்கென ஒதுக்கப்பட்டுள்ள 4288.00 சதுர அடி நிலம் மற்றும் திறந்தவெளி ஒதுக்கீட்டிற்கான 970.00 சதுர அடி நிலம் அகியவற்றை உரிமையாளர்கள் Thiru. M.P.Palani and Tmt. Gajalakshmi அவர்களிடமிருந்து தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி பெற்றுக் கொள்வதற்கும்,

(2) உள்கட்டமைப்பு வசதிகளான சாலை மற்றும் தெருவிளக்கு ஆகியவை அமைப்பதற்கான செலவினமாக மனைப்பரப்பளவில் சதுர மீட்டருக்கு `.500/- வீதம் (ரூபாய் ஐநூறு மட்டும்) விண்ணப்பதாரரிடம் இருந்து வசூலிக்கவும்,

மேற்கண்ட *1* மற்றும் *2* ஆகிய இனங்களுக்கு சிறப்பு அதிகாரி- நிலைக்குழு(நகரமைப்பு) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது *19.07.2019* நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

"*1* மற்றும் *2* ஆகிய இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(நகரமைப்பு) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".

*****

நி.ம.உ.து.ந.க.எண்.எல்இ8/3843/2018

தீர்மான எண். 406/2019 **நாள்:25-07-2019**

நிலம் மற்றும் உடைமைத்துறை - சென்னை குடிநீர் வழங்கல் (ம) கழிவுநீரகற்று வாரியம் - பகுதி 2, வார்டு 104 - ஏற்கெனவே டிப்போ 61 அலுவலகத்திற்கென ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் சிறிய கழிவுநீரேற்று நிலையம் அமைக்க தடையின்மைச் சான்று வழங்கியமைக்கு பின்னேற்பு அனுமதி.

பகுதி பொறியாளர்-VIII, சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் அவர்களின் 11.10.2018 நாளிட்ட கடிதம் மற்றும் 104வது வட்ட முன்னாள் மாமன்ற உறுப்பினர் அவர்கள் மாண்புமிகு அமைச்சர், மீன்வளம் மற்றும் நிர்வாக சீர்திருத்தத்துறை அவர்களுக்கு அனுப்பியுள்ள 15.12.2018 நாளிட்ட மனுவில், சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் மூலம் மண்டலம்-8, பிரிவு-108ல் பல தெருக்கள் முறையாக கழிவுநீரேற்று நிலையம் இல்லாததால் பொதுமக்கள் மிகவும் சிரமப்படுவதால் சிறிய கழிவுநீரேற்றும் நிலையம் அமைக்க ஏற்கெனவே டிப்போ-61 அலுவலகத்திற்கென ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் 3 மீட்டர் சுற்றளவில் 7.5 மீட்டர் ஆழத்தில் சேகரிக்கும் நிலையம் அமைக்க 9.3 x 6.6 மீட்டர் நிலத்தில் தடையின்மைச் சான்று வழங்குமாறு கோரப்பட்டுள்ளது.

அதனைத்தொடர்ந்து நிலம் மற்றும் உடைமைத்துறை தனி வட்டாட்சியர், சார் ஆய்வாளர் மற்றும் சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரிய உதவி பொறியாளர் ஆகியோரால் மேற்படி புலம் 19.12.2018 அன்று கூட்டுப்புலத்தணிக்கை மேற்கொள்ளப்பட்டது.

தனி வட்டாட்சியர்/நிமஉது அவர்களின் 19.12.2018 நாளிட்ட புலத்தணிக்கை குறிப்பில், மேற்படி 409/5 புலம் மாநகராட்சி தனி என வகைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இப்புலத்தில் பெருநகர சென்னை மாநகராட்சி பள்ளி தனி சுற்றுச்சுவர் எழுப்பப்பட்டு தனியாக உள்ளது. அதனை ஒட்டி வலதுபுறத்தில் மாநகராட்சிக்கு சொந்தமான இ-சேவை மையக் கட்டிடம் மற்றும் வரி வசூல் செய்யும் கட்டிடம் உள்ளது. இதனை ஒட்டி பெரிய அரச மரம் உள்ளது. இதன் பின்பகுதியில் சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்திற்கு சொந்தமான (முன்னர் வரிவசூல் செய்யப்பட்டு வந்துள்ளது) பாழடைந்த கட்டிடம் உள்ளது.

இப்புலத்தினை ஒட்டி தனியாருக்கு சொந்தமான அடுக்குமாடி குடியிருப்புகள் உள்ளது. பெருநகர சென்னை மாநகராட்சியின் இ-சேவை மையம் மற்றும் பள்ளி வளாகம் மற்றும் பெரிய அரச மரம் மற்றும் தனியார் குடியிருப்புகளுக்கு பாதிப்பு ஏற்படுத்தாத வகையில் கழிவுநீரேற்று நிலையம் அமைக்கப்பட வேண்டுமென்ற நிபந்தனையுடன் மண்டல அலுவலரின் குறிப்பினை பெற்று தடையின்மைச் சான்று வழங்கலாம் என தெரிவித்துள்ளார்.

இந்நேர்வில், மேற்படி ஏற்கெனவே டிப்போ-61 அலுவலகத்திற்கென ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் 3 மீட்டர் சுற்றளவில் 7.5 மீட்டர் ஆழத்தில் சேகரிக்கும் நிலையம் அமைக்க 9.3 x 6.6 மீட்டர் நிலத்தில் சிறிய கழிவுநீரேற்று நிலையம் அமைக்க சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்திற்கு தடையின்மை சான்று வழங்குவது சம்பந்தமான முழு விவரத்துடன் கூடிய விரிவான அறிக்கையினை இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு 04.01.2019, 11.02.2019 மற்றும் 07.05.2019 நாளிட்ட கடிதங்கள் மூலம் மண்டல அலுவலர்-8 அவர்களை கோரப்பட்டது.

மண்டல அலுவலர்/ம-8 அவர்களின் 05.07.2019 நாளிட்ட கடிதத்தில் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-8, பகுதி-23, கோட்டம்-104ல் அமைந்துள்ள சுந்தரம்பிள்ளை தெருவில் பழைய மாநகராட்சி அலுவலகம்-61 அமைந்துள்ள இடத்தில் மாநகராட்சி இ-சேவை மையம், வரி வசூலர் அலுவலகம் மற்றும் சென்னை குடிநீர் வழங்கல் (ம) கழிவுநீர் அகற்று வாரிய டிப்போ-61

நி.ம.உ.து.ந.க.எண்.எல்இ8/3843/2018

அலுவலகம் இயங்கி வருகிறது, இந்த இ-சேவை மையத்தினுள் எழும்பூர் சட்ட மன்ற தொகுதி வாக்குச்சாவடி எண்.5ம் அமைந்துள்ளது. இவ்விடத்தில் 3 மீட்டர் சுற்றளவில் 7.5 மீட்டர் ஆழத்தில் சேகரிக்கும் நிலையம் அமைக்கவும் 9.3 X 6.6 மீட்டர் நீளத்தில் சிறிய கழிவு நீரேற்று நிலையம் அமைக்கவும் சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியத்துறையினர் தடையின்மைச் சான்றிதழ் வழங்கலாம் என தெரிவித்துக்கொள்ளப்பட்டது,

எனவே, இந்நேர்வில், மண்டலம்-8, பகுதி-23, கோட்டம்-104ல் அமைந்துள்ள சுந்தரம்பிள்ளை தெருவில் புல எண் 409/5 மாநகராட்சி தனி நிலத்தில் பழைய மாநகராட்சி அலுவலகம்-61 அமைந்துள்ள இடத்தில் மாநகராட்சி இ-சேவை மையம், பள்ளி வளாகம் (ம) தனியார் குடியிருப்புகளுக்கு பாதிப்பு ஏற்படுத்தாத வகையில் சென்னை குடிநீர் வழங்கல் (ம) கழிவுநீரகற்று வாரியம் கோரிய நிலமான 9.3 x 6.6 மீட்டர் கழிவு நீரேற்று நிலையம் அமைக்க தடையின்மை சான்று வழங்க அனுமதி வழங்கியதற்கு சிறப்பு அதிகாரி- நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் பின்னேற்பு அனுமதி கோரிய ஆணையரது 22.07.2019 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

"தடையின்மை சான்று வழங்கியமைக்கு சிறப்பு அதிகாரி- நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் பின்னேற்பு அனுமதி அளிக்கப்பட்டது".

*****

நி.ம.உ.து.ந.க.எண்.எல்இ4/2671/1994

தீர்மான எண். 407/2019 **நாள்:25-07-2019**

நிலம் மற்றும் உடைமைத்துறை - மண்டலம்-10, மயிலாப்பூர் கிராமம், புல எண். 2697/5 பாகம் - பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான 2093 சதுர அடி நிலம் - செல்லம்மாள் கல்வி நிறுவனத்திற்கு குத்தகை அடிப்படையில் ஒதுக்கீடு செய்தது - குத்தகை காலம் முடிவுற்றது - நீக்குதல் ஆணை அளிக்கப்பட்டது - நகர உரிமையியல் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட C.M.A. No.140/2005 மற்றும் சென்னை உயர் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட C.R.P.No.326/2016 மற்றும் C.M.P. No.1735/2016 வழக்குகள் - தீர்ப்பு வழங்கப்பட்டது - கேட்பு நிலுவைத்தொகை செலுத்தப்பட்டது - குத்தகை புதுப்பிக்க அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சி, மயிலாப்பூர் கிராமம், புல எண். 2697/5 பாகம், சுந்தரேஸ்வர் தெருவில் அமைந்துள்ள பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான 2093 சதுர அடி பரப்பளவு கொண்ட இடத்தை செல்லம்மாள் கல்வி நிறுவனத்திற்கு சென்னை மாநகராட்சி ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணை எண். RDC.No.G3/12098/80 நாள்.14.3.1980-ன் படி மாதம் ரூ.170/- வீதம் ஒருவருடத்திற்கு குத்தகைக்கு வழங்கப்பட்டது.

மேற்படி செல்லம்மாள் கல்வி நிறுவனத்திற்கு குத்தகைக்கு விடப்பட்ட விவரங்கள் கீழ்கண்ட அட்டவணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வ. எண்.	நிலத்தின் விவரம்	பரப்பளவு	குத்தகை காலம்	வாடகை	அரசாணை / மன்றத்தீர்மான எண்.
1	மயிலாப்பூர் கிராமம், புல எண்.2697/5 பாகம்	2093 ச.அடி நிலம்	1980-1981 ஒரு வருடம்	மாதாந்திர வாடகை ரூ.170/-	சென்னை மாநகராட்சி ஆணையரது செயல்முறை ஆணை எண். நாள். 14.03.1980
2	மயிலாப்பூர் கிராமம், புல எண்.2697/5 பாகம்	2093 ச.அடி நிலம்	22.08.1990 முதல் 21.08.1992 வரை	மாதாந்திர வாடகை ரூ.1,512/-	சிறப்பு அதிகாரி மன்ற தீர்மான எண்.1471/1990, நாள். 16.10.1990
3	மயிலாப்பூர் கிராமம், புல எண்.2697/5 பாகம்	2093 ச.அடி நிலம்	22.08.1992 முதல் 20.08.1995 வரை	வருட வாடகை ரூ.20,000/-	சிறப்பு அதிகாரி மன்ற தீர்மான எண்.148/1995, நாள். 03.01.1995
4	மயிலாப்பூர் கிராமம், புல எண்.2697/5 பாகம்	2093 ச.அடி நிலம்	21.08.1995 முதல் 20.08.1998 வரை 3 ஆண்டுகள்	வருட வாடகை ரூ.20,000/-	சிறப்பு அதிகாரி மன்ற தீர்மான எண்.1694/1996, நாள். 05.08.1996

மேற்கண்ட செல்லம்மாள் கல்வி நிறுவனம் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான நிலத்தை இந்நாள் வரை (01.04.1980 முதல் 31.03.2018) பயன்படுத்தியமைக்கு செலுத்த வேண்டிய பயன்பாட்டு இழப்பீட்டு கட்டணம் ஏற்கனவே உள்ள மன்றத் தீர்மான எண்.1694/1996 நாள்.05.08.1996-ன்)-படி வருடம் ரூ.20,000/- என நிர்ணயம் செய்ததன் அடிப்படையில் மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை 15 சதவீதம் உயர்வு செய்து கீழ்கண்டவாறு கணக்கிடப்பட்டுள்ளது.

வ. எண்.	பொருள்	செலுத்த வேண்டிய தொகை ரூ.
1	குத்தகை தொகை 01.04.1980 முதல் 20.08.1998	1,77,562
2	பயன்பாட்டு இழப்பீட்டு கட்டணம் 21.08.1998 முதல் 31.03.2018	6,89,855
3	செலுத்த வேண்டிய மொத்த நிலுவை தொகை	8,67,417

4	சேவை வரி 01.06.2007 முதல் 31.03.2018 வரை	57,558
5	**மொத்தம்**	**9,24,975**
6	**இந்நாள் வரை செலுத்திய தொகை**	**4,53,370**
7	**செலுத்த வேண்டிய மொத்த நிலுவை தொகை**	**4,71,605**

செல்லம்மாள் கல்வி நிறுவனத்திற்கு இறுதியாக வழங்கப்பட்ட மன்றத்தீர்மான எண்.1694/1996 நாள்.05.08.1996-ன்படி வருடம் ரூ.20,000/- என நிர்ணயம் செய்ததன் அடிப்படையில் மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை 15 சதவீதம் உயர்வு செய்து கணக்கிடப்பட்டுள்ளது. அதன்படி செலுத்த வேண்டிய பயன்பாட்டு இழப்பீட்டு கட்டணம் **ரூ.4,71,605/-** தொகையினை செலுத்துமாறு செல்லம்மாள் கல்வி நிறுவனத்திற்கு கேட்பு கடிதம் அனுப்பப்பட்டது.

நிர்வாகி, செல்லம்மாள் கல்வி நிறுவனம் அவர்களின் 27.04.2018-ம் நாளிட்ட கடிதத்துடன் ரூ.4,71,605/-ற்கான காசோலை அளிக்கப்பட்டு பெருநகர சென்னை மாநகராட்சியின் கருவூலத்தில் செலுத்தப்பட்டது.

சிறப்பு அதிகாரி/மன்றத் தீர்மானம் எண்.671/2018, நாள்.20.08.2018-ல் பெருநகர சென்னை மாநகராட்சியால் முன்னர் குத்தகை அளிக்கப்பட்டு கல்வி பயன்பாட்டிற்கு பயன்படுத்தும் நிலங்களுக்கு அரசால் குத்தகை தொகையினை நிர்ணயிக்குமாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

மேலும், புதிய குத்தகை கொள்கையில் (New leasing Policy) பின்வரும் அட்டவணையில் உள்ளவாறு குத்தகை தொகையினை நிர்ணயிக்குமாறு ஆணையர் அவர்களின் 21.08.2018-ம் நாளிட்ட கடிதம் மூலம் தெரிவிக்கப்பட்டது.

வ. எண்.	பள்ளியின் வகைபாடு	பள்ளியின் வகைபாட்டிற்கு ஏற்றவாறு குத்தகை தொகை நிர்ணயம் செய்தல்
1.	பள்ளியின் மொத்த மாணவர்களில் 50% -ற்கு மேல் அரசு உதவி பெறும் மாணவர்களை கொண்ட பள்ளி	வழிகாட்டி மதிப்பில் 0.50 %
2.	பள்ளியின் மொத்த மாணவர்களில் 50% -ற்கு கீழ் அரசு உதவி பெறும் மாணவர்களை கொண்ட பள்ளி	வழிகாட்டி மதிப்பில் 1.50 %
3.	அதிக கட்டணம் வசூலிக்கும் தனியார் பள்ளி	வழிகாட்டி மதிப்பில் 3 %

ஆனால், மேற்படி விவரம் குறித்து இந்நாள்வரை அரசிடமிருந்து எவ்வித பதிலும் பெறப்படவில்லை.

இந்நிலையில், சென்னை உயர்நீதிமன்றத்தில் செல்லம்மாள் கல்வி நிறுவனத்தால் தொடரப்பட்ட C.R.P.No.326/2016 மற்றும் C.M.P. No.1735/2016 வழக்கிற்கு அளிக்கப்பட்ட 19.03.2019-ம் நாளிட்ட தீர்ப்பில் பின் வருமாறு தெரிவிக்கப்பட்டது.

"The premises in question is the building housing Educational School which is run by the petitioner society. Considering the fact that the same is an iconic landmark in the city of Madras, an opportunity is given to the petitioner to approach the Secretary, Department of Municipal Administration, Housing & Urban Development to consider the question of renewal of the lease in favour of the petitioner society, with a copy marked to the respondent/Commissioner, Corporation of Chennai. The Secretary is directed to consider the request and pass orders and till

such time the orders of the Estate Officer shall be kept in abeyance. It would be appreciated if the Secretary is able to dispose of the application within a period of two (2) months from the date of receipt of a copy of this order. Accordingly, Civil Revision Petition is disposed of in the above terms. No costs. Consequently, connected Miscellaneous Petition is closed."

இதனை தொடர்ந்து, செயலாளர், செல்லம்மாள் கல்வி நிறுவனம் அவர்களின் 07.06.2019-ம் நாளிட்ட கடிதத்தில் மேற்படி பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தில் 1980-ம் ஆண்டு முதல் மேற்படி கல்வி நிறுவனம் எட்டாம் வகுப்பு வரை பள்ளிக்கூடம் நடத்தி வருவதாகவும், மேற்படி நிலத்திற்கான குத்தகையினை புதுப்பித்து தருமாறு கோரப்பட்டுள்ளது.

மேலும், அரசு முதன்மை செயலர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அவர்களின் 07.06.2019-ம் நாளிட்ட கடிதத்தில் உயர்நீதிமன்றத்தில் உத்தரவிடப்பட்ட ஆணை நகல் அளிக்கப்பட்டு அரசிற்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு கோரப்பட்டது.

இணை ஆணையர்/வமநி மற்றும் சொத்து அலுவலர் அவர்களின் ஆணையின்படி 12.07.2019 அன்று காலை 11.00 மணிக்கு செல்லம்மாள் கல்வி நிறுவனத்திற்கு குத்தகை புதுப்பித்தல் மற்றும் குத்தகை தொகை நிர்ணயம் செய்வது தொடர்பாக விசாரணை செய்யும் பொருட்டு மேற்கண்ட நிறுவனத்திடம் உள்ள ஒதுக்கீடு ஆவணங்கள், குத்தகை தொகை செலுத்திய இரசீதுகள், பள்ளியில் பயிலும் மாணவர்களின் விவரம், அவர்களிடம் வசூலிக்கப்படும் கட்டண விவரம் மற்றும் ஏனைய ஆவணங்களுடன் விசாரணைக்கு ஆஜராகுமாறு செயலாளர், செல்லம்மாள் கல்வி நிறுவனம் அவர்களுக்கு இவ்வலுவலக 04.07.2019ம் நாளிட்ட கடிதம் அனுப்பப்பட்டது.

இதனை தொடர்ந்து, செல்லம்மாள் கல்வி நிறுவனம், நிர்வாக அலுவலர் அவர்கள் 12.07.2019 அன்று காலை 11.00 மணிக்கு இணை ஆணையர்/வமநி மற்றும் சொத்து அலுவலர் அவர்களின் முன்னிலையில் விசாரணைக்கு ஆஜராகி அளித்த வாக்குமூலத்தில் சுமார் 2093 சதுரடி பரப்பளவுள்ள பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தினை 1980-ம் ஆண்டு சென்னை மாநகராட்சியால் குத்தகை அடிப்படையில் செல்லம்மாள் கல்வி நிறுவனத்திற்கு அளிக்கப்பட்டுள்ளதாகவும், மேற்படி இடத்தில் செல்லம்மாள் கல்வி நிறுவனத்தின் மூலம் ஏழை வகுப்பு பிரிவினரை சார்ந்த குழந்தைகள் கல்வி கற்பதற்கு L.K.G முதல் 5ம் வகுப்பு வரை மிக குறைந்த கல்வி கட்டணம் வசூலிக்கப்பட்டு சமச்சீர் கல்வி கற்பிக்கப்பட்டு வருகிறது எனவும், செல்லம்மாள் கல்வி நிறுவனம் சமூக மேம்பாட்டிற்காக அனைத்து முயற்சிகள் மேற்கொண்டு மாணவர்களுக்கு தரமான கல்வி, குறைந்த கல்வி கட்டணம் மற்றும் மேம்படுத்தப்பட்ட கட்டுமான அமைப்பு அளித்து வருகிறது என செல்லம்மாள் கல்வி நிறுவனம், நிர்வாக அலுவலர் அவர்களால் தெரிவிக்கப்பட்டது.

மேலும், செல்லம்மாள் கல்வி நிறுவனத்தின் 2018 – 19ம் ஆண்டிற்கான மாணவ / மாணவியர்களின் சேர்க்கை எண்ணிக்கை 258 எனவும், மொத்த கல்வி கட்டணமாக வசூலிக்கப்பட்ட தொகை ரூபாய்.34,59,600/- எனக் குறிப்பிடப்பட்டு, 2019 – 20ம் ஆண்டிற்கான மாணவ / மாணவியர்களின் சேர்க்கை எண்ணிக்கை 243 எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், செல்லம்மாள் கல்வி நிறுவனத்தின் குத்தகையை நீட்டிப்பு செய்து, குத்தகை தொகையை குறைந்த அளவில் நிர்ணயித்து மறு பரிசீலனை செய்யுமாறு செல்லம்மாள் கல்வி நிறுவனத்தால் கேட்டுக் கொள்ளப்பட்டது.

நி.ம.உ.து.ந.க.எண்.எல்இ4/2671/1994

இந்நிகழ்கவில், செல்லம்மாள் கல்வி நிறுவனத்திற்கு கீழ்கண்ட நிபந்தனைகளின் அடிப்படையில் குத்தகை அளிக்கலாம்:

1. மூன்றாண்டுகளுக்கு ஒரு முறை குத்தகை தொகையினை 15% உயர்த்தி மறு நிர்ணயம் செய்வதற்கும்
2. குத்தகை தொகை செலுத்துவதில் நிலுவை இருப்பின் உரிய முறையின்படி குத்தகையினை ரத்து செய்வதற்கும்
3. குத்தகை நிலத்தினை ஆண்டுதோறும் புலத்தணிக்கை மேற்கொள்ளும் பொழுது கல்வி பயன்பாடு இன்றி வேறு ஏதேனும் பயன்பாட்டிற்கு பயன்படுத்தினால் ஆணையர் அவர்களுக்கு தெரிவிக்குமாறும்
4. மேற்படி இடத்தினை வேறு ஏதேனும் பயன்பாட்டிற்கு பயன்படுத்தினால் குத்தகையினை ரத்து செய்து, அனுமதியற்ற அனுபோகதாரராக கருதப்பட்டு, சந்தை விலையில் 14% தொகையினை பயன்பாட்டு இழப்பீட்டு தொகையாக நிர்ணயிப்பதற்கும்,
5. சொத்து அலுவலர், பெருநகர சென்னை மாநகராட்சி அவர்களிடமிருந்து அனுமதி பெறாமல் மேற்படி இடத்தில் குத்தகைதாரர் எவ்வித கட்டிடமும் கட்ட கூடாது என்றும்,
6. குத்தகைதாரர் மேற்படி இடத்தினை கல்வி பயன்பாட்டினை தவிர வேறு எந்த பயன்பாட்டிலோ அல்லது வெளிநபருக்கு உள்வாடகையோ அளிக்கக்கூடாது என்றும்,
7. குத்தகைதாரர் குத்தகை தொகையினை எவ்வித நிலுவையுமின்றி செலுத்தும் பட்சத்தில் குத்தகையினை புதுப்பிக்க இயலும் என்றும்,
8. குத்தகைதாரர் மேற்கண்ட நிபந்தனைகளை பின்பற்ற வேண்டும்.

இந்நிலையில் மேற்கண்ட கல்வி நிறுவனம் தனியார் பள்ளி வகைப்பாட்டின் கீழ் வருவதால் கல்வி நிறுவனத்திற்கு குத்தகை வாடகை தொகையாக வழிக்காட்டி மதிப்பிலிருந்து 3.0% சதவீதத்தினை மாத குத்தகை தொகையாக நிர்ணயம் செய்து பின்வருமாறு கணக்கிடப்பட்டுள்ளது.

காலம்	வழிகாட்டி மதிப்பின் படி ஒரு சதுரடிக்கு ரூ.	மாத குத்தகைத் தொகை ரூ.	மாதம்	செலுத்த வேண்டிய தொகை ரூ.	சேவை வரி ரூ.
01.04.2018 முதல் 30.06.2019 வரை (GST - 18.00%)	4,690	24,540	15	3,68,100	66,258
இதுவரை செலுத்தியுள்ள தொகை				0	0
செலுத்த வேண்டிய மொத்தத் தொகை				4,34,358/-	

எனவே, செல்லம்மாள் கல்வி நிறுவனம் பழைய கணக்கீட்டின்படி 31.03.2018 வரை செலுத்த வேண்டிய கேட்பு நிலுவை தொகை ரூ.4,71,605/- செலுத்தியுள்ள காரணத்தினாலும், மன்றத் தீர்மானத்தின் அடிப்படையில் வழங்கப்பட்ட குத்தகை காலம் 20.08.1998 அன்றோடு முடிவுற்றதாலும், மேற்படி நிலத்திற்கான 21.08.1998 முதல் 31.03.2018 வரையிலான காலத்திற்கு குத்தகை வரன்முறை செய்வதற்கும், மற்றும்

நி.ம.உ.து.ந.க.எண்.எல்இ4/2671/1994

பெருநகர சென்னை மாநகராட்சி மன்ற தீர்மானங்களின்படி தொடர்ந்து மூன்று வருடங்களுக்கு மட்டுமே குத்தகை நீட்டிப்பு செய்ய இயலும் என்பதால் செல்லம்மாள் கல்வி நிறுவனத்திற்கு 01.04.2018 முதல் மூன்று வருட காலத்திற்கு குத்தகை நீட்டிப்பு செய்வதற்கு சிறப்பு அதிகாரி- நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 22.07.2019 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

"குத்தகை நீட்டிப்பு செய்ய சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".

*****

பொ.து.ந.க.எண்.இ9/18164/2019

தீர்மான எண். 408/2019 **நாள்:25-07-2019**

பணியமைப்பு - பெருநகர சென்னை மாநகராட்சி - பொதுத்துறை - நான்காம் நிலைப் பணியாளர் திரு.எம்.கோதண்டன், துப்புரவு பணியாளர், பணி எண்.736173 கோட்டம்-55, பகுதி-13, மண்டலம்-5 அவர்கள் 03.08.2019 அன்று பிற்பகல் முதல் தன்விருப்ப ஓய்வில் செல்ல அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-5, பகுதி-13, கோட்டம்-55ல் துப்புரவு பணியாளராக பணிபுரிந்து வரும் திரு.எம்.கோதண்டன், பணியாளர் எண்.736173 அவர்கள் குடும்ப சூழ்நிலை மற்றும் கடன் தொல்லையாலும், உடல்நிலை சரியில்லாத காரணத்தால், தனது பணியினை சரிவர செய்ய இயலாத காரணத்தால், தன் விருப்ப ஓய்வில் செல்வதற்கு அனுமதிக்குமாறு சிறப்பு அதிகாரி/மன்றம் அவர்களுக்கு 06.05.2019 அன்று மனு அளித்துள்ளார்.

தனியரின் பணிப்பதிவேட்டின்படி, திரு.எம்.கோதண்டன், துப்புரவு பணியாளர் அவர்கள் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, (மாந.3.) அரசாணை எண்.158, நாள்.19.06.1997-ன்படியும், சென்னை மாநகராட்சி ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணையின்படியும், 05.01.1998 அன்று முதல் நிரந்தர துப்புரவு பணியாளராக பழைய மண்டலம்-2ல் பணியமர்த்தப்பட்டு, தற்போது மண்டலம்-5ல் பணிபுரிந்து வரும் தனியருக்கு அப்பதவியில் பணிவரன்முறை மற்றும் தகுதிகாண் பருவம் வழங்கப்பட்டும், தனியருக்கு தேர்வு நிலை மற்றும் சிறப்பு நிலை ஊதியம் வழங்கப்பட்டும், தனியர் மீது ஒழுங்கு நடவடிக்கை ஏதும் இல்லை என தெரிய வருகிறது.

சென்னை மாநகராட்சி சிந்தாதிரிப்பேட்டை, தொழிலாளர் கூட்டுறவு சங்கம் லிட். அவர்களின் 23.04.2019 நாளிட்ட கடிதத்தில் தனியருக்கு நிலுவைத் தொகையாக ரூ.3,14,800/- (ரூபாய் மூன்று லட்சத்து பதினான்காயிரத்து எண்ணூறு மட்டும்) செலுத்தப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சி காவல்துறை துணை கண்காணிப்பாளர்/ விழிப்பு அலுவலர், விழிப்பு குழுமம் அவர்களின் 18.06.2019 நாளிட்ட கடிதத்தில் தனியரின் மீது விசாரணை ஏதும் இன்றைய தேதியில் நிலுவையில் இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் தொடர்பாக தனியரின் பணிப்பதிவேட்டின்படி திரு.எம்.கோதண்டன், துப்புரவு பணியாளர், அவர்களின் பிறந்த தேதி 02.08.1962 என்பதால், தனியர் ஓய்வு பெறும் நாள் 31.08.2022 ஆகும். மேலும் தனியரின் வயது 55 வயது பூர்த்தி அடைந்து 21 ஆண்டுகள் பணி நிறைவு செய்துள்ளார்.

வட்டார துணை ஆணையர் (வடக்கு) அவர்களின் 01.07.2019 நாளிட்ட கடிதத்தின்படி, திரு.எம்.கோதண்டன், துப்புரவு பணியாளர், பணி எண்.736173 கோட்டம்-55, பகுதி-13, மண்டலம்-5 அவர்களின் 06.05.2019 நாளிட்ட தன்விருப்ப ஓய்வு கோரிய மனுவினை ஏற்கப்பட்டு, சென்னை மாநகராட்சி சிந்தாதிரிப்பேட்டை தொழிலாளர் கூட்டுறவு சங்கத்திற்கு செலுத்த வேண்டிய நிலுவை தொகை ரூ.3,14,800/- (ரூபாய் மூன்று லட்சத்து பதினான்காயிரத்து எண்ணூறு மட்டும்) மற்றும் உள்ளாட்சி நிதி தணிக்கைத்துறை அவர்களால் தெரிவிக்கப்படும் நிதி இழப்பீடு, தணிக்கை தடை மற்றும் நீண்டகால முன்பணம் நிலுவை ஏதேனும் இருப்பது பின்னர் தெரியவரின், தனியரின் ஓய்வூதிய பணிக்கொடையிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைக்குட்பட்டு, திரு.எம்.கோதண்டன், துப்புரவு பணியாளர் அவர்களை 03.08.2019 அன்று பிற்பகல் முதல் தன்விருப்ப ஓய்வில் செல்வதற்கு அனுமதிக்க, சிறப்பு அதிகாரி-மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 24.07.2019 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

"தன்விருப்ப ஓய்வில் செல்ல சிறப்பு அதிகாரி -மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".

*****

பொ.து.ந.க.எண்.இ9/017907/2019

தீர்மான எண். 409/2019 **நாள்:25-07-2019**

பணியமைப்பு - பெருநகர சென்னை மாநகராட்சி - பொதுத்துறை - நான்காம் நிலைப் பணியாளர் திருமதி.ஆர்.குப்பம்மாள், துப்புரவு பணியாளர், பணி எண்.704269, கோட்டம்-54, பகுதி-13, மண்டலம்-5 அவர்கள் 05.08.2019 அன்று பிற்பகல் முதல் தன்விருப்ப ஓய்வில் செல்ல அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-5, பகுதி-13, கோட்டம்-54ல் துப்புரவு பணியாளராக பணிபுரிந்து வரும் திருமதி.ஆர்.குப்பம்மாள், பணியாளர் எண்.704269 அவர்கள் பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-5 பகுதி-13, கோட்டம்-54ல் துப்புரவு பணியாளராக 18.06.1992 முதல் பணிபுரிந்து வரும் தனக்கு குடும்ப சூழ்நிலை, கடன் பிரச்சனை, மன உளைச்சல் மற்றும் உடல்நலம் பாதிப்பு ஏற்பட்டதால், தன் பணியை சரிவர செய்ய இயலாத நிலையில், தன் விருப்ப ஓய்வில் செல்வதற்கு அனுமதிக்குமாறு சிறப்பு அதிகாரி/மன்றம் அவர்களுக்கு 08.05.2019 அன்று மனு அளித்துள்ளார்.

மேற்காணும் தனியரின் பணிப்பதிவேட்டின்படி, திருமதி.ஆர்.குப்பம்மாள், துப்புரவு பணியாளர் அவர்களுக்கு அப்பதவியில் பணிவரன்முறை மற்றும் தகுதிகாண் பருவம் வழங்கப்பட்டும், தனியருக்கு தேர்வு நிலை மற்றும் சிறப்பு நிலை ஊதியம் வழங்கப்பட்டுள்ளது. மேலும், தனியர் மீது துறை ரீதியாக குற்றச்சாட்டுகள் நிலுவையில் இல்லை என தெரிய வருகிறது.

சென்னை மாநகராட்சி சிந்தாதிரிப்பேட்டை, தொழிலாளர் கூட்டுறவு சங்கம் லிட். அவர்களின் 06.06.2019 நாளிட்ட கடிதத்தில் தனியர் இச்சங்கத்தில் உறுப்பினராக இருந்து நிலுவை தொகை ரூ.4,07,610/- (நான்கு இலட்சத்து ஏழாயிரத்து அறுநூற்று பத்து மட்டும்) செலுத்தப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சி, காவல்துறை துணை கண்காணிப்பாளர்/ விழிப்பு அலுவலர், விழிப்பு குழுமம் அவர்களின் 18.06.2019 நாளிட்ட கடிதத்தில் தனியரின் மீது விசாரணை ஏதும் இன்றைய தேதியில் நிலுவையில் இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

வட்டார துணை ஆணையர் (வடக்கு) அவர்களின் 28.06.2019 நாளிட்ட கடிதத்தில், திருமதி.ஆர்.குப்பம்மாள், துப்புரவு பணியாளர் அவர்கள் மீது தன்விருப்ப ஓய்வில் செல்வதற்கு மண்டல அலுவலர், மண்டலம்-5 அவர்களால் 24.06.2019 நாளிட்ட கடிதத்தில் தனியரை 05.08.2019 அன்று பிற்பகல் முதல் தன்விருப்ப ஓய்வில் செல்வதற்கு அனுமதி கோரிய கடிதத்தின் மீது, ஆணையர் அவர்களின் அனுமதி வேண்டி கோப்பு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இதன் தொடர்பாக தனியரின் பணிப்பதிவேட்டின்படி திருமதி.ஆர்.குப்பம்மாள், துப்புரவு பணியாளர், அவர்களின் பிறந்த தேதி 01.07.1965 என்பதால், தனியர் ஓய்வு பெறும் நாள்.30.06.2025 ஆகும். மேலும், தனியரின் வயது 54 வயது பூர்த்தி அடைந்து 27 ஆண்டுகள் பணி நிறைவு செய்துள்ளார்.

மேற்காணும், வட்டார துணை ஆணையர் (வடக்கு) அவர்களின் கடிதத்தின்படி, திருமதி.ஆர்.குப்பம்மாள், துப்புரவு பணியாளர் (பணி எண்.704269) கோட்டம்-54, பகுதி-13, மண்டலம்-5 அவர்களின் 08.05.2019 நாளிட்ட தன்விருப்ப ஓய்வு கோரிய மனுவினை ஏற்கப்பட்டு, சென்னை மாநகராட்சி சிந்தாதிரிப்பேட்டை, தொழிலாளர் கூட்டுறவு சங்கம் லிட். அவர்களுக்கு செலுத்தப்பட வேண்டிய நிலுவை தொகை ரூ.4,07,610/- (நான்கு இலட்சத்து ஏழாயிரத்து அறுநூற்று பத்து மட்டும்) மற்றும் நிதி இழப்பீடு, தணிக்கை தடை மற்றும் நீண்டகால முன்பணம் நிலுவை ஏதேனும் இருப்பது பின்னர் தெரியவரின், தனியரின் ஓய்வூதிய

பொ.து.ந.க.எண்.இ9/017907/2019

பணிக்கொடையிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைக்குட்பட்டு, திருமதி.ஆர்.குப்பம்மாள், துப்புரவு பணியாளர், அவர்களை 05.08.2019 அன்று பிற்பகல் முதல் தன்விருப்ப ஓய்வில் செல்வதற்கு அனுமதிக்க, சிறப்பு அதிகாரி-மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 24.07.2019 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

"தன்விருப்ப ஓய்வில் செல்ல சிறப்பு அதிகாரி -மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".

*****

க.து.ந.க.எண்.பி1/922/2019

தீர்மான எண்.410/2019 **நாள்:25-07-2019**

கட்டடத் துறை - மதிப்பீடு 2018- 2019 - மண்டலம்-15, வார்டு-196, ஈஞ்சம்பாக்கம், நகர்புற சுகாதார மருத்துவமனையில் (100 Beds) ஒரு வருட காலத்திற்கு பராமரிப்பு மற்றும் Fire Protection Systems அமைக்கும் பணிக்காக ரூ.62,00,000/-க்கு 2018-19 ஆம் ஆண்டின் விலைப்பட்டியலின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ள திட்ட மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி

1	பணியின் பெயர்	மண்டலம்-15, வார்டு-196, ஈஞ்சம்பாக்கம், நகர்புற சுகாதார மருத்துவமனையில் (100 Beds) ஒரு வருட காலத்திற்கு பராமரிப்பு மற்றும் Fire Protection Systems அமைக்கும் பணி.
2	பரிந்துரை செய்தவரின் விவரம்	துணை ஆணையர் (சுகாதாரம்)
3	எந்த துறைக்காக இந்த பணி செயலாக்கம்	சுகாதாரத்துறை
4	மதிப்பீடு எந்த வருடத்தின் விலைப் பட்டியலை முன் வைத்து தயாரிக்கப்பட்டது	2018-2019 ஆம் ஆண்டின் விலை விவரப்படி
5	மதிப்பீட்டின் தொகை	ரூ. 62,00,000.00
	(அ) பணி செலவு	ரூ 52,07,460.80
	(ஆ) எதிர்பாரா செலவு	ரூ. 55,196.26
	(இ) சரக்கு மற்றும் சேவை வரி 18%	ரூ 1,27,227.76
	(ஈ) GST 12%	ரூ 9,37,342.94
	மொத்தம்	ரூ. **62,00,000.00**
6	வரைபடம் வைக்கப்பட்டுள்ளதா	ஆம்
7	ஏற்கனவே எப்போது செய்யப்பட்டது	புதிய பணி
8	நிதியின் தன்மை / ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிதி / கணக்கு குறியீட்டு எண்.	அரசு மான்யம் (NUHM)
9	இக்கோப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பணிக்கு தேவைப்படும் நிதி	ரூ. 62,00,000.00

மண்டலம்-15, வார்டு-196, ஈஞ்சம்பாக்கம், நகர்புற சுகாதார மருத்துவமனையில் (100 Beds) ஒரு வருட காலத்திற்கு பராமரிப்பு மற்றும் Fire Protection Systems அமைக்கும் பணிக்காக ரூ. 62,00,000/-க்கு (ரூபாய் அறுபத்து இரண்டு இலட்சம் மட்டும்) 2018-2019 ஆம் ஆண்டின் விலையின்படி தயாரிக்கப்பட்டுள்ள திட்ட மதிப்பீட்டிற்கு சிறப்பு அதிகாரி-நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(பணிகள்), நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் நிர்வாக அனுமதி கோரிய ஆணையரது 22.07.2019 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

"திட்ட மதிப்பீட்டிற்கு சிறப்பு அதிகாரி-நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(பணிகள்), நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டது".

*****

இ.பொ.து.ந.க.எண். எம்1/1018/2019

தீர்மான எண்.411/2019 **நாள்:25-07-2019**

இயந்திரப் பொறியியல் துறை - மண்டலம்-1 முதல் 15 வரை உள்ள லாரி நிலையங்கள் - 34 எண்ணிக்கையிலான சிறிய வகை லோடர்கள்(Skid Steer Loaders) இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்புப் பணி - ஒப்பந்தக் காலம் 09.08.2019 அன்று முடிவடைய உள்ளதால் ஒரு ஆண்டிற்கு இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணி மேற்கொள்ள ஒப்பம் கோருவதற்கு நிர்வாக அனுமதி

பெருநகர சென்னை மாநகராட்சியின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் அன்றாடம் சேகரிக்கப்படுகின்ற கட்டிட இடிபாடுகளை உடனுக்குடன் அகற்றிட 71 எண்ணிக்கையிலான சிறிய வகை லோடர்கள் (Skid Steer Loader) பயன்படுத்தப்பட்டு வருகிறது. இவ்வகை உபகரணங்கள் சிறப்பு வகை உபகரணம் என்பதால் இவற்றில் 69 எண்ணிக்கையிலான உபகரணங்கள் இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணி ஒப்பந்ததாரர் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மீதமுள்ள 2 எண்ணிக்கையிலான உபகரணங்களுக்கான பராமரிப்பு பணி பெருநகர சென்னை மாநகராட்சி மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

கடந்த 2008 ஆம் ஆண்டு முதல் பெருநகர சென்னை மாநகராட்சியில் சிறப்பு உபகரணங்கள் பொருத்தப்பட்ட வாகனங்கள் மற்றும் இயந்திரங்கள் கொள்முதல் செய்யும் பொழுது குறிப்பிட்ட காலத்திற்கு இயக்குதல் மற்றும் பராமரிப்புடனே கொள்முதல் செய்யப்பட்டு வரப்படுகிறது.

தற்போது, ஒப்பந்ததாரர் மூலம் இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணி மேற்கொள்ளப்பட்டு வரும் 69 எண்ணிக்கையிலான சிறிய வகை லோடர்களில் 34 எண்ணிக்கையிலான உபகரணங்களில் இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பிற்கான ஒப்பந்தக்காலம் 09.08.2019 அன்றுடன் முடிவடைய உள்ளது. இவ்வுபகரணங்கள் ஹைட்ராலிக் பொருத்தப்பட்ட சிறப்பு திறன் கொண்ட உபகரணங்கள் ஆகும். இவ்வுபகரணங்களை பராமரிக்க ஹைட்ராலிக் உபகரணங்கள் பற்றிய தொழில் திறன் கொண்ட பழுதாளர்கள் போதுமானதாக இல்லாத காரணத்தினாலும் மற்றும் இவ்வுபகரணத்தினை இயக்குவதற்கு போதுமானதாக ஓட்டுநர்கள் இல்லாத காரணத்தினாலும், கட்டிட இடிபாடுகளை அகற்றுவதில் ஏற்படும் தாமதங்களை தவிர்க்கும் பொருட்டும், இவ்வுபகரணங்களுக்கான இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணியினை மீண்டும் ஒரு வருட காலத்திற்கு தகுதி வாய்ந்த நிறுவனங்கள் மூலம் மேற்கொள்ள ஒப்பங்கள் கோரி தீர்வு செய்யலாம் என கருத்து தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மேலே தெரிவிக்கப்பட்ட34 எண்ணிக்கையிலான சிறிய வகை லோடர்களின் (Skid Steer Loader) பதிவு எண்கள் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணிக்கென வழங்கப்படும் விலைப்புள்ளி விவரம் பின்வருமாறு:

வ. எண்	உபகரண எண்	இயக்கப்படும் மண்டலம்	புதியதாக கொள்முதல் செய்யப்பட்ட ஆண்டு	தற்பொழுது இயக்குதல் மற்றும் பராமரிப்புப் பணிக்கென வழங்கப்பட்டு வரப்படும் தொகை(GST நீங்கலாக)	
				இயக்குதல்	**பராமரித்தல்**
1.	TN 22 CF 6943	மண்டலம்-1	2013	ஒரு உபகரணத்திற்கு ஒரு ஷிப்டிற்கு ரூ.1170/-	ஒரு உபகரணத்திற்கு ஒரு நாளைக்கு ரூ.3125/-
2.	TN 22 CF 6982				
3.	TN 22 CF 7014	மண்டலம்-2			
4.	TN 22 CF 7018				
5.	TN 22 CF 7030	மண்டலம்-3			
6.	TN 22 CF 7031				
7.	TN 22 CF 7032				
8.	TN 22 CF 7040	மண்டலம்-4			
9.	TN 04 AD 3647		2009		
10.	TN 04 AD 0221		2010		
11.	TN 22 CF 7004	மண்டலம்-5	2013		
12.	TN 22 CF 7079	மண்டலம்-6			
13.	TN 22 CF 7090	மண்டலம்-7			
14.	TN 22 CF 7097				
15.	TN 22 CF 7126				
16.	TN 22 CF 7053	மண்டலம்.8			
17.	TN 04 AC 9218		2010		

18.	TN 04 AD 1580	மண்டலம்-9	2010		
19.	TN 04 AD 0187				
20.	TN 22 CF 7087	மண்டலம்-10	2013		
21.	TN 04 AD 1586		2010		
22.	TN 04 AD 3677				
23.	TN 22 CF 7092	மண்டலம்-11	2013		
24.	TN 22 CF 7066				
25.	TN 22 CF 6976				
26.	TN 22 CF 6970	மண்டலம்-12			
27.	TN 22 CF 6949				
28.	TN 22 CF 6941	மண்டலம்-13			
29.	TN 22 CF 7132				
30.	TN 22 CF 7058	மண்டலம்-14			
31.	TN 22 CF 7049				
32.	TN 22 CF 7009				
33.	TN 22 CF 7041	மண்டலம்-15			
34.	TN 22 CF 7095				

தற்பொழுது நடைமுறையில் உள்ள மேற்கண்ட விலைக்கே, மேற்படி 34 எண்ணிக்கையிலான சிறிய வகை லோடர்களுக்கு ஒரு வருட காலத்திற்கு இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணி மேற்கொள்ள ஆகும் செலவீனம் தோராயமாக ரூ.5,33,00,950/- (ரூபாய் ஐந்து கோடியே முப்பத்தி மூன்று இலட்சத்து தொள்ளாயிரத்து ஐம்பது மட்டும்) ஆகும் என கணக்கிடப்பட்டுள்ளது.

இதற்கான செலவீனத்தினை 2019-2020 மற்றும் 2020-2021ஆம் நிதி ஆண்டிற்கென, ஆய்வு வாகனப் பணிமனை பிரிவு குறியீட்டு எண் 40-41-10 மற்றும் கணக்கு குறியீட்டு எண் 230-80-03-00ன் கீழ் கூடுதல் நிதி ஒதுக்கீடு பெற்று மேற்கொள்ளலாம்.

எனவே,

1. மண்டலம் 1 முதல் 15 வரையுள்ள லாரி நிலையங்களில் இயக்கப்படும் மேற்கண்ட 34 எண்ணிக்கையிலான சிறிய வகை லோடர் (Skid Steer Loader) உபகரணங்களுக்கான இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணியினை ஒரு வருட காலத்திற்கு தோராய மதிப்பீடான ரூ.5,33,00,950/ (ரூபாய் ஐந்து கோடியே முப்பத்தி மூன்று இலட்சத்து தொள்ளாயிரத்து ஐம்பது மட்டும்) செலவீனத்தில் ஒப்பம் கோரி மேற்கொள்ள நிர்வாக அனுமதி வேண்டியும்,
2. இதற்கான செலவீனத்தினை 2019-2020 மற்றும் 2020-2021ஆம் நிதி ஆண்டிற்கென, ஆய்வுவாகனப் பணிமனை பிரிவு குறியீட்டு எண் 40-41-10 மற்றும் கணக்கு குறியீட்டு எண் 230-80-03-00 ன் கீழ் கூடுதல் நிதி ஒதுக்கீடு பெற்று மேற்கொள்ளவும்,

மேற்கண்ட 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு சிறப்பு அதிகாரி- நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 25.07.2019 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

"மேற்கண்ட 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு சிறப்பு அதிகாரி- நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".

// உண்மை சுருக்கம் //

மன்றச்செயலாளர்

கோப்பு: இயந்திரப்பொறியியல் துறை.

நகல்: நி.ஆ., த.பி & மு.க(த.1) அ., செ-18.

சிறப்பு அதிகாரி அலுவலகம்.

S.P.D.C.No.B1/478/2019

Resolution No.412/2019 **Date:25 -07-2019**

Special Project Department – Institute of Transportation and Development Policy (ITDP) India - Supports Greater Chennai Corporation for Chennai's Sustainable Urban Mobility initiatives – MoU to be executed – For approval.

Senior Programme Manager, ITDP, letter dated.09/04/2019, Institute of Transportation and Development Policy (ITDP) has offered to act as a hand holding agency for is successful implementation of all Chennai's Sustainable Urban Mobility initiative. Further, ITDP has offered to support the Greater Chennai Corporation and its consultants for the planning and implement on sustainable mobility programme in Chennai.

These initiatives include

- Preparation of the Non Motorised Transport (NMT) Masterplan for Chennai,
- Implementation of complete streets across the city as per GCC's NMT policy
- Special Projects such as spaces under flyovers and above subways, streets integrated with parks and reclaimed lands, etc.,
- Greenways network around water bodies and other ecological hotpots
- Improving safety on streets that connect to institutions like anganwadis, schools, religious places, etc.
- Intersection redevelopments to ensure integrated street designs
- Creating a parking policy and management frame work and implementing a pan-city parking management system
- Developing and implementing a cycle sharing system
- Establishing a monitoring and evaluation system for complete streets, cycle sharing system as well as the parking management system.

The institute for Transportation and Development Policy is a global non profit providing technical expertise to accelerate the growth of sustainable transport and urban development around the world. The Urban Works Institute, an Indian public charitable trust, is its network partner in India. As ITDP has offered on pro – bono basis, to act as a hand holding agency for is successful implementation of all Chennai's Sustainable Urban Mobility initiative, a MoU can be executed between Greater Chennai Corporation and ITDP.

Hence, a draft MoU is prepared and putup herewith, orders of the Special Officer–Standing Committee (Works), Standing Committee (Taxation and Finance) and Council are requested. Commissioner's note dated 25.07.2019 is read.

"Approved by Special Officer-Standing Committee (Works), Standing Committee (Taxation and Finance) and Council."

*****

B.R.R.C.NO.B1/2368/2017

Resolution No.413/2019 **Date:26-07-2019**

Bus Route Roads Department – Widening of Kaliamman Koil Street – Chennai District- Aminjikarai Taluk - Koyambedu and Sencheri Villages – For Administrative Sanction.

Greater Chennai Corporation have initiated action for widening of 14 Bus Route Roads through Council Resolution No.461/2014, Dated. 28.08.2014. Sardar Patel Road, Nelson Manickam Road, Kaliamman Koil Street and N.S.K. Salai are considered in the first phase as per the resolution.

Among the 14 roads, Government have passed orders to Greater Chennai Corporation with an enter upon permission into the Government lands in the following roads vide G.O.MS.No.22 MA&WS Dept, Dated.06.02. 2015.

1.Sardar Patel Road
2.Kaliamman Koil Street
3. Stranhans Road

Kaliamman Koil Street is a vital link Road connecting Jawaharlal Nehru Salai and N.S.K. Salai which is narrow and huge volume of traffic and lakhs of people travel using this road since it cut short the travel distance to reach the above two roads rather than going through other roads which are far away. Further this road serves as main access to the Koyambedu Bus Terminus, Koyambedu wholesale market and CMRL depot, wherein thousands of vehicle passing every hour causing heavy traffic congestion at all the time. Considering the day to day traffic congestion being met by common public, the Government have accepted in principle and accorded approval to widen the Kaliamman Koil Street from the existing width of 9.6m average to the proposed width 24/27m (average) as envisaged in the Second Master Plan by issuing TDR to acquire the Private land owners vide G.O.MS.No.349 MA&WS Dept, Dated.01.09.2017.

In pursuance to the Government orders Corporation of Chennai initiated action to get enter upon permission in to Government land and identified 245 private land owners abutting Kaliamman Koil Street to gift the portion of land falls in the street alignment portion for widening of Kaliamman Koil Street as per Second Master Plan and the land owners on surrendering of land for widening portion, necessary Development Rights certificate (DRC) will be issued by CMDA as per the provisions in G.O.349, dated.01.09.2017. The Private land Owners have formed an association and opposing the TDR concept, stating that the time is not ripe for marketing such TDR to other parties due to sluggishness in the Real Estate Market facing now. Further in most of the cases more that 50% to 75% area of the property are required for widening proposal and with the remaining piece of land the TDR cannot be beneficial for their own purpose. Hence the private land owners requested to provide monetary compensation for their lands which are to be acquired / gifted for street alignment.

In view of the above to sort out the difficulties faced in the above process a meeting was held on 04.04.2018 with the Principal Secretary, MA&WS Dept., the Principal Secretary, Housing & Urban Development, Member Secretary, CMDA, Managing Director, TNHB and the Commissioner, GCC.

During the meeting, the Commissioner, GCC has suggested that, considering the importance and necessity of this vital link road to be widened as per Second Master Plan and also taking in to account, the objections raised by the residents of Kaliamman Koil Street (so far 88 objection petitions received) against the TDR concept, the G.O.MS.No.349 MA&WS Dept, Dated.01.09.2017 already issued may be modified to take over the required land for road widening through land acquisition by awarding suitable compensation as per the provisions of LARR Act 2013. The officials present in the meeting have accepted the proposal / suggestion of the Commissioner and instructed to proceed accordingly.

The existing width is not sufficient to cater to the present traffic needs. As the proposed acquisition is more essential to tackle the alarming increase in traffic density and to speed up the land acquisition process, the land for required for road expansion may be acquired**.**

Kaliamman Koil Street is 3.1 km long road connecting Jawaharlal Nehru Road on northern side and N.S.K. Salai on Southern side. In order to facilitate the widening proposal Kaliamman Koil Street, the road is divided in to 3 stretches.

1.Stretch 1 - Jawaharlal Nehru Salai to Natesan Nagar 2nd Street.
2.Stretch 2 – Natesan Nagar 2nd Street to Reddy Street.
3.Stretch 3 – Reddy Street to N.S.K. Salai.

The Stretch 1 involves two revenue villages namely Koyambedu and Sencheri and Stretch 2 & 3 involves Virugambakkam Village.

The consultant has finalized the alignment and have identified the lands for the widening area.

For implementing the entire Kaliamman Koil Road widening, the total requirement of the land in Chennai District are furnished below.

Name of the Taluk	Name of the Village	Total Extent (Sq.mtrs)	Government	Private
Aminjikarai	Koyambedu	9376.52	6907.00	2469.52
Aminjikarai	Senchery	4460.92	77.21	4383.71
Mambalam	Virugambakkam	14984.01	1944.86	13039.15
	Total	28821.45	8929.07	19892.38

The Guide line value as per records in the website of Registration Department as on 09.06.2017,for the lands to be acquired have been gathered. Based on this, the tentative land value is worked out and furnished for the lands to be acquired for an extent of 19892.38 sq.mtr.as below.

The extent given above is tentative one. Hence, the exact extent of land will be arrived at the time of sending of LPS to the Land Acquisition officer who will prepare sub division records and arrive the exact extent to be acquired.

[Guide Line Value as on date (w.e.f. 09.06.2017)]

Sl. No	Stretch	Village	Taluk	S.R.O.	GLVRate per Sq.ft Rs.	GLV Rate per Sq.mtr Rs.	L.A. Extent in Sq.mtr.
1.	Stretch-1	Koyambedu	Aminjikarai	Annanagar	4690	50485	2469.52
		Senchery	Aminjikarai	Virugambakkam	4690	50485	4383.71
							6853.23
2	Stretch 2 & 3	Virugambakkam	Mambalam	Virugambakkam	4690	50485	13039.15
Total Extent							19892.38

Land cost for entire Stretch 1, 2 & 3 - 19892.38 m^2 X Rs.50485	= Rs.100.43 Crores
Multiple factor	X 1
	Rs.100.43 Crores
100% Solatium	Rs.100.43 Crores
A.M.V. 12% per annum (From the date of notification to the date of passing of award) (calculated for one year only)	Rs.12.00 Crores
Total	Rs.212.86 Crores

The Administrative Sanction proposal for the entire extent 28821.45 Sq.mtrs (Govt.8929.07 Sq.mtrs + Private 19892.38 Sq.mtrs) as worked out above already sent to the Additional Chief Secretary and Commissioner of Land Administration through the District Collector, Chennai District vide this office letter dated.30.04.2018 and the same is under process at the Collectrate office, Chennai District.

In the meanwhile, as the existing bridge across the Virugambakkam – Arumbakkam canal is not withstanding the present traffic flow, the Bridges Department, Greater Chennai Corporation has proposed to widen the existing bridge. In order to facilitate the uninterrupted traffic flow, the Bridges Department has decided to construct the bridge in two halves. While constructing the one half of the bridge, traffic will be allowed in the other half of the bridge.

As per the PWD hydraulic particulars, the height of the existing bridge has to be increased by 1m. Hence, to complete the bridge, land to be acquired for 50m on either side of the bridge.

Due to urgency and with regard to ease the traffic conjunction on speedy implementation,now it is proposed to implement the road widening in the phased manner for the distance of 120 meter (for widening of Kaliamman Koil Road for 50 meter distance from front and back of the canal (culvert) situated in stretch –I of koyambedu and senchery villages, Aminjikarai Taluk) covering an extent of 1160.35 Sq.mtrs as detailed below.

Name of the Taluk	Name of the Village	Total Extent (Sq.mtrs)	Government	Private (Sq.mtrs)
Aminjikarai	Koyambedu	688.03	191.64	496.39
Aminjikarai	Senchery	472.32	21.01	451.31
TOTAL		1160.35	212.65	947.70

The Guide line value as per records in the website of Registration Department as on 09.06.2017, for the lands to be acquired have been gathered. Based on this, the tentative land value is worked out and furnished for the private lands to be acquired for an extent of 947.70 sq.mtr as below.

The extent given above is tentative one. Hence, the exact extent of land will be arrived at the time of sending of LPS to the Land Acquisition officer who will prepare sub division records and arrive the exact extent to be acquired.

[Guide Line Value as on date (w.e.f. 09.06.2017)]

Sl. No	**Stretch**	**Village**	**Taluk**	**S.R.O.**	**GLV Rate per Sq.ft Rs.**	**GLV Rate per Sq.mtr Rs.**	**L.A. Extent in Sq.mtr**
1.	Stretch-1	Koyambedu	Aminjikarai	Annanagar	4690	50485	496.39
		Senchery	Aminjikarai	Virugambakkam	4690	50485	451.31
Total Extent							**947.70**

Land cost 947.70 X Rs.50485	= Rs.4.78 Crores
Multiple factor	X 1
	Rs.4.78 Crores
100% Solatium	Rs. 4.78 Crores
A.M.V. 12% per annum (From the date of notification to the date of passing of award) (calculated for one year only)	Rs.0.58 Crores
Total	Rs.10.14 Crores

Structural cost, tree value, if any, shall also be paid on the basis of estimate prepared by the concerned department (i.e., P.W.D., Forest & Horticulture Dept. etc.,) with 100% Solatium and the above tentative calculation does not include the valuation on Structures / Trees.

Hence, in the light of the proposal sent vide this office letter dated.30.04.2018, it is now requested to send administrative sanction proposal for the aforesaid extent of 1160.35 sq.mtrs in order to facilitate the construction of bridge and widen the Kaliamman Koil Road in the Phased manner to the Commissioner of Land Administration through the District Collector, for acquiring land under the **Right to Fair Compensation and Transparency in Land Acquisition, Rehabilitation & Resettlement Act 2013** for issue of Government Order to that effect, and to be intimated to MAWS department, with the mention that the cost will be fully borne by the Greater Chennai Corporation.

Hence, orders of the Special Officer–Standing Committee (Works), Standing Committee (Taxation and Finance) and Council are requested. Commissioner's note dated 24.07.2019 is read.

"Approved by Special Officer-Standing Committee (Works), Standing Committee (Taxation and Finance) and Council."

*****

நி.ம.உ.து.ந.க.எண்.எல்இ6/322/2019

தீர்மான எண்.414/2019 **நாள்: 29-07-2019**

நிலம் மற்றும் உடைமைத்துறை- தி.நகர் பகுதி தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்கு சொந்தமான கட்டிடத்தில் இயங்கி வரும் TNHB I & II (LA001, LA002) ஆகிய அங்காடிகளுக்கு மண்டலம்10, வார்டு-141, மதுரை வீரன் கோவில் தெருவில் கட்டப்பட்டுள்ள இரண்டு பல்நோக்கு கட்டிடங்களை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகத்திற்கு ஒதுக்கீடு செய்வதற்கு அனுமதி

துணை ஆட்சியர்/மண்டல மேலாளர், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகம் அவர்களின் 09.02.2019 நாளிட்ட கடிதத்தில் தி.நகர் பகுதியில் இயங்கி வரும் TNHB I & II (LA001,LA002) ஆகிய அமுதம் நியாயவிலை அங்காடிகள் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்கு சொந்தமான கட்டிடத்தில் வாடகை அடிப்படையில் இயங்கி வருவதாகவும், அதனை உடனடி காலி செய்யுமாறு தொடர்ந்து வலியுறுத்தி வந்த நிலையில் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-10, வார்டு-141 மதுரை வீரன் கோயில் தெரு, தி.நகர் சட்டமன்ற தொகுதி மேம்பாட்டு நிதியில் கட்டப்பட்டுள்ள இரண்டு பல்நோக்கு கட்டிடங்களை இரண்டு அங்காடிகளுக்கு பொதுநல நோக்கத்துடன் செயல்படும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகத்திற்கு வாடகையின்றி ஒதுக்கீடு செய்யுமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

இவ்வலுவலக 27.02.2019 நாளிட்ட கடிதம் மூலம் மேற்படி கட்டிடத்தினை கழகத்திற்கு ஒதுக்கீடு செய்ய இயலுமாயின்அதன் விவரம், பயன்பாட்டுத் தன்மை, பரப்பளவுடன் கூடிய புல வரைப்படம், வரைப்பட நகல் (உரிய அலுவலரின் ஒப்புதல் பெற்று), எந்த நிதியில் கட்டப்பட்ட கட்டிடம் மற்றும் நிரந்தர நிலப் பதிவேட்டின் நகல் ஆகியவற்றினை இத்துறைக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது.

10-வது மண்டல அலுவலர் அவர்களின் 23.03.2019 நாளிட்ட கடிதத்தில் மேற்படி கட்டிடத்தில் உரிமம் ஆய்வாளர் கள ஆய்வு மேற்கொண்டதில் மதுரைவீரன் கோவில் தெரு, செ-17 ல் 409.25 சதுரஅடி கொண்ட இரண்டு கடைகளுக்கு (LA001,LA002) ஒரு சதுரடிக்கு மாத வாடகையாக ரூ.40/- வீதம் எனவும், மன்றத்தீர்மான எண்.312/2013 நாள்.22.05.2013ன்படி பொதுமக்கள் நலன்கருதி வியாபார நோக்கமின்றி செயல்படும் அரசு நிறுவனமான தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகத்தின் கீழ் இயங்கும் அனைத்து நியாயவிலை கடைகளுக்கும் ஒதுக்கீடு செய்யும்போது மாத வாடகையாக சதுரடிக்கு ரூ.5/-வீதம் நிர்ணயம் செய்ய மன்றத்தின் அனுமதி பெறப்பட்டதின் படி வாடகை நிர்ணயம் செய்யுமாறு கோப்பு வரப்பெற்றுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான மண்டலம்-10, வார்டு-141 , பகுதி 30ல் மதுரை வீரன் கோவில் தெரு, செ-17ல் உள்ள தலா 409.75 சதுரடி பரப்பளவு கொண்ட இரண்டு கட்டிடங்களை கீழ்கண்ட நிபந்தனைகளின் அடிப்படையில் கடை ஒன்றிற்கு ,

- சதுரடிக்கு ரூ.5/- வீதம் 409.75 சதுர அடிக்கு ரூ. 2,049/-மாத வாடகையாகவும் ,
- 12 மாத வாடகையாக ரூ24,588/- முன்பணமாக செலுத்த வேண்டும் என்றும்,
- கட்டிடத்தில் ஏதேனும் மாற்றம் செய்யவிருப்பின் பெருநகர சென்னை மாநகராட்சியின் அனுமதி பெற்று தான் செய்ய வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டும்,
- அரசாணை எண் 92, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள். 03.07.2007ன்படி வாடகை அடிப்படையில் ஒதுக்கீடு செய்யப்படும் கட்டிடங்களின் வாடகைத் தொகையினை மூன்றாண்டுகளுக்கு ஒரு முறை 15% உயர்த்தவும்,

நி.ம.உ.து.ந.க.எண்.எல்இ6/322/2019

மேற்படி கட்டிடத்தினை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகத்திற்கு நியாய விலைக்கடை நடத்திட ஒதுக்கீடு செய்வதற்கு சிறப்பு அதிகாரி- நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 24.07.2019 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

"தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகத்திற்கு கட்டிடம் வாடகை நிர்ணயம் செய்ய, சிறப்பு அதிகாரி- நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் பின்னேற்பு அனுமதி அளிக்கப்பட்டது".

*****

இ.பொ.து.ம.செ.ப.எண். சி1/501/2019

தீர்மான எண்.415/2019 **நாள்: 29-07-2019**

இயந்திர பொறியியல் துறை - மத்திய சென்னை வாகன பணிமனை - மண்டலம் 8 லாரி நிலையத்தில் இயங்கும் எரி பொருள் கிடங்கிற்கு அக்டோபர் 2019 முதல் மார்ச் 2020 வரை டீசல் கொள்முதல் - இந்தியன் ஆயில் நிறுவனத்திடமிருந்து விலைப்புள்ளி பெறப்பட்டது - டீசல் கொள்முதல் செய்ய நிர்வாக அனுமதி

சென்னை மாநகராட்சி மன்றத்தீர்மானம் எண். 180 / 78 நாள். 26.02.78 ன்படி, சென்னை மாநகராட்சி உபயோகத்திற்கு தேவைப்படும் டீசல், இதர எரி பொருட்கள் ஒப்பம் கோருவதிலிருந்து விலக்கு அளித்து, இந்திய அரசு நிறுவனமான இந்தியன் ஆயில் நிறுவனத்திடமிருந்து 1978 -79 ஆம் ஆண்டிலிருந்து விலைப்புள்ளி பெற்று கொள்முதல் செய்ய அனுமதி பெறப்பட்டுள்ளது. அன்றைய கால கட்டத்தில், தென் சென்னை மற்றும் வடசென்னையில் உள்ள மண்டல வாகன இயக்கூர்தி நிலையம் (1 முதல் 10 வரை) அமைக்கப்பட்ட பின்னர், இந்தியன் அரசு நிறுவனங்களான இந்துஸ்தான் பெட்ரோலியம், பாரத் பெட்ரோலியம் மற்றும் இந்திய ஆயில் நிறுவனங்களால் டீசல் சேமிப்பு அறைகள், மண்டல வாகன நிலையங்களில் நிறுவப்பட்டன. சென்னை மாநகராட்சி விரிவாக்கம் செய்யப்பட்ட பின் 2013 முதல் தென் சென்னை, வடசென்னை மற்றும் மத்திய சென்னை என பிரிக்கபட்டன. பெருநகர சென்னை மாநகராட்சியாக உருவெடுத்தப்பிறகு, மத்திய வட்டாரமாக மண்டலம் - 6 முதல் 10 வரை பிரித்து அளிக்கப்பட்டது.

மத்திய சென்னை வாகன பணிமனை மற்றும் மண்டல வாகன நிலையங்களில், அசோக்லைலேண்ட், சுவராஜ் மஸ்தா, டாடா, எய்ச்சர், டிராக்டர், சிறியவகை முன்பளு துhக்கிகள், முன்பளு தூக்கிகள், மின் துறை வாகனங்கள், பொக்லைன்கள் புல்டோசர்கள், கனரக காம்பேக்டர்கள், இலகுரக காம்பேக்டர்கள் போன்ற வாகனங்கள் 274 எண்ணிக்கைக்கு மேல் பராமரிக்கப்பட்டு வருகின்றன. மேலும், நலத்துறை மலேரியா பிரிவு கொசு ஒழிப்பு பணிக்காக வேன்பாக் போன்ற வாகனங்களுக்கு தேவையான அளவு டீசல் வழங்கப்பட்டு வருகிறது. குடும்ப நலத்துறைக்கு வாசிங் மெசின், டீசல் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், மின்வெட்டின் காரணமாக மண்டலங்களில் உள்ள சென்னை மாநகராட்சி மருத்துவமனைகள் மற்றும் மண்டல அலுவலகங்களில் இயங்கும் ஜென்ரேட்டர் ஆகியவற்றிக்கும் எரிபொருள் வழங்கப்பட்டு வருகிறது. மழைக்காலங்களில் தண்ணீர் இரைப்பதற்காக ராட்சத மோட்டார்களுக்கும் டீசல் வழங்கப்படுகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சி, இயந்திர பொறியியல் துறையில் மத்திய சென்னை வாகன பணிமனை கட்டுப்பாட்டிற்கு உட்பட்ட மண்டலம் - 7 முதல் 10 வரை உள்ள லாரி நிலைய வாகனங்கள், பிற பணிகளுக்கு பயன்படுத்தப்படும் வாகனங்கள் மற்றும் புகை பரப்பும் வண்டிகளுக்கு தேவைப்படும் எரி பொருள் (டீசல்) மண்டலம்-8 லாரி நிலையத்தில் இயங்கும் டீசல் பங்க் மூலம் நிரப்பப்படுகின்றன. இந்த பங்க் இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனத்தாரால் நிறுவப்பட்டு பராமரிப்பு செய்யப்படுகின்றன.

நிறுவனகளின் பெயர்	சேமிப்பு தொட்டியுள்ள இடம்	டீசல் விநியோகிக்கப்படும் மண்டலம்
இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன்	மண்டலம் - 8 லாரி நிலையம், எண்.5C, ப்ரூவரி சாலை, செனாய் நகர், சென்னை-600 030.	7 முதல் 10 வரை உள்ள லாரி நிலைய வாகனங்கள், பிற பணிகளுக்கு பயன்படுத்தப்படும் வாகனங்கள், மற்றும் புகை பரப்பும் வண்டிகளுக்கும்

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 8 லாரி நிலையத்திற்க்கு தேவையான எரிபொருட்கள் சேமிப்பு தொட்டிகள் நிறுவிய இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனத்திடமிருந்து மட்டுமே கொள்முதல் செய்யப்படுவதால், டீசல் எரிபொருட்களின் விலை விகிதத்தை தெரிவிக்குமாறு இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனத்தை 16.07.2019 நாளிட்ட இவ்வலுவலக கடிதத்தின் வாயிலாக கேட்டுக்கொள்ளப்பட்டது. இந்நிறுவனம் அளித்த விலைப்புள்ளிகள் கீழே தொகுத்து சமர்ப்பிக்கப்படுகிறது.

இ.பொ.து.ம.செ.ப.எண். சி1 /501/ 2019

நிறுவனம்	பொருள் விவரம்	1 KLக்கான தொகை ரூபாய் (அனைத்து வரிகள் உட்பட)	மொத்த தேவை கிலோ லிட்டர் ஆறுமாதத்திற்கு (அக்டோபர் 2019 முதல் மார்ச்2020 வரை)
இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனம் (அனைத்து வரிகள் உட்பட)	டீசல்	ரூ.67,819.75 (நாள்:16.07.19)	1404
மொத்தம்	1404 கி.லி. x ரூ.67,819.75= ரூ.9,52,18,929/- (ரூபாய் ஒன்பது கோடியே ஐம்பத்து இரண்டு இலட்சத்து பதினெட்டாயிரத்து தொள்ளாயிரத்து இருபத்தி ஒன்பது மட்டும்)		

மேற்கண்ட எரிபொருட்களின் விலைப்புள்ளிகளின்படி, பெருநகர சென்னை மாநகராட்சி, இயந்திர பொறியியல் துறையில் மத்திய சென்னை வாகன பணிமனை கட்டுப்பாட்டிற்கு உட்பட்ட மண்டலம் 8 லாரி நிலையத்திற்கு தேவையான எரிபொருட்கள் சேமிப்பு தொட்டிகள் நிறுவிய இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனங்களிடமிருந்து வாகனங்கள் மூலமாக கொண்டு வந்து இறக்கி கொடுப்பதற்கு உட்பட்டதாகும். மேலும், இந்த விலைப்புள்ளிகள் மத்திய அரசு அறிவிக்கும் விலை உயர்வுக்கு உட்பட்டது என்றும், இதற்கான விற்பனை தொகையை முன்பணமாக காசோலை செலுத்த வேண்டும் எனவும், மேற்கண்ட நிறுவனம் நிபந்தனைகள் தெரிவித்துள்ளது. இந்நிறுவனங்களின் விலைப்புள்ளிகள் சமமாக உள்ளதாலும், மத்திய அரசு அவ்வப்போது நிர்ணயிக்கும் விலைப்புள்ளிகளின்படி மேற்கூறிய பொருட்களை கொடுத்து வருவதால் இந்த விலைப்புள்ளி ஏற்றுக் கொள்ளலாம். இந்நிறுவனங்கள் இந்திய அரசின் நிறுவனங்கள் என்பதால் இவைகளுக்கு பிணை வைப்புத் தொகை மற்றும் காப்பீட்டுத் தொகை செலுத்துவதிலிருந்தும், உடன்படிக்கை செய்து கொள்வதிலிருந்தும் விலக்கு அளிக்கலாம்.

மேலும், துப்புரவு மற்றும் பிற பணிகளுக்கு பயன்படுத்தப்படும் கனரக மற்றும் இலகுரக வாகனங்கள் (மண்டலம் 7 முதல் 10 வரை) அனைத்திற்கும் தேவைப்படும் எரிபொருள் கொள்முதல் அளவுகள் முறையே மண்டலம்-8 லாரி நிலையத்தில் இயங்கும் டீசல் பங்க் நிலையத்திற்கு 1404 கிலோ லிட்டர் டீசல் பெறுவதற்கு தோராயமாக ரூ.9,52,18,929/- (ரூபாய் ஒன்பது கோடியே ஐம்பத்து இரண்டு இலட்சத்து பதினெட்டாயிரத்து தொள்ளாயிரத்து இருபத்தி ஒன்பது மட்டும்) தேவைப்படுகிறது. இச்செலவினம் 2019-2020 ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டில், இயந்திர பொறியியல் துறை – கணக்கு எண்: 230-20- 03-06 – எரிபொருள் உபயோகம் என்ற தலைப்பின் கீழ் செலவு செய்யப்படும்.

எனவே , மண்டலம் 8 லாரி நிலையத்தில் இயங்கும், இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் எரி பொருள் கிடங்கு மூலம் தேவையான எரிபொருள், மேற்கண்ட மத்திய நிறுவனங்களிடமிருந்து அவர்கள் அளித்த விலைப்புள்ளிகளின் படி, அல்லது வாங்கும் காலத்தில் அப்போதைய சந்தை விலைக்கு வாங்குவதற்காக உத்தேசிக்கப்பட்டுள்ளது.

டீசல் கொள்முதல் செய்ய, 2001-02 ஆம் ஆண்டிற்கு மன்றத்தீர்மானம் எண். 92 / 2000 நாள். 28.02.2000 அனுமதியின்படி, அரசின் பின்னேற்பினை பெறுவதற்கு அனுப்பப்பட்ட கோப்பின் மீது நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு (மா.ந. 1) துறை அளித்த அரசு ஆணை நிலை எண். 102 நாள். 07.08.2000, மேற்கூறிய நிறுவனம், மத்திய அரசின் நிறுவனமாக இருக்கும் வரை, ஒவ்வொரு ஆண்டும் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தேவையான டீசல் மற்றும் பெட்ரோல் இனி பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையரே கொள்முதல் செய்து கொள்ள அனுமதி அளித்து நிரந்தர ஆணை வெளியிட்டுள்ளது.

அரசு ஆணையினை அமுல்படுத்திட மன்றத்தீர்மானம் எண். 486 / 01 நாள். 18.09.2001 ல் அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில், ஒவ்வொரு ஆண்டும் ஆணையரின் ஆணை பெற்று டீசல், பெட்ரோல் கொள் முதல் செய்யப்பட்டு வருகிறது. வரும் 2019-2020 ஆம் ஆண்டிற்கு டீசல் கொள்முதல் செய்திட சிறப்பு அதிகாரி (மன்றம்) அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

எனவே,

1. பெருநகர சென்னை மாநகராட்சியில், இயந்திர பொறியியல் துறையில் மத்திய சென்னை வாகன பணிமனை கட்டுப்பாட்டிற்கு உட்பட்ட மண்டலம் - 7 முதல் 10 வரை உள்ள லாரி நிலைய வாகனங்கள், பிற பணிகளுக்கு பயன்படுத்தப்படும் வாகனங்கள் மற்றும் புகை பரப்பும் வண்டிகளுக்கு தேவைப்படும் எரி பொருள் (டீசல்) மண்டலம்-8 லாரி நிலையத்தில் இயங்கும் டீசல் பங்க் மூலம் நிரப்பப்பட அனுமதி வேண்டியும்,
2. மத்திய சென்னை வாகன பணிமனை கட்டுப்பாட்டிற்கு உட்பட்ட மண்டலம் 8 லாரி நிலையத்தில் இயங்கும் டீசல் பங்கிற்கு தேவையான எரிபொருள் அக்டோபர் 2019 முதல் மார்ச் 2020 வரை, 1404 கிலோ லிட்டர் டீசல், திருவாளர் இந்தியன் ஆயில் கார்பரேசன் லிமிடெட் நிறுவனத்திடமிருந்து வாங்குவதற்கும் அவர்களால் அமைக்கப்பட்ட சேமிப்பு தொட்டிகளில் அவர்கள் வாகனங்கள் மூலமாக மண்டலம் 8 லாரி நிலையத்திற்கு நிரப்ப தோராயமாக ரூ.9,52,18,929/- (ரூபாய் ஒன்பது கோடியே ஐம்பத்து இரண்டு இலட்சத்து பதினெட்டாயிரத்து தொள்ளாயிரத்து இருபத்தி ஒன்பது மட்டும்) என்ற அளவில் அல்லது வாங்கும் காலத்தில் அப்போதைய சந்தை விலைக்கே 2019-2020 ஆம் ஆண்டிற்கு வாங்குவதற்கு நிர்வாக அனுமதி வேண்டியும்,
3. இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனம் இந்திய அரசு நிறுவனங்கள் என்பதால், அவர்களுக்கு பிணை வைப்பு தொகை கட்டுவதிலிருந்தும், பாதுகாப்பு தொகை செலுத்துவதிலிருந்தும் மற்றும் உடன்படிக்கை செய்து கொள்வதிலிருந்தும் விலக்கு அளிக்கவும்,
4. இதற்கான செலவினத்தை 2019-2020 ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டில், இயந்திர பொறியியல் துறை – கணக்கு எண்: 230-20- 03-06 – எரிபொருள் உபயோகம் என்ற தலைப்பின் கீழ் செலவு செய்யவும்,
5. மண்டலம் 8 லாரி நிலையத்தில் இயங்கும் டீசல் பங்கிற்கு தேவையான எரிபொருளை தேவைக்கேற்ப அவ்வப்பொழுது மேற்பார்வை பொறியாளர் (இயந்திரம்) அவர்களின் ஆணை மூலமாக முன்பண காசோலை செலுத்தி டீசல் கொள்முதல் செய்யவும்,
6. இந்திய அரசு நிறுவனங்கள் கோரியபடி, தேவையான முன்பணத்தை தேவைக்கேற்ப அவ்வப்போது RTGS மூலமாக அளிக்கவும்,
7. அரசு நிரந்தர ஆணை வெளியிட்டு, ஒவ்வொரு ஆண்டும், பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தேவையான டீசல், இனி சென்னை மாநகராட்சி ஆணையரே கொள்முதல் செய்து கொள்ள அரசு அனுமதி அளித்துள்ளதால், அரசின் பின்னேற்பு இன்றி கொள்முதல் செய்யவும்,

மேற்கண்ட 1 முதல் 7 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி-நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 25.07.2019 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

"டீசல் கொள்முதல் செய்ய, 1 முதல் 7 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி-நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".

*****

ம.அ.7, ந.க.எண்.இ1/ 4381 /2019

தீர்மான எண்.416 / 2019 **நாள்: 29-07-2019**

மண்டலம்-7(அம்பத்தூர்) மற்றும் மண்டலம் 11(வளசரவாக்கம்) - அத்திப்பட்டு குப்பை கொட்டும் வளாகம்- தினமும் சேகரிக்கப்படும் 480 மெ.டன் குப்பைகளை அத்திப்பட்டு குப்பை மாற்று வளாகத்தில் இருந்து தினமும் அள்ளிச் சென்று கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்தில் 180 நாட்களுக்கு கொட்டும் பணி - செலவினம் ரூ.3,11,90,400/-க்கு நிர்வாக அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட அம்பத்தூர், மண்டலம்-7 ஆனது 43.52 சதுர கி.மீ. பரப்பளவுள்ள 15 வார்டுகளை உள்ளடக்கிய பகுதியாகும். இந்த மண்டலத்தில் 35 எண்ணிக்கையில் பேருந்து சாலைகள் மற்றும் 3448 கி.மீ உட்புற சாலைகளும் பெருநகர சென்னை மாநகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகிறது. இம்மண்டலத்தின் மக்கள் தொகை 528534 ஆகும். இம்மண்டலம், நகரமயமாக்குதலின் முக்கிய பகுதியாக விளங்குவதால், நாளுக்கு நாள் இம்மண்டலத்தில் மக்கள் தொகை வளர்ச்சி அடைந்து வருகிறது.

இம்மண்டலத்தில் நாள் தோறும் கொட்டப்படும் குப்பைகள் அத்திப்பட்டு குப்பை மாற்று வளாகத்தின் உள்ளே கொட்டுவதற்கு போதிய இடவசதி இல்லாததால் அத்திப்பட்டு குப்பை மாற்று வளாகத்தில் கொட்டப்பட்டு தனியார் பெரிய வாகனங்கள் மூலம் கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்திற்கு கொண்டு செல்லும் பணியினை தொடர்ந்து மேற்கொள்வது அவசியமாகிறது. ஆணையர் அவர்களின் 02.11.2018 நாளிட்ட ஆணையின்படி மண்டலம்11-லிருந்து தினரி சுமார் 120 மெ. டன் அளவிற்கு குப்பைகள் அத்திப்பட்டு குப்பை மாற்று வளாகத்தில் கொட்டப்பட்டு வருகிறது. மேலும், மண்டலம்-7ல் சேகரமாகும் 360 மெ.டன். குப்பைகள் அத்திப்பட்டு குப்பை மாற்று வளாகத்தில் கொட்டப்பட்டு வருகிறது. இதனையும் சேர்த்து ஒரு நாளைக்கு 480 மெ.டன் குப்பைகள் அத்திப்பட்டு குப்பை மாற்று வளாகத்தில் கொட்டப்பட்டு தனியார் பெரிய வாகனங்கள் மூலம் கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்திற்கு எடுத்துச்செல்லப்படுகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சி தலைமையிடத்து இயந்திர பொறியியில் துறை மூலம் 2019 ஆம் ஆண்டிற்கான விலை மெ.டன் ஒன்றுக்கு (அடிப்படை விலை ரூ.327.90 + சேவை வரி ரூ. 33.53) ஆக மொத்தம் ரூ.361/- வீதம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

480 மெ.டன் குப்பைகளை 180 நாட்களுக்கு அத்திப்பட்டு குப்பை மாற்று வளாகத்தில் இருந்து கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்திற்கு கொண்டு போய் சேர்க்கும் பணிக்கு ஆகும் தோராய செலவினம் 180 நாட்கள் x 480 மெ.டன் x ரூ.361/- (Unit cost per MT) செலவினத் தொகை ரூ.3,11,90,400/- ஆகும். 180 நாட்களுக்கு கொண்டு செல்லப்படும் குப்பையின் எடை 86,400 MT.

எனவே, 180 நாட்களுக்கு மேற்கண்ட 86,400 மெட்ரிக் டன் குப்பைகளை அத்திப்பட்டு குப்பை கொட்டும் வளாகத்தில் இருந்து குப்பைகளை அள்ளிச் சென்று கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்திற்கு கொண்டு சேர்க்கும் பணியினை தனியார் மூலம் மேற்கொள்ள ஒப்பம் கோர வேண்டி உள்ளது.

எனவே,

1. அத்திப்பட்டு குப்பை கொட்டும் வளாகத்தில் தினமும் மண்டலம் 7-ல் சேகரமாகும் 360 மெ.டன் குப்பைகள் மற்றும் மண்டலம் 11-ல் சேகரமாகும் 120 மெ.டன் குப்பைகள் சேர்த்து மொத்தம் 480 மெ..டன் அளவு சேகரிக்கப்படும் குப்பைகளை பெரிய கொள்ளளவு கொண்ட தனியார் லாரிகள் மூலம் கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்தில் கொண்டு போய் குப்பைகளை கொட்டும் பணிக்கு 180 நாட்களுக்கான தோராய செலவினத் தொகை ரூ.3,11,90,400/- (480 x 180 x 361) (ரூபாய் மூன்று கோடியே பதினோரு இலட்சத்து தொண்ணூறாயிரத்து நானூறு மட்டும்)க்கு நிர்வாக அனுமதி பெறவும்,
2. மேற்கண்ட பணி சம்மந்தமான ஒப்பந்தப்புள்ளி தலைமையிடத்து திடக்கழிவு மேலாண்மைத்துறை மூலம் கோருவதற்கும்,

3. இப்பணிக்கான செலவினத்தினை பிரிவுக் குறியீடு 40-41-03 மற்றும் கணக்குத் தலைப்பு எண்.230-15-01-00ன் கீழ் மேற்கொள்ளவும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி-நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய குறிப்பில் ஆணையர் அவர்களின் 24.07.2019 நாளிட்ட மேற்குறிப்பில் கீழ்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

"6 Months or when the necessity ceases whichever is earlier"

ஆணையரது 25.07.2019 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

"ஆணையர் மேற்குறிப்புடன், 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".

*****

க.து.ந.க.எண்.அ1/4695/2019

தீர்மான எண்.417 / 2019 **நாள்: 29-07-2019**

கல்வித்துறை - சீருடைகள் - 2019 - 2020 ஆம் கல்வியாண்டில் சென்னை உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில் பயிலும் 9 ஆம் வகுப்பு முதல்12 ஆம் வகுப்பு வரை உள்ள 24,447 மாணவ / மாணவியர்களுக்கு பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் விலையில்லா திட்டத்தின் கீழ் அரசு நிறுவனமானகோ-ஆப்-டெக்ஸ் நிறுவனத்தில் சீருடைகள் (இரண்டு செட்) ரூ. 2,40,00,000/- தொகையில் கொள்முதல் செய்வதற்கு அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சியின் கீழ் இயங்கும் சென்னை உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில் பயிலும் 1 முதல் 8 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ / மாணவியர்களுக்கு தமிழ்நாடு அரசால் விலையில்லா திட்டத்தின் மூலம் சீருடைகள் வழங்கப்பட்டு வருகிறது. மேலும் 9, 10, 11 (ம) 12 ஆம் வகுப்பு மாணவ / மாணவியர்களுக்கு பெருநகர சென்னை மாநகராட்சி வாயிலாக விலையில்லா திட்டத்தின் மூலம் சீருடைகள் வழங்கப்பட்டு வருகிறது. 06.04.2018 நாளிட்ட ஆணையர் அவர்களின் அனுமதியின் படியும் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி, சிறப்பு அதிகாரி, மன்றத்தீர்மான எண் : 296/2018, நாள்: 10.04.2018 ன்படி., 2018 – 2019 ஆம் கல்வியாண்டில் 9, 10, 11 மற்றும் 12ஆம் வகுப்பில் பயின்ற 24,195மாணவ / மாணவியர்களுக்கு கோ-ஆப்-டெக்ஸ் நிறுவனத்தின் மூலம் சீருடைகள் கொள்முதல் செய்து மாணவ / மாணவியர்களுக்கு வழங்கப்பட்டது.

அதன் தொடர்ச்சியாக 2019 – 2020 ஆம் கல்வியாண்டில் சென்னை உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் 9 ஆம் வகுப்பு முதல்12 ஆம் வகுப்பு வரை உள்ள மாணவ / மாணவியர்களுக்கு சீருடைகள் கொள்முதல் செய்யப்பட உள்ளது.

மேற்குறிப்பிட்ட சீருடைகள் கொள்முதல் செய்வதற்கு தமிழ்நாடு கோ-ஆப்-டெக்ஸ் நிறுவனத்திடமிருந்து 03.06.2019 நாளிட்ட விலைப்புள்ளி பெறப்பட்டுள்ளது.

38 சென்னை உயர்நிலைப் பள்ளிகளில் பயிலும் 9ம் வகுப்பு மற்றும் 10ம் வகுப்பு மாணவ / மாணவியர்களின் எண்ணிக்கை

வ. எண்.	பள்ளியின் விவரம்	9ம் வகுப்பு (ம) 10ம் வகுப்பு மாணவர்களின் எண்ணிக்கை	9ம் வகுப்பு (ம) 10ம் வகுப்பு மாணவியர்களின் எண்ணிக்கை	மொத்தம்
1	சென்னை உயர்நிலைப் பள்ளிகள்	2,484	1,844	4,328

32 சென்னை மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் 9ம் வகுப்பு முதல் 12ம் வகுப்பு மாணவ / மாணவியர்களின் எண்ணிக்கை

வ. எண்.	பள்ளியின் விவரம்	மாணவர்களின் எண்ணிக்கை	மாணவியர்களின் எண்ணிக்கை	மொத்தம்
1	சென்னை மேல்நிலைப் பள்ளிகள் 9ம் வகுப்பு முதல் 12ம் வகுப்பு வரை	8,047	10,903	18,950

70 உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில் பயிலும் மொத்த மாணவ / மாணவியர்களின் எண்ணிக்கை விவரங்கள்

வ. எண்.	பள்ளியின் விவரம்	மாணவர்களின் எண்ணிக்கை	மாணவியர்களின் எண்ணிக்கை	மொத்தம்
1	38 சென்னை உயர்நிலைப் பள்ளிகள்	2,484	1,844	4,328
2	32 சென்னை மேல்நிலைப் பள்ளிகள்	8,047	10,903	18,950

மொத்த மாணவ/மாணவியர்களின் எண்ணிக்கை	10,531	12,747	23,278
(ஜீன் 2019 மாதம் முதல் மாணவர்களின் சேர்க்கையினை கருதிகூடுதலாக தேவைப்படும் சீருடைகள் 10 சதவீதம்	1,053	1,275	2,328
மொத்தம்	11,584	14,022	25,606
2018-2019ஆம் கல்வியாண்டில் வழங்கப்பட்ட சீருடைகளில் மீதம் இருப்பு உள்ள சீருடைகளின் எண்ணிக்கை	793	366	1,159
இருப்பு உள்ள சீருடைகளை கழித்து 2019-2020ஆம் கல்வியாண்டில் தேவைப்படும் சீருடைகளின் மொத்த எண்ணிக்கை	10791	13656	24,447

தமிழ்நாடு கோ-ஆப்-டெக்ஸ் நிறுவனத்திடமிருந்து பெறப்பட்ட விலைப்புள்ளி விவரங்கள்

வ. எண்.	மாணவ / மாணவியர்களின் விவரம்	பெறப்படும் சீருடைகளின் எண்ணிக்கை	ஒரு செட் சீருடையின் விலை (ரூ.)	மொத்த விலை விவரம் (ரூ.)
1	மாணவர்கள் - 10,791	21,582 (2 செட் வீதம்)	ரூ. 359.10	ரூ.77,50,096
2	மாணவியர்கள் - 13,656	27,312 (2 செட் வீதம்)	ரூ. 592.20	ரூ. 1,61,74,166
	மொத்தம்			ரூ. 2,39,24,262

மேற்குறிப்பிட்ட விவரங்களின் அடிப்படையில் சென்னை உயர் மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில் பயிலும் மாணவ / மாணவியர்கள் 23,278 எண்ணிக்கையிலும் மற்றும் 2019-2020 ஆம் கல்வியாண்டில் ஜுன் 2019 மாதம் முதல் மாணவ / மாணவியர்களின் சேர்க்கை உள்ளதால் மொத்த மாணவ / மாணவியர்களின் எண்ணிக்கையில் 10%சதவிகிதம் கூடுதலான எண்ணிக்கையில் 2,328 சீருடைகள் சேர்த்து 25,606 எண்ணிக்கையில் உள்ள மாணவ/மாணவியர்களுக்கு 2 செட் சீருடைகள் வழங்க வேண்டியுள்ளது, அதில் 2018-2019ஆம் கல்வியாண்டில் சென்னை உயர் மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில் பயின்ற மாணவ / மாணவியர்களுக்கு வழங்கப்பட்ட சீருடைகளில் 1,159 சீருடைகள் பள்ளிகளில் இருப்பு உள்ளதால் அச்சீருடைகளை கழித்து, தற்போது (24,447 x 2 செட்) 48,894 சீருடைகள் தமிழ்நாடு அரசு நிறுவனமான கோ-ஆப்-டெக்ஸ் நிறுவனத்தின் மூலம் கொள்முதல் செய்யலாம்.

எனவே,

1 2019 - 2020ஆம் கல்வியாண்டில் சென்னை உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் 9 ஆம் வகுப்பு முதல்12 ஆம் வகுப்பு வரை உள்ள 24,447 மாணவ / மாணவியர்களுக்கு பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் விலையில்லா திட்டத்தின் கீழ் இரண்டு செட் சீருடைகள் (24,447 x 2 செட் = 48,894) ரூ. 2,40,00,000/- தொகையில் கொள்முதல் செய்வதற்கு அனுமதியும்,

2 இச்சீருடைகளை அரசு நிறுவனமான கோ-ஆப்-டெக்ஸ் நிறுவனத்தில் வழங்கியுள்ள விலைப்புள்ளி மூலம் கொள்முதல் செய்வதற்கு அனுமதியும்,

3. மேற்குறிப்பிட்டுள்ள ரூ.2,40,00,000/- தொகையில் கொள்முதல் செய்யப்படுகின்ற மொத்தம் தொகையில் இருந்து 50 சதவீத தொகையான ரூ. 1,20,00,000/-னை முன்பணமாக கோ-ஆப்-டெக்ஸ் நிறுவனத்திற்கு 80-82-01, 460-50-01-19 முன்பணக் குறியீட்டில் காசோலை வழங்குவதற்கு அனுமதியும்,

4. இச்செலவினத்தை துறை குறியீடு - E பிரிவு எண் : 80-82-01,230 – 11 – 02 - 02 கல்விச் செலவினம் (உயர்நிலை / மேல்நிலைப்பள்ளி) என்ற நிதி ஒதுக்கீட்டில் ஒதுக்கப்பட்டுள்ள ரூ. 8,50,00,000/-ன் கீழ் செலவு மேற்கொள்வதற்கு அனுமதியும்,

மேற்கண்ட 1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி- நிலைக்குழு(கல்வி), நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 25.07.2019 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

"கோ ஆப்டெக்ஸ் நிறுவனம் மூலம் சீருடைகள் கொள்முதல் செய்ய, 1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(கல்வி), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".

*****

க.து.ந.க.எண்.எம்2/12185/2018

தீர்மான எண்.418/2019 **நாள்:29-07-2019**

கல்வித்துறை - சென்னை பள்ளிகளில் முன்னோடி திட்டமாக திருவான்மியூர், வேளச்சேரி மற்றும் அடையாறு பகுதியிலுள்ள பள்ளிகளில் பயிலும் 5000 மாணாக்கர்களுக்கு இலவசமாக காலை சிற்றுண்டி திருவாளர்கள். அக்ஷய பாத்திர நிறுவனம் மூலம் செயல்படுத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டது – திருவான்மியூர், வேளச்சேரி மற்றும் அடையாறு பகுதிகளில் உள்ள பெருநகர சென்னை மாநகராட்சி பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு திருவாளர்கள். அக்ஷய பாத்திர நிறுவனம் மூலம் காலை உணவு வழங்கிட மேலும் இத்திட்டத்தினை விரிவுபடுத்த மண்டலம்-9க்குட்பட்ட கோபாலபுரத்தில் சமையற்கூடம் அமைக்க அனுமதி..

பெருநகர சென்னை மாநகராட்சியின் கீழ் இயங்கி வரும் சென்னை பள்ளிகளில் பயின்று வரும் மாணவ/மாணவியர்களுக்கு இலவசமாக காலை சிற்றுண்டி வழங்குவதாக திருவாளர்கள். அக்ஷய பாத்திரம் நிறுவனம் கடிதம் மூலம் விருப்பம் தெரிவித்ததைத் தொடர்ந்து, திருவான்மியூர் மற்றும் அடையார் பகுதிகளில் இயங்கி வரும் சென்னை மேல்நிலை/உயர்நிலை/நடுநிலைப் மற்றும் தொடக்கப்பள்ளிகளில் பயிலும் 5000 மாணவ/மாணவியர்களுக்கு தற்போது சிற்றுண்டி வழங்கப்பட்டு வருகிறது. மேலும் சிற்றுண்டி வழங்கப்படும் மாணவ/மாணவியர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கும் பொருட்டு காலை சிற்றுண்டி வழங்குவதை சென்னை முழுவதும் அமைந்துள்ள சென்னை மாநகராட்சிப்பள்ளிகளுக்கு விரிவாக்கம் செய்திட மேற்கண்ட தன்னார்வ தொண்டு நிறுவனம் அனுமதி கோரியுள்ளது.

மேலும், அவ்வாறு சிற்றுண்டியைத் தயார் செய்து வழங்குவதற்கு பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தில் சமையற் கூடம் அமைத்திட அனுமதி வேண்டி வடக்கு, மத்தியம் மற்றும் தெற்கு ஆகிய மூன்று பகுதிகளிலும் உரிய இடங்கள் வேண்டும் என்ற கோரிக்கை வைத்திருந்தது. அதன் தொடர்ச்சியாக பெரம்பூர் பேரக்ஸ் சாலையில் ஒரு இடமும், சிந்தாதரிப்பேட்டையில் ஒரு இடமும், கோபாலபுரத்தில் ஒரு இடமும் பார்வையிடப்பட்டு அதில் மண்டலம்-9, கோபாலபுரத்தில் அமைந்துள்ள நிவாரண மையம் அமைந்துள்ள இடத்தில் சமையற் கூடம் அமைத்திட ஏதுவாக உள்ளது என்று விருப்பம் தெரிவித்ததின் அடிப்படையில் காலை சிற்றுண்டி தயார் செய்திட மேற்கண்ட தன்னார்வ நிறுவனம் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தில் திருவாளர்கள். அட்சய பாத்திரம் நிறுவனம் தம் சொந்த செலவில் சமையற்கூடம் அமைக்க அவ்விடம் தேர்வு செய்ய உத்தேசிக்கப்பட்டது.

மண்டல அலுவலர்-9 அவர்களிடமிருந்து மேற்கண்ட நிலம் சம்மந்தமான அறிக்கை பெறப்பட்டது. அவ்வறிக்கையில் குறிப்பிட்ட இடமானது கோட்டம் எண். 118, பகுதி-24, மண்டலம்-9, கோபாலபுரத்தில் பேரிடர் காலங்களில் நிவாரண மையமாக செயல்பட்டு வருவதாகவும், அவ்விடத்தின் பரப்பளவு 10889.21 சதுர அடி பிளாக் எண். 4, ஆர்.எஸ்.எண். 99, மைலாப்பூர் கிராமம், மொத்த கட்டிட பரப்பளவு 6573 சதுர அடி என்றும் குறிப்பிட்டுள்ளது. மேலே, குறிப்பிட்டுள்ள இடமானது பேரிடர் காலங்களில் பாதிக்கப்படும் மக்களுக்கு உணவு சமைத்து வழங்கும் நிவாரண மையமாக 08.10.1963ல் செயல்பட துவங்கியதாகவும், மேலும், அந்த நிவாரண மையம் மாநில மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சியின் நிவாரண மேலாண்மை திட்டத்தில் இடம் பெற்றுள்ளது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், இதே கட்டிடத்தில் 2013ஆம் ஆண்டு முதல் அம்மா உணவகம் இயங்கி வருவதாகவும், மண்டலம்-9க்குட்பட்ட அனைத்து அம்மா உணவகங்களுக்கும் இவ்விடத்திலிருந்து சப்பாத்தி தயாரித்து வழங்கப்பட்டு வருவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

க.து.ந.க.எண்.எம்2/12185/2018

இதன் தொடர்ச்சியாக துணை ஆணையர் (சுகாதாரம்) அவர்களின் 01.07.2019 நாளிட்ட குறிப்பில் தற்போது செயல்பட்டு வரும் அம்மா உணவகத்தினை வேறு இடத்தில் அமைக்கும் பணிக்கு செலவாகும் தோராயமான தொகையினை பெற வேண்டும் என குறிப்பிட்டிருந்ததன் அடிப்படையில் மண்டல அலுவலர்-9(பொ) அவர்களுக்கு மதிப்பீடு தொர்பான கடிதம் அனுப்பப்பட்டது. அதன் அடிப்படையில் மண்டலம் அலுவலர்-9 (பொ) அவர்களின் அறிவுறுத்தலின்படி கோட்டம்-122ன் உதவி பொறியாளர் கையொப்பமிட்ட ஒரு மதிப்பீடு கீழ்கண்ட இனங்கள் ஒவ்வொன்றிக்கும் சமர்பித்தார்.

1. நிவாரண மையத்தினை இடிப்பதற்க்கான செலவீன தொகை ரூ.15.23 இலட்சங்கள்
2. சப்பாத்தி மையத்தினை கிரியப்பா சாலையில் உள்ள கட்டிடத்தினை மாற்றி புனரமைப்பு மேற்கொள்ள ஆகும் செலவு ரூ.13.95 இலட்சங்கள்
3. நிவாரண மையத்தில் தற்போது செயல்பட்டு வரும் அம்மா உணவகத்தினை கான்ரான் ஸ்மித் சாலையில் மாற்றி புதியதாக அமைப்பதற்கு ரூ. 34.00 இலட்சங்கள்

எனவே, மேலே குறிப்பிட்டுள்ள பணிகள் தொடர்பான செயல்பாடுகளின் அடிப்படையில்,

1. மண்டலம்-9 கோட்டம் எண். 118, பகுதி-24, கோபாலபுரத்தில் அமைந்துள்ள சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான நிவாரண மையத்தில் சென்னை பள்ளிகளில் பயிலும் மாணவ/மாணவியர்களுக்கு இலவசமாக காலை சிற்றுண்டியினை திருவாளர்கள். அக்ஷய பாத்திரம் நிறுவனம் மூலம் தயார் செய்து பெருநகர சென்னை மாநகராட்சியின் பள்ளிகளில் வழங்குவதற்கு ஏதுவாக சமையல் கூடம் அமைத்திட 10889.21 சதுர அடி நிலத்தை உரிமை மாற்றமின்றி தன்னார்வ நிறுவனமான திருவாளர்கள். அக்ஷய பாத்திரம் நிறுவனத்திடம் கட்டணமின்றி முதல் கட்டமாக <u>மூன்றாண்டு காலத்திற்கு</u> ஒப்படைத்திடவும்,
2. தன்னார்வ நிறுவனமான திருவாளர்கள். அக்ஷய பாத்திரம் நிறுவனம் கோரியுள்ளவாறு, சீனிவாச பெருமாள் சன்னதி, 2வது தெரு, வார்டு-118, பகுதி-24, மண்டலம்-9ல் அமைந்துள்ள நிவாரண மையம், அம்மா உணவகம் மற்றும் சாப்பாத்தி மையமாக செயல்படும் பழைய கட்டிடத்தினை இடித்து விட்டு, காலி நிலமாக மேற்கண்ட இடத்தை தன்னார்வ நிறுவனத்திற்கு ஒப்படைப்பு செய்திட, கட்டிடத்தை தகர்க்க மதிப்பீடுத் தொகை ரு. 15.23/- இலட்சம் செலவினம் மேற்கொள்ள அனுமதியும்,
3. பேரிடர் காலத்தில் அந்த இடம் உணவு சமைக்கும் இடமாக செயல்பட்டு வரும் காரணத்தினால் பேரிடர் காலங்களில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவு சமைக்கும் பணியினை திருவாளர்கள். அக்ஷய பாத்திரம் நிறுவனம் மேற்கொள்ளவும்,
4. தற்போது அந்த கட்டிடத்தில் செயல்பட்டு வரும் அம்மா உணவகத்திற்கு அதே பரப்பளவு கொண்ட கட்டிடத்துடன் கூடிய இடம் கன்ரான்ஸ்மித் சாலை வார்டு -118, பகுதி-24,ல் ஒதுக்கீடு செய்து, அப்பகுதியில் அம்மா உணவகம் புதியதாக கட்டுவதற்க மதிப்பீட்டு தொகை ரு. 34.00/- இலட்சம் செலவினத்தை மேற்கொள்ள அனுமதியும்,

5. மண்டலம்-9ல் செயல்பட்டு வரும் சப்பாத்தி தயார் செய்யும் மையத்தினை (மண்டலம்-9;ல் உள்ள அனைத்து அம்மா உணவகத்திற்கு சப்பாத்தி தயார் செய்து அளித்தல்) கிரியப்பா சாலை, வார்டு-117, பகுதி-26, மண்டலம்-9ல் சப்பாத்தி தயாரிக்கும் மையமாக செயல்பட மாற்றி அமைக்கவும், அதற்கான புனரமைப்பு செய்வதற்கு பராமரிப்பு இன்றி செயல்படாமல் உள்ள மண்டலம்-9ற்கான சுகாதார மையத்தினை சீர்செய்ய மதிப்பீட்டு தொகை ரூ.13.95/ இலட்சத்தில் செலவினம் மேற்கொள்ள அனுமதியும்,

மேற்கண்ட 1 முதல் 5 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி-நிலைக்குழு(கல்வி), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய குறிப்பில் துணை ஆணையர் (சுகாதாரம்) அவர்களின் 23.07.2019 நாளிட்ட மேற்குறிப்பில் கீழ்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

“ Existing Amma Unavagam demolition may be allowed after construction of new building for Amma Unavagam and refurbishment of chappathi centre”

ஆணையரது 24.07.2019 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

“ஆணையர் மேற்குறிப்புடன், 1 முதல் 5 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(கல்வி), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது”.

*****

H.D.C.NO. NULM/SUH/3157/2017

Resolution No.419/2019 **Date:29 -07-2019**

Public Health Department – Directions of Hon'ble Supreme Court – Shelter for Urban Homeless – Action to be taken for construction of additional shelters – Places identified – Zone -3, 8, 12 and 15 -For Orders.

In the Chennai city 71 shelters for Urban Homeless are required for the population of Chennai city. Currently 38 shelters for urban homeless and 13 shelters for inpatient attendars are functioning.

In the 4th PSC meeting, establishment of 12 shelters has been sanctioned and are in various stages of construction.

In the 5th PSC meeting, establishment of 21 shelters has been sanctioned and out of which 7 places have been identified and are in various stages of construction. An addition of four more locations have been identified for the construction of shelters as per the report furnished (Table below) by the concerned Zonal Officers.

Sl. No	Zone	Div	Address of building	Current status of the building/land
1	3	28	Near Aavin Milk farm kulam. GCC's road side vacant land approximately 5197 sq ft.	Vacant land
2	8	102	V.S. Puram near Amma Unavagam	Vacant land
3	12	163	Near UPHC, Mannadiamman Koil street, Adambakkam	Unused building and ICDS (1st floor)
4	15	196	Kaliyamman koil main road, Karapakkam	Vacant land

Hence, approving the locations and construction of shelters at the above mentioned four places. Orders of the Special Officer–Standing Committee (Health), Standing Committee (Taxation and Finance) and Council are requested. Commissioner's note dated 25.07.2019 is read.

"Approved by Special Officer-Standing Committee (Health), Standing Committee (Taxation and Finance) and Council."

*****

பொ.து.ந.க.எண்.ஈ2/15189/2019

தீர்மான எண்.420/2019 **நாள்:29-07-2019**

பணியமைப்பு - பெருநகர சென்னை மாநகராட்சி - பொதுத்துறை - 2017-2018 ஆம் ஆண்டிற்கான உதவி வருவாய் அலுவலர் பதவிக்கான தெரிவுப்பட்டியல் மன்றத்தினால் ஒப்புதல் அளிக்கப்பட்டு உதவி வருவாய் அலுவலர் பதவி உயர்வு வழங்கப்பட்டது - உதவி வருவாய் அலுவலர் பதவியில் பணிவரன்முறை செய்து ஆணை வழங்கஅனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சி, வருவாய் துறையில் காலியாகவுள்ள உதவி வருவாய் அலுவலர் பணியிடங்களை நிரப்ப 01.04.2018 ஐ மைய நாளாகக் கொண்டு 1 நபரைக் கொண்ட தெரிவுப்பட்டியல் தயாரிக்கப்பட்டு, தெரிவுப்பட்டியலுக்கு சிறப்பு அதிகாரி-மன்றம் அவர்களின் தீர்மான எண்.524/2018, நாள்.06.07.2018 மன்றத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, ஆணையர் அவர்களின் 14.07.2018 நாளிட்ட செயல்முறை ஆணையின் மூலமாக தெரிவுப்பட்டியலில் இடம்பெற்ற திரு.ஜெ.ரகுபதி, உதவி வருவாய் அலுவலர் அவர்களுக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டது.

மேலும், 10.05.2019 நாளிட்ட கடிதத்தில், தனியர் மீது 25.08.2018 முற்பகல் முதல் இன்றைய தேதி வரை எந்தவித குற்றச்சாட்டும் இல்லை எனவும், தனியருக்கு அப்பதவியில் பணிவரன்முறைபடுத்துமாறும் தெரிவித்து வருவாய் அலுவலர் அவர்களின் 30.05.2019 நாளிட்ட கடிதத்தின் வாயிலாக கோப்பு பெறப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சியில் உதவி வருவாய் அலுவலர் பதவி வகுப்பு 2-ன் கீழ் வருவதால், பணிவரன்முறைப்படுத்த சிறப்பு அதிகாரி-மன்றம் அவர்களுக்கு அதிகார பங்களிப்பு அளிக்கப்பட்டுள்ளது.

ஆகவே, தனியருக்கு கீழ்கண்டவாறு உதவி வருவாய் அலுவலர் பதவியில் பணியில் சேர்ந்த நாள் முதல் பணிவரன்முறைப்படுத்த சிறப்பு அதிகாரி-மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 24.07.2019 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

வ. எண்.	உதவி வருவாய் அலுவலர் பெயர்கள்	உதவி வருவாய் அலுவலர் பதவி உயர்வு வழங்கிய செய்லமுறை ஆணை எண்.நாள்.	உதவி வருவாய் அலுவலராக பணியில் சேர்ந்த நாள்.
1.	திரு.ஜெ.ரகுபதி	பொ.து.ந.க.எண்.ஈ2/20083/2017, நாள்.14.07.2018	19.07.2018 முற்பகல்

"பணிவரன்முறைப்படுத்த சிறப்பு அதிகாரி-மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".

*****

இ.பொ.து.ந.க.எண்.எம்1/ 360/ 2019

தீர்மான எண்.421 / 2019 **நாள்:29-07-2019**

இயந்திரப் பொறியியல் துறை- பொது சுகாதாரத் துறை- தேசிய நகர்புற வாழ்வாதார திட்டம்- நகர்புற வீடற்றோருக்கான தங்குமிடம்-சாலையோரத்திலுள்ள வீடற்றோரை தங்குமிடத்திற்கு அழைத்து வரவும் மற்றும் இது தொடர்பான விழிப்புணர்வினை ஏற்படுத்தவும் 3 எண்ணிக்கையில் *Tempo Traveller* வகை வாகனம் அரசு'இ' மார்க்கெட் மூலம் கொள்முதல் செய்ய நிர்வாக அனுமதி.

மாநகர நலஅலுவலர் அவர்களின் 24.0.2.2019 நாளிட்ட குறிப்பில் சாலையோரத்தில் உள்ள வீடற்றோரை மீட்டு அவர்களுக்கென அமைக்கப்பட்டுள்ள தங்குமிடத்தில் சேர்க்க 3 எண்ணிக்கையில் வாகனங்கள் கொள்முதல் செய்து வழங்குமாறும், மேலும் இவ்வாகனத்தில் நகர்புற வீடற்றோருக்கான தங்குமிடம் குறித்த விழிப்புணர்வினை ஏற்படுத்தும் வகையில், உரிய மாற்றங்கள் செய்யவும் ஆணையர் அவர்களின் அனுமதி பெற்றுள்ளதாக தெரிவித்துள்ளார்கள். மேலும். இப்பணிகளுக்கான நிதி ஒதுக்கீடு தேசிய நகர்புற வாழ்வாதார திட்டத்தின் தகவல் கல்வி மற்றும் தொடர்பு(IEC), நிர்வாகம் மற்றும் இதர செலவுகள் (A&OE) ன் கீழ் ஏற்கனவே பெறப்பட்டுள்ளதாகவும், எனவே, 3 எண்ணிக்கையில் வாகனங்கள் கொள்முதல் செய்யவும் மற்றும் இவ்வாகனங்களில் உரிய மாற்றங்கள் செய்தும் வழங்குமாறு கோரியுள்ளார்

எனவே, 3 எண்ணிக்கையில் வாகனங்கள் கொள்முதல் செய்வது குறித்து பொதுசுகாதாரத்துறை, தேசிய நகர்புற வாழ்வாதார திட்ட அலுவலர்களுடன் கலந்தாலோசித்ததில் சாலையோரத்தில் உள்ள வீடற்றோரை மீட்டு அவர்களுக்கென அமைக்கப்பட்டுள்ள தங்குமிடத்தில் சேர்ப்பதற்கு Tempo Traveller வகை வாகனங்கள் தகுதியானதாக இருக்கும் என கருதப்பட்டதால் இவ்வகை வாகனங்கள் கொள்முதல் செய்ய தீர்மானிக்கப்பட்டது.

Tempo Traveller வகை வாகனங்கள் அரசு 'இ' மார்க்கெட் மூலம் கிடைக்கப் பெறுகின்ற நிலையில், ஒப்பங்கள் கோரி கொள்முதல் செய்வதால் ஏற்படும் காலதாமதத்தினை தவிர்க்கவும் மற்றும் பணியின் அவசரம் மற்றும் அவசியத்தினைக் கருத்தில் கொண்டும் அரசு'இ' மார்க்கெட் மூலம் இக் கொள்முதலை மேற்கொள்ளலாம் எனவும் மற்றும் இவ்வாகனத்தில் மாற்றங்கள் செய்ய தனியே ஒப்பங்கள் கோரி மேற்கொள்ளலாம் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

3 எண்ணிக்கையில் Tempo Traveller வாகனங்கள் அரசு'இ' மார்க்கெட் மூலம் கொள்முதல் செய்வதற்கான தோராய மதிப்பீடு வாகனம் ஒன்றிற்கு ரூ.10.00 இலட்சம் வீதம் 3 வாகனங்களுக்கான தோராய மதிப்பீடு ரூ30.00 இலட்சம் எனவும், மேலும் இவ்வாகனத்தில் பயனாளிகளை அழைத்து வருவதற்கும் மற்றும் விழிப்புணர்வினை ஏற்படுத்துவதற்கும் ஏற்றவாறு மாற்றங்கள் செய்திட ஒரு வாகனத்திற்கு ரூ7.00 இலட்சம் வீதம் 3 வாகனங்களுக்கு ரூ.21.00 இலட்சம் என மொத்தம்ரூ.51.00 இலட்சம் செலவாகும் என கணக்கிடப்பட்டுள்ளது

இப்பணிகளுக்கான செலவீனத்தினை சுகாதாரத்துறை பிரிவு குறியீட்டு எண் 30-35-01- மற்றும் கணக்கு தலைப்பு எண் 230.20-21-00ன் கீழ் ஒதுக்கப்பட்டுள்ள நிதியிலிருந்து மேற்கொள்ளலாம் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

எனவே,

1. சாலையோரத்தில் உள்ள வீடற்றோரை மீட்டு அவர்களுக்கென அமைக்கப்பட்டுள்ள தங்குமிடத்தில் சேர்க்கவும் மற்றும் இது குறித்த விழிப்புணர்வினை ஏற்படுத்தவும் 3 எண்ணிக்கையில் Tempo Traveller வகை வாகனங்கள் அரசு 'இ' மார்க்கெட் மூலம் வாகனம் ஒன்றிற்கு ரூ.10.00 இலட்சம்

வீதம் 3 வாகனங்கள் ரூ 30.00இலட்சம் தோராய மதிப்பீட்டில் கொள்முதல் செய்ய நிர்வாக அனுமதி வேண்டியும்,

2. இவ்வாகனங்களை சாலையோரத்தில் வீடற்றோரை அழைத்து வருவதற்கும் மற்றும் விழிப்புணர்வினை ஏற்படுத்துவதற்கும் ஏற்றவாறு மாற்றங்கள் செய்திட ஒருவாகனத்திற்கு ரூ7.00 இலட்சம் வீதம் 3 வாகனங்களுக்கு ரூ.21.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளவும்,

3. இனம் - 2 ஏற்பின் இப்பணிக்கென தனியே ஒப்பங்கள் கோரி ஒப்பந்ததாரரை நியமிக்கவும்,

4. இப்பணிகளுக்கான செலவீனத்தினை சுகாதாரத்துறை பிரிவு குறியீட்டு எண் 30-35-01- மற்றும் கணக்கு தலைப்பு எண் 230.20-21-00ன் கீழ் ஒதுக்கப்பட்டுள்ள நிதியிலிருந்து மேற்கொள்ளவும்,

மேற்கண்ட 1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி-நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 26.07.2019 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

"1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி-நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".

*****

பொது.சு.து.ம.ந.அ(பு.வி)ந.க.எண்.0018/2019

தீர்மான எண்.422/2019 **நாள்:29-07-2019**

பொது சுகாதாரத்துறை - பிறப்பு மற்றும் இறப்பு பிரிவு - மண்டலம்-15, கோட்டம்-197 - சென்னை மாவட்டம், சோழிங்கநல்லூர் வட்டம், காரப்பாக்கம் கிராமம், புல எண்.176/2ல் 1.62.0 ஹெக்டர் புன்செய் தரிசு புறம்போக்கு நிலத்தினை கிறிஸ்துவ பொது மக்கள் மயானமாக பயன்படுத்துவதற்கு நிலம் ஒதுக்கீடு செய்வதற்கு அனுமதி.

சென்னை மாவட்டம், சோழிங்கநல்லூர் வட்டம், காரப்பாக்கம் கிராமம், புல எண்.176/2ல் 1.62.0 ஹெக்டர் நிலமானது கிறிஸ்துவ சமூகத்திற்காக கல்லறை பூமியாக பயன்படுத்திக் கொள்ள ஒதுக்கீடு செய்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளதாகவும், அந்நிலத்தை தாங்கள் கல்லறையாக பயன்படுத்திக் கொள்ள அனுமதி வழங்குமாறு கிறிஸ்துவ சபையினர் வழங்கிய கடிதங்களில் கோரப்பட்டுள்ளது.

அவ்வாறு அரசு ஒதுக்கிய நிலத்தை ஒப்படைக்காத காரணத்தால் அரசு வருவாய் துறை மீது நீதிமன்றத்தில் அந்தோணியார் திருத்தலம் சார்பில் வழக்கு தொடர்ந்ததாகவும் மற்றும் அவ்வழக்கில் நீதிமன்றமானது அரசு வெளியிடப்பட்டுள்ள அரசாணைப்படி நடவடிக்கை எடுக்கப்படவேண்டுமென தெரிவித்து அரசாணை(நிலை) எண்.21, வருவாய் நி.மு.வ(1) துறை, நாள்.14.01.2011 நகல் மற்றும் நீதிமன்ற வழக்கு W.P.No.27994/2014ன்மீது பிறப்பிக்கப்பட்ட 14.10.2014 நாளிட்ட தீர்ப்பின் நகல் இணைத்து அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட அரசாணை மற்றும் உயர்நீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில் மேற்படி நிலத்தினை காஞ்சிபுர மாவட்ட வருவாய்த்துறையினரால் பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-15, பொறியியல் துறையிடம் 31.03.2017 அன்று ஒப்படைக்கப்பட்டது.

அனைத்து பிரிவு கிறிஸ்துவ பொது மக்களும் மயானமாக பயன்படுத்தும் பொருட்டு இந்நிலத்தினை மயான பயன்பாட்டிற்காக அரசாணை (அரசாணை(நிலை) எண்.21, வருவாய் நி.மு.வ(1) துறை, நாள்.14.01.2011)யில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளின்படி பெருநகர சென்னை மாநகராட்சி வசம் எடுத்து கொள்வதற்கும், மேற்படி நிலத்தில் அடிப்படை தேவைகளான நீர், மின்சாரம், மதில்சுவர், சாலை வசதி, கழிப்பிட வசதி (ம) பெருநகர சென்னை மாநகராட்சி கிறிஸ்துவ மயானம் என பெயர் பலகை வைத்தல் போன்ற முக்கிய பணிகளை பெருநகர சென்னை மாநகராட்சி கட்டடித்துறை மலம் மேற்கொள்ள ஆணையர் அவர்களால் 16.12.2018 நாளிட்ட ஆணை வழங்கப்பட்டது.

அரசாணை(நிலை) எண்.21, வருவாய் நி.மு.வ(1) துறை, நாள்.14.01.2011-ஆம் நாளிட்ட அரசாணையில் சென்னை மாவட்டம், சோழிங்கநல்லூர் வட்டம், காரப்பாக்கம் கிராமம், புல எண்.176/2ல் 1.62.0 ஹெக்டர் தீர்வை ஏற்பட்ட புன்செய் தரிசு புறம்போக்கு நிலத்தை கிறிஸ்துவ மதத்தின் அனைத்து பிரிவினருக்கும் பயன்படும் வகையில் கல்லறை அமைக்க புனித தோமையர் மலை ஊராட்சி ஒன்றியத்திற்கு (தற்போது பெருநகர சென்னை மாநகராட்சி) வருவாய் நிலை ஆணை.24ன் கீழுள்ள வழக்கமான நிபந்தனைகளை மற்றும் கீழ்காணும் நிபந்தனைகளுடன் நிலக்கிரயமின்றி நில உரிமை மாற்றம் செய்து ஆணையிட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிபந்தனைகள்:-

1. பிரஸ்தாப நிலங்களை பாலவாக்கம், கொட்டிவாக்கம், நீலாங்கரை, உத்தண்டி, ஈஞ்சம்பாக்கம், சோழிங்கநல்லூர், காரப்பாக்கம் மற்றும் ஓக்கியம் துரைப்பாக்கம் ஆகிய கிராமங்களிலுள்ள அனைத்து கிருஸ்துவ மக்களும் பொதுவில் பயன்படுத்த வேண்டும். எவ்வித கட்டணமும் பொது மக்களிடம் வசூல் செய்யக்கூடாது.
2. உட்பிரிவு கட்டணம், கல்கிரயம் ஆகியவற்றை கேட்பு நிறுவனம் செலுத்த வேண்டும்.
3. குறிப்பிட்ட நிலம் எந்த நோக்கத்திற்காக கோரப்படுகிறதோ அதற்காக மட்டுமே அந்நிலத்தை பயன்படுத்த வேண்டும்.
4. குறிப்பிட்ட நிலமோ அல்லது அதன் ஒரு பகுதியோ எதிர்காலத்தில் தேவையில்லை எனில் அதை கேட்புத்துறை வருவாய்த்துறைக்கு மீண்டும் ஒப்புவிக்க வேண்டும்.

எனவே,

(அ) மேற்கண்ட நிலத்தில் அனைத்து பிரிவு கிறிஸ்துவ பொது மக்களும் மயானமாக பயன்படுத்தும் பொருட்டு இந்நிலத்தினை மயான பயன்பாட்டிற்காக அரசாணையில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளின்படி பெருநகர சென்னை மாநகராட்சி வசம் எடுத்து கொள்வதற்கும்,

(ஆ) மேற்படி நிலத்தில் அடிப்படை தேவைகளான நீர், மின்சாரம், மதில்சுவர், சாலை வசதி, கழிப்பிட வசதி (ம) பெருநகர சென்னை மாநகராட்சி கிறிஸ்துவ மயானமம் என பெயர் பலகை வைத்தல் போன்ற முக்கிய பணிகளை பெருநகர சென்னை மாநகராட்சி கட்டிடத்துறை மூலம் மேற்கொள்வதற்கும்,

மேற்கண்ட அ மற்றும் ஆ ஆகிய இனங்களுக்கு சிறப்பு அதிகாரி- நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய குறிப்பில் அணையர் அவர்களின் 24.07.2019 நாளிட்ட மேற்குறிப்பில் கீழ்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

“Approved with no permission for tombs”

ஆணையரது 24.07.2019 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

“ஆணையர் மேற்குறிப்புடன், அ மற்றும் ஆ ஆகிய இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது”.

*****

பொ.சு.து.ந.க.எண்.பி1/2867/2019

தீர்மான எண்.423/2019 **நாள்:29-07-2019**

பொது சுகாதாரத்துறை - மண்டலம் - 8ல் புதிதாக கட்டப்பட்டு வரும் அமைந்தகரை கிழக்கு ஆரம்ப சுகாதார நிலையத்தில் இரத்த சுத்திகரிப்பு சிகிச்சை மேற்கொள்ள M/s.Rotary Club of Chennai Galaxy அவர்களின் மூலம் 10 இயதிரங்கள் மற்றும் 10 மெத்தைகள் அமைத்திடவும் - M/s.Tanker Foundation அவர்கள் மூலம் இரத்த சுத்திகரிப்பு சிகிச்சை மேற்கொள்ளவும் ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி அவர்களின் ஆணை பெறப்பட்டது - மேற்படி டயாலிஸிஸ் இயந்திரங்கள் வழங்க பெறப்பட்ட கடிதங்களில் இரண்டு அரசு சாரா தொண்டு நிறுவனங்களின் (NGO) பெயரும் பெரும்பாலும் ஒன்றாக இருந்ததினால் M/s.Rotary Club of Chennai Towers என குறிப்பிடுவதற்கு பதிலாக M/s.Rotary Club of Chennai Galaxy என பெறப்பட்டது - திருத்தம் செய்ய அனுமதி.

ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி அவர்களின் 03.07.2019 நாளிட்ட ஆணையில், மண்டலம் – 8ல் புதிதாக கட்டப்பட்டு வரும் அமைந்தகரை கிழக்கு ஆரம்ப சுகாதார நிலையத்தில் இரத்த சுத்திகரிப்பு சிகிச்சை மேற்கொள்ள 1 முதல் 13 வரையிலான இனங்களுக்கு ஆணை பெறப்பட்டது. அதன்படி மன்றத் தீர்மான எண்.362/2019, நாள்.03.07.2019 பெறப்பட்டது.

மேற்படி இடத்தில் இரத்த சுத்திகரிப்பு சிகிச்சை மேற்கொள்ள, டயாலிஸிஸ் இயந்திரங்கள் வழங்குவதாக M/s.Rotary Club of Chennai Towers அவர்கள் மூலம் மே மாதமும், M/s.Rotary Club of Chennai Galaxy அவர்கள் மூலம் ஜூன் மாதமும், இசைவு கடிதங்கள் பெறப்பட்டது. அதில், M/s.Rotary Club of Chennai Towers அவர்களின் கடிதம் முதலில் பெறப்பட்டது. மேலும், இரண்டு அரசு சாரா தொண்டு நிறுவனங்களின் (NGO) பெயரும், பெரும்பாலும் ஒன்றாக இருந்ததினால், M/s.Rotary Club of Chennai Towers என குறிப்பிடுதற்கு பதிலாக, M/s.Rotary Club of Chennai Galaxy என பெறப்பட்டது.

எனவே, சிறப்பு அலுவலர் அவர்களின் ஆணை கீழ்கண்டவற்றிற்கு வேண்டப்படுகிறது.

1. பெருநகர சென்னை மாநகராட்சி, பொது சுகாதாரத்துறை, மண்டலம் – 8ல் புதிதாக கட்டப்பட்டு வரும் அமைந்தகரை கிழக்கு ஆரம்ப சுகாதார நிலையத்தில் இரத்த சுத்திகரிப்பு சிகிச்சை மேற்கொள்ள டயாலிஸிஸ் இயந்திரங்கள் வழங்க பெறப்பட்ட கடிதங்களில் இரண்டு அரசு சாரா தொண்டு நிறுவனங்களின் (NGO) பெயரும், பெரும்பாலும் ஒன்றாக இருந்ததினால், M/s.Rotary Club of Chennai Towers அவர்களுக்கு அளிப்பதற்கு பதிலாக, M/s.Rotary Club of Chennai Galaxy என குறிப்பிட்டுள்ளதை திருத்தம் செய்யவும்,
2. மேற்படி இடத்தில், M/s.Rotary Club of Chennai Towers அவர்களின் மூலம் 10 டயாலிஸிஸ் இயதிரங்கள் மற்றும் 10 மெத்தைகள் அமைத்திடவும், மற்றும் M/s.Tanker Foundation அவர்கள் மூலம் இரத்த சுத்திகரிப்பு சிகிச்சை மேற்கொள்ளவும்,
3. ஏற்கனவே, ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி அவர்களின் மூலம் பெறப்பட்ட 03.07.2019 நாளிட்ட ஆணையில் 1 முதல் 13 வரையிலான இனங்களில் M/s.Rotary Club of Chennai Galaxy என குறிப்பிடப்பட்டுள்ளதற்கு பதிலாக, M/s.Rotary Club of Chennai Towers என திருத்தம் செய்யவும்,

பொ.சு.து.ந.க.எண்.பி1/2867/2019

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி-நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி வேண்டி ஆணையர் அவர்களின் 25.07.2019 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

"M/s.Rotary Club of Chennai Towers என திருத்தம் செய்ய 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".

*****

பொ.து.ந.க.எண்.ஈ4/15095/2019

தீர்மான எண்.424/2019 **நாள்:31-07-2019**

பணியமைப்பு - பெருநகர சென்னை மாநகராட்சி - பொதுத்துறை - திரு.டி.சுரேஷ், உதவி செயற் பொறியாளர் (மின்சாரம்) - பதவியில் இரண்டாண்டுகள் பணிமுடித்தமையால் - தகுதிகாண்பருவம் நிறைவடைந்தமைக்கு ஆணை வழங்க அனுமதி.

மண்டல அலுவலர் -7 அவர்களின் 30.05.2019 நாளிட்ட கடிதத்தில், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் அவர்களின் 03.03.2017 நாளிட்ட செயல்முறை ஆணையின்படி, திரு.டி.சுரேஷ், உதவி பொறியாளர் (மின்சாரம்) பதவியிலிருந்து உதவி செயற் பொறியாளர் (மின்சாரம்) ஆக பதவி உயர்வு பெற்று 06.03.2017 முதல் மின்துறையில் பணிபுரிந்து வருகின்றார் எனவும், தனியரின் பதவியில் பணிவரன்முறை செய்து பணிப்பதிவேட்டில் (தொகுதி 2, பக்க எண்.11) பதியப்பட்டுள்ளது எனவும், தனியரின் பணிசரிபார்ப்பு (தொகுதி 3, பக்க எண்.7) பதியப்பட்டுள்ளது எனவும், தனியர் மீது எவ்வித ஒழுங்கு நடவடிக்கையும் இல்லை எனவும், தனியரின் பதவியில் இரண்டாண்டுகள் பணி முடித்தமையால், தகுதிகாண்பருவம் வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

உதவி செயற் பொறியாளர் (மின்சாரம்) பதவியானது வகுப்பு-2ன்கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளதால், இப்பதவி வகிப்பவர்களை தகுதிகாண்பருவம் நிறைவடைந்தமைக்கு ஆணை வழங்க, சிறப்பு அதிகாரி - மன்றம் அவர்களின் அனுமதி பெறப்படவேண்டும். தனியரின் பணிவிவரங்கள் கீழ்வருமாறு,

பெயர் மற்றும் பதவி	உதவி செயற் பொறியாளர் (மின்சாரம்) பதவியில் பணியில் சேர்ந்த நாள்	உதவி செயற் பொறியாளர் (மின்சாரம்) பதவியில் பணிவரன்முறைப்படுத்தப்பட்ட நாள்	தகுதிகாண்பருவம் நிறைவடைந்த நாள்
திரு.ட்டி.சுரேஷ், உதவி செயற் பொறியாளர் (மின்சாரம்), மண்டலம் -7	06.03.2017	06.03.2017	06.03.2019

எனவே, திரு.ட்டி.சுரேஷ், உதவி பொறியாளர் (மின்சாரம்) பதவியிலிருந்து உதவி செயற் பொறியாளர் (மின்சாரம்)ஆக பதவி உயர்வு பெற்று 06.03.2017 முதல் பணியில் சேர்ந்துள்ளமையால், அப்பதவியில் இரண்டாண்டுகள் நிறைவடைந்துள்ளமையால், 06.03.2019 முதல் தகுதிகாண்பருவம் நிறைவடைந்தவராக ஆணை வழங்க, சிறப்பு அதிகாரி-மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 26.07.2019 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

"தகுதிகாண் பருவம் நிறைவடைந்தமைக்கு ஆணை வழங்க சிறப்பு அதிகாரி - மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".

*****

நி.ம.உ.து.ந.க.எண்.எல்இ6/1397/2019

தீர்மான எண்.425/2019 **நாள்:31-07-2019**

நிலம் மற்றும் உடைமைத்துறை- பொதுத் தேர்தலில் மத்திய சென்னை பாராளுமன்ற உறுப்பினராக வெற்றி பெற்ற நாடாளுமன்ற உறுப்பினர் அவர்களின் அலுவலகம் செயல்பட பெருநகர சென்னை மாநகராட்சி கட்டிடம் ஒதுக்கீடு செய்யஅனுமதி.

திரு.தயாநிதி மாறன், நாடாளுமன்ற உறுப்பினர், மத்திய சென்னை தொகுதி அவர்களின் 01.07.2019 நாளிட்ட கடிதத்தில் நடைபெற்று முடிந்த நாடாளுமன்றப் பொதுத் தேர்தலில் மத்திய சென்னை பாராளுமன்ற உறுப்பினராக வெற்றி பெற்ற பின்னர் அன்றாடம் தொகுதி மக்கள் சந்திப்பதற்கு வசதியாக மத்திய சென்னை பாராளுமன்ற தொகுதிக்குட்பட்ட 9வது மண்டலம், 113வது வட்டம், நுங்கம்பாக்கம் டேங்க் பண்ட் சாலையில் அமைந்துள்ள பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான பயன்படுத்தபடாத நிலையில் உள்ள உடற்பயிற்சிக் கூடம் அல்லது 9வது மண்டலம், 116வது வட்டம், திருவல்லிக்கேணி டாக்டர் பெசன்ட் சாலையில் அமைந்துள்ள மாநகராட்சிக்கு சொந்தமான பகுதிப்பொறியாளர் அலுவலகக் கட்டிடத்தினை பாராளுமன்ற உறுப்பினர் அலுவலகம் இயங்கிட அனுமதி வழங்குமாறு கோரப்பட்டது.

18.07.2019 நாளிட்ட இத்துறை கடிதம் மூலம் மேற்படி பகுதிகளில் உள்ள ஏதேனும் ஒரு கட்டிடத்தினை பாராளுமன்ற உறுப்பினர் அலுவலகம் இயங்கிட அனுமதி வழங்க இயலுமாயின் வரைப்படத்துடன் அறிக்கையாக இத்துறைக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது.

9-வது மண்டல அலுவலர் அவர்களின் 18.07.2019 நாளிட்ட கடிதத்தில், மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் திரு.தயாநிதி மாறன் அவர்கள் பாராளுமன்ற உறுப்பினர் அலுவலகம் இயங்கிட அனுமதி கோரிய கட்டிடத்தின் தற்போதைய நிலையினை கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

1) கோட்டம் 113 டேங்க் பண்ட் சாலையில் அமைந்துள்ள உடற்பயிற்சி கூடம் பழுதடைந்த நிலையில் தற்போது பயன்படுத்தப்படாமல் உள்ள அவ்விடத்தின் நில பரப்பளவு 782 ச.மீ எனவும் அதில் உள்ள பழுதடைந்த நிலையில் உள்ள பழைய கட்டிடத்தின் அளவு 120ச.மீ ஆகும் (வரைப்படம் இணைக்கப்பட்டுள்ளது)

2) கோட்டம் 116ல் உள்ள திருவல்லிக்கேணி டாக்டர் பெசன்ட் சாலையில் உள்ள பகுதி பொறியாளர் அலுவலக கட்டிடத்தினை 02.07.2019 அன்று பாராளுமன்ற உறுப்பினர் அலுவலக உதவியாளர் அவர்களால் நேரில் ஆய்வு செய்ததில் அப்பகுதி அலுவலக வளாக உட்புறத்தில் உரம் தயாரிக்கும் கூடம் அமைந்துள்ளது எனவும், அருகில் சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரிய அலுவலகத்தில் இருந்து துர்நாற்றம் வீசுவதாகவும் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் முதன்மை தலைமை பொறியாளர் அலுவலகத்திலிருந்து பெறப்பட்ட 25.07.2019 நாளிட்ட குறிப்பில், -9-வது மண்டலத்திலிருந்து பெறப்பட்ட குறிப்பின்படி பாராளுமன்ற உறுப்பினர் அவர்கள் கோரிய கட்டிடம் அமைந்துள்ள இடத்தின் நில பரப்பளவு 782 ச.மீ என்றும், அதில் பழுதடைந்த நிலையில் உள்ள கட்டிடத்தின் அளவு 12 ச.மீ என்றும் அந்த கட்டிடத்தில் பாராளுமன்ற உறுப்பினர் அலுவலகம் இயங்கிட கட்டிடத்தின் சிறுசிறு பழுதுகள் சரிசெய்யப்படவேண்டும், தரையை புதுப்பித்தல், சுவர்களுக்கு வண்ணப்பூச்சு செய்தல், கழிவறை மற்றும் தண்ணீர் வசதி சரிசெய்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்ட பின்னர் அவ்விடத்தில் பாராளுமன்ற உறுப்பினர் அலுவலகம் செயல்படலாம் என தெரிவிக்கபட்டுள்ளது. அதற்கான பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள மதிப்பீடு தனியே சமர்ப்பிக்கப்படும் எனவும், 'மேற்சொன்ன மண்டலம்-9, கோட்டம்-113ல் நுங்கம்பாக்கம் டேங்க் பண்ட் சாலையில் அமைந்துள்ள பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான பயன்பாட்டில் இல்லாத உடற்பயிற்சி கூட கட்டிடத்தை பாராளுமன்ற உறுப்பினர் அலுவலகம் இயங்கிட அனுமதியளிக்கலாம் என தெரிவித்துள்ளார்.

எனவே, மண்டலம்-9, கோட்டம்-113ல் நுங்கம்பாக்கம் டேங்க் பண்ட் சாலையில் அமைந்துள்ள பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான பயன்பாட்டில் இல்லாத உடற்பயிற்சி கூட கட்டிடத்தை கீழ்க்கண்ட நிபந்தனைகளின் அடிப்படையில்,

அ) கட்டிடத்தில் ஏதேனும் மாற்றம் செய்யவிருப்பின் பெருநகர சென்னை மாநகராட்சியின் அனுமதி பெற்று தான் செய்ய வேண்டும்.

ஆ) உறுப்பினர் காலம் முடிவு பெற்றபின் முறைப்படி ஒப்படைக்கப்பட வேண்டும்.

இ) மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் அலுவலகமாக ஏற்கனவே பயன்படுத்தி வந்த கட்டிடத்தினை பெருநகர சென்னை மாநகராட்சி வசம் திரும்ப எடுத்துக்கொள்ளப்படும் என்ற நிபந்தனைக்குட்பட்டும்,

மேற்படி கட்டிடத்தை பாராளுமன்ற உறுப்பினர் அலுவலகம் இயங்க ஒதுக்கீடு செய்வதற்கு சிறப்பு அதிகாரி-நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 29.07.2019 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

"மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர்அலுவலகம் இயங்க கட்டிடத்தை ஒதுக்கீடுசெய்ய அ முதல் இ வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".

*****

ம.அ.3.ந.க.எண்.3993/2019

தீர்மான எண்.426 / 2019 **நாள்:31-07-2019**

மண்டலம்-3 (மாதவரம்) - கோட்டம்-24 தாங்கல் கரைச் சாலை வள்ளலார் நகரில் புழல் ஊராட்சி ஒன்றியத்தால் புத்தகரத்தில் கட்டப்பட்ட சத்துணவுக்கூடம் மிகவும் பழுதடைந்து இடிந்து விழும் நிலையில் உள்ளதால் அந்த கட்டிடத்தை இடித்து அகற்ற அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-3 (மாதவரம்), கோட்டம்-24, தாங்கல் கரைச்சாலை, வள்ளலார் நகரில் புழல் ஊராட்சி ஒன்றியத்தால் புத்தகரத்தில் கட்டப்பட்ட கட்டிடம் 1984 - 1985ஆம் ஆண்டு சத்துணவுக்கூடமாக சுமார் 102.51 சதுர மீட்டரில் சிமெண்ட் ஓட்டினாலான மேற்கூரை கட்டிடம் ரூ.55,000/-செலவில் கட்டப்பட்டுள்ளது. மேலும், தற்போது இக்கட்டிடம் பல்வேறு இயற்கை சீற்றங்களாலும் தாங்கல் கரைச் சாலையில் செல்லும் வாகனங்களின் அதிர்வுகளாலும் சுவர்கள் விரிசல் விட்டு சிமெண்ட்ஓடு மேற்கூரை சேதமடைந்து மிகவும் பழுதடைந்து இடிந்து விழும் நிலையில் உள்ளது.

இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம்

1.	இடிக்கப்படவுள்ள கட்டடத்தின் புத்தக மதிப்பு	ரூ.23,255.18
2.	இடிக்கப்படவுள்ள கட்டடம் கட்டப்பட்ட ஆண்டு	1984 -1985
3.	இடிக்கப்படவுள்ள கட்டடத்தின் பரப்பளவு	102.51 ச.மீ
4.	கட்டடம் பயன்பாட்டில் உள்ளதா	இல்லை
5.	கட்டடம் இடித்த பின்பு எந்த மாதிரியான பயன்பாட்டிற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது	வார்டு அலுவலகம் கட்டப்படும்.
6.	இடிப்பதற்கு அவசியம் என்ன?	மிகவும் பழுதடைந்து இடிந்து விழும் நிலையில் உள்ளது.

எனவே, இந்த கட்டிடத்தை இடித்து விட்டு புதிதாக கட்டடத்துறை மூலம் ஒருங்கிணைந்த 24வது வார்டு அலுவலக கட்டிடம் கட்டலாம் என உத்தேசிக்கப்பட்டுள்ளது. இடிக்கப்படவுள்ள கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு ரூ.23,255.18 ஆகும். தற்பொழுது இவ்விடத்தில் சத்துணவுக் கூடம் இயங்கவில்லை இதற்கு மாற்றாக திருவள்ளுவர் தெருவில் புதியதாக கட்டிடம் கட்டி சத்துணவுக்கூடம் இயங்கி வருகிறது.

எனவே, மேற்கண்ட கட்டிடத்தை இடிப்பதற்கு சிறப்பு அதிகாரி-நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(பணிகள்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 24.07.2019 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

"பழுதடைந்த கட்டிடத்தை இடித்து அகற்ற சிறப்பு அதிகாரி-நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(பணிகள்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".

*****

ம.அ.12.ந.க.எண்.இ1/2368/2019

தீர்மான எண்.427/2019 **நாள்:31-07-2019**

மண்டலம்-12 - கோட்டம்-158ல் மேற்கு குளக்கரை சாலையில் உள்ள நூலக கட்டிடத்தினை இடித்து அகற்ற அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-12 கோட்டம்-158ல் மேற்கு குளக்கரை சாலையில் உள்ள நூலக கட்டிடம் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளது. மேற்கண்ட நூலக கட்டிம் தற்போதுள்ள நிலையில் எவ்வித பராமரிப்பு பணிகளும்மேற்கொள்ள இயலாத நிலையில் அதனை இடித்து அவ்விடத்தில் புதிய கட்டிடம் கட்டி நூலகம் அமைக்க சிறப்பு அதிகாரி அவர்களின் அனுமதி பெற வேண்டியுள்ளது. அதன் விவரம் பின்வருமாறு:

1.	கட்டிடம் அமைந்துள்ள இடம்	மண்டலம்-12, கோட்டம்-158ல் மேற்கு குளக்கரை சாலையில் உள்ள நூலக கட்டிடம்.
2.	கட்டிடம் கட்டப்பட்ட ஆண்டு	1981
3.	இடிக்கப்படவுள்ள கட்டிடத்தின் பரப்பளவு	47.57 ச.மீ
4.	கட்டிடம் அமைந்துள்ள இடத்தின் பரப்பளவு	47.57ச.மீ
5.	கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு	ரூ.1000/-
6.	கட்டிடம் பயன்பாட்டில் உள்ளதா	பழுதடைந்த நிலையில் உள்ளது. எனினும் பயன்பாட்டில் உள்ளது.
7.	கட்டிடம் இடித்த பின்பு எந்த மாதியான உபயோகத்திற்கு பயன்படுத்தப்பட உள்ளது	புதிய கட்டிடம் கட்டி நூலகம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

எனவே, மண்டலம்-12, வார்டு.158ல் மேற்கு குளக்கரை சாலையில் உள்ள பழுதடைந்த நூலக கட்டிடத்தை இடிப்பதற்கு சிறப்பு அதிகாரி- நிலைக்குழு(பணிகள்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 25.07.2019 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

"பழுதடைந்த நூலக கட்டிடத்தை இடித்து அகற்ற சிறப்பு அதிகாரி- நிலைக்குழு(பணிகள்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".

*****

ம.அ.13.ந.க.எண்.அ3/3594/2019

தீர்மான எண்.428/2019 **நாள்:31-07-2019**

மண்டலம்-13 - தொழில்களின் உரிமக்கட்டணம் வசூல் செய்யப்படாதது - தணிக்கைத்தடையை நீக்க அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சி, பழைய மண்டலம்-10, புதிய மண்டலம்.13, 1994 -1995 ஆம் ஆண்டு தணிக்கை அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள தணிக்கைத்தடை மற்றும் பதில் கீழ்கண்டவாறு தெரிவிக்கப்படுகிறது.

வ. எண்	தணிக்கைத்தடை எண்	தணிக்கைத்தடைக்கான காரணம்	தணிக்கை தடை நீக்கத்திற்கான பதில்
1.	1994 -1995 82	சென்னை மாநகராட்சி, மண்டலம்-10(ப) - தொழில்களின் உரிமக்கட்டணம் காலதாமதமாக செலுத்தியமைக்கு அபராதத் தொகை வசூல் செய்யப்படாதது - சம்பந்தமாக.	தொழில் நடத்துனர்களின் உரிமக்கட்டணம் வசூல் செய்வது களப்பணியில் ஈடுபட்டு வரும் உரிமம் ஆய்வாளர்களின் பணியாகும். திரு.கிருஷ்ணமூர்த்தி, மண்டலம்-10ல் உள்ளவசூல் மையத்தில் மட்டுமே வசூல் செய்து வந்துள்ளார் என பழைய மண்டலம்-10ல் சுகாதாரத்துறையில் பணியாற்றிய உதவி சுகாதார அதிகாரியும் தற்போதைய சுகாதார அலுவலர், தலைமையகம் அவர்கள் சான்றளித்துள்ளார். அடுத்து வரும் ஆண்டுகளில் உரிமம் புதுப்பிக்கும் போது அபராதத் தொகையுடன் (With Penalty) சேர்த்து வசூல் செய்யப்பட்டு உரிமம் புதுப்பிக்கப்படுகிறது. மேலும், 23 ஆண்டுகள் முடிந்து விட்ட நிலையில் இப்பத்தியின் இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள தொழில்கள் தற்போது இயங்குகிறதா என்று உறுதி செய்ய இயலாதக் காரணத்தால் திரு.கிருஷ்ணமூர்த்தி, உரிமம் ஆய்வாளர் அவர்களின் பெயரை இப்பத்தி பொறுப்பில் இருந்து நீக்கம் செய்ய கேட்டுக் கொள்ளப்படுகிறது.

எனவே, மேற்கண்ட பதிலினை ஏற்று இத்தணிக்கைத்தடையை நீக்க சிறப்பு அதிகாரி-நிலைக்குழு(கணக்கு) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 24.07.2019 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

"தணிக்கைத்தடையை நீக்க சிறப்பு அதிகாரி-நிலைக்குழு(கணக்கு) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".

*****

வ.து.ந.க.எண்.ஜி4/186/2018

தீர்மான எண்.429/2019 **நாள்:31-07-2019**

வருவாய் துறை - வாகன நிறுத்தக் கட்டணம் வசூல் செய்வது 01.02.2019 முதல் 31.07.2019 வரை தமிழ்நாடு முன்னாள் படைவீரர் கழகத்திற்கு கால நீட்டிப்பு செய்தது - மன்றத் தீர்மானம் பெறப்பட்டது - 31.07.2019 அன்று கால நீட்டிப்பு முடிவடைவதால் மேற்கொண்டு தமிழ்நாடு முன்னாள் படை வீரர் கழகத்திற்கு 01.08.2019 முதல் 31.01.2020 வரை கால நீட்டிப்பு செய்வதற்குஅனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட 101 இடங்களில் 01.02.2019 முதல் 31.07.2019 வரை வாகன நிறுத்தக் கட்டணம் வசூல் செய்வதற்கு தமிழ்நாடு முன்னாள் படைவீரர் கழகத்திற்கு மன்றத் தீர்மான எண்.123/2019 நாள். 19.02.2019ன்படி அனுமதி பெறப்பட்டு கால நீட்டிப்பு செய்து உத்தரவு வழங்கப்பட்டது.

வாகன நிறுத்தக் கட்டணம் வசூல் செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்ட காலம் 31.07.2019 அன்று முடிவடைய உள்ளதாலும் மேலும், கால நீட்டிப்பு செய்ய வேண்டியுள்ளதால், பார்க்கிங் மேனேஜ்மெண்ட் சிஸ்டம் ஒப்பந்தப் பணியின் தற்போதைய நிலை குறித்து கருத்துரு வழங்குமாறு மேற்பார்வை பொறியாளர் (சிறப்பு திட்டங்கள்) அவர்களுக்கு 03.07.2019 அன்று கடிதம் அனுப்பப்பட்டது.

மேற்பார்வை பொறியாளர் (சிறப்பு திட்டங்கள்) அவர்களின் 22.07.2019 நாளிட்ட கடிதத்தில் வாகன நிறுத்த மேலாண்மைத் திட்டத்திற்கான ஒப்பங்கள் கோரப்பட்டு முடிவு செய்யப்பட்டு பணியாணை வழங்கப்பட்டது என்றும், தற்போது வாகன நிறுத்த மேலாண்மைக்கான வரைபடங்கள் போக்குவரத்து காவல்துறையின் அனுமதி பெற வேண்டிஅனுப்பப்பட்டுள்ளது என்றும், மேலும் வாகன நிறுத்த மேலாண்மைக்கான ஒப்பந்ததாரர் பணியை துவங்குவதற்கு தேவையான அடிப்படை குறியீடுகள் மற்றும் மென்பொருட்கள் நிறுவும் பணி நடைபெற்று வருகிறதெனவும், வாகன நிறுத்த மேலாண்மை திட்டம் பகுதி பகுதியாக முடிக்கப்பட்டு பெருநகர சென்னை மாநகராட்சி முழுவதும் நடைமுறைப்படுத்த மேலும் ஆறு மாதங்கள் தேவைப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் பகுதி பகுதியாக நிறைவேற்றி பயன்பாட்டிற்கு கொண்டுவரும் போது அப்பகுதிகளில் ஏற்கனவே நடைமுறையில் உள்ள வாகன நிறுத்த கட்டணம் வசூல் செய்வதை நிறுத்திக் கொள்ள வேண்டி குறிப்பிடப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட 101 இடங்களில் வாகன நிறுத்த கட்டண வசூல் செய்வதற்கு தமிழ்நாடு முன்னாள் படைவீரர் கழகத்தால் ஏப்ரல் 2018 முதல் மார்ச் 2019 வரை ரூ. 30,75,172 /- மற்றும் ஏப்ரல் 2019 முதல் ஜுன் 2019 வரை ரூ. 7,46,548/-- ம் வாகன நிறுத்தக் கட்டணம் வசூல் செய்யப்பட்டுள்ளது. மேலும், பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட 101 இடங்களில் வாகன நிறுத்தக் கட்டணம் வசூல் செய்வதற்கு தமிழ்நாடு முன்னாள் படைவீரர் கழகத்திற்கு மன்றத் தீர்மான எண்.123/2019, நாள். 19.02.2019ன்படி 01.02.2019 முதல் 31.07.2019 வரை கால நீட்டிப்பு அனுமதி வழங்கப்பட்டது. இப்பணிக்காலம் 31.07.2019 அன்று முடிவடைகிறது.

தமிழ்நாடு முன்னாள் படைவீரர் கழகம் மேற்கொண்டு வந்த வாகன நிறுத்தக் கட்டணம் வசூல் பணிக்காலம் 31.07.2019 அன்றுடன் முடிவடைய உள்ளதால், 101 இடங்களில் வாகன நிறுத்தக் கட்டணத்தினை இதுநாள்வரை பின்பற்றி வந்த நடைமுறைப்படி தொடர்ந்து வசூலிக்கப்பட வேண்டும் என்ற நிபந்தனைகளின் அடிப்படையில் தமிழ்நாடு முன்னாள் படைவீரர் கழகத்திற்கு 01.08.2019 முதல் 31.01.2020 வரை ஆறு மாதம் கால நீட்டிப்பு செய்ய அனுமதியும், வாகன நிறுத்த மேலாண்மைத் திட்டம் முடிக்கப்பட்டு, பயனுக்கு கொண்டு வரும்

பகுதிகளில் ஏற்கனவே நடைமுறையிலுள்ள வாகன நிறுத்த கட்டணம் வசூல் செய்வதை விலக்கிக்கொள்ளவும் அனுமதி வழங்குவதற்கு சிறப்பு அதிகாரி-நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 29.07.2019 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

"காலநீட்டிப்பு செய்வதற்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".

*****

பொ.து.ந.க.எண்.ஈ2/20265/2019

தீர்மான எண்.430/2019 **நாள்:31-07-2019**

பணியமைப்பு- பெருநகர சென்னை மாநகராட்சி - பொதுத்துறை - மருத்துவ சேவைகள் துறை - திரு.ஆர்.ராமகிருஷ்ணன், துணை தகவல் தொடர்பு அலுவலர் அவர்கள் 31.07.2019 அன்று பிற்பகல் வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதி.

பெருநகர மருத்துவ அலுவலர் / கூடுதல் இயக்குநர் (பொ.) அவர்களின் 22.07.2019 நாளிட்ட கடிதத்தில், பொதுத்துறையின் 16.12.2018 நாளிட்ட சுற்றறிக்கையில், திரு.ஆர்.ராமகிருஷ்ணன், துணை தகவல் தொடர்பு அலுவலர் அவர்கள் 31.07.2019 அன்று பிற்பகல் முதல் வயது முதிர்வு காரணமாக ஓய்வு பெறவுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவருடைய பிறந்த தேதி 02.07.1961.

தனியர் தொகுப்பாளர் மற்றும் எழுத்தராக 18.06.1986 முதல் பெருநகர சென்னை மாநகராட்சியில் பணியில் சேர்ந்து பணிபுரிந்து வருகிறார். அதன் பின்னர், பணிபுரிந்த பணியிடங்களின் விவரங்கள் பின்வருமாறு:

வ. எண்	வகித்த பதவி	துறை/மண்டலம்	பணிபுரிந்த காலம்
1.	தொகுப்பாளர் மற்றும் எழுத்தர்	கோடம்பாக்கம் மருத்துவ மண்டலம்	18.06.1986 முதல் 30.06.1995 வரை
2.		அடையார் மருத்துவ மண்டலம்	01.07.1995 முதல் 31.03.2003 வரை
3.	தொகுப்பாளர் மற்றும் எழுத்தர்	கோடம்பாக்கம் மருத்துவ மண்டலம்	01.04.2003 முதல் 02.01.2007 வரை
4.		மருத்துவ சேவைகள் துறை	03.01.2007 முதல் 20.10.2009 வரை
5.	துணை தகவல் தொடர்பு அலுவலர்	அண்ணாநகர் மருத்துவ மண்டலம்	21.10.2009 முதல் 31.12.2013 வரை
6.		தேனாம்பேட்டை மருத்துவ மண்டலம்	01.01.2014 முதல் 31.07.2019 வரை

தனியருக்கு தொகுப்பாளர் மற்றும் எழுத்தர் பதவியில் மா.கு.ந.க.எண்.எப்5/690/1999, நாள்.26.03.1999ன்படி, 18.06.1986 முதல் பணிவரன்முறைப்படுத்தியும் மற்றும் 18.06.1988 முதல் தகுதிகாண் பருவம் முடித்தவராக அறிவித்தும் ஆணை வழங்கப்பட்டுள்ளது. மேலும், துணை தகவல் தொடர்பு அலுவலர் பதவியில் மா.கு.ந.க.எண்.எப்5/2412/2009, நாள்.28.11.2010ன்படி 21.10.2009 முதல் பணிவரன்முறைப்படுத்தியும் ஆணை வழங்கப்பட்டுள்ளது.

தனியரை பொறுப்பாக்கும் முன்பண நிலுவை ஏதும் இல்லை எனவும், இது குறித்து தணிக்கைத்தடை குறித்த அறிக்கை ஏதும் பின்னர் தெரியவரின், அதனை தனியரின் ஓய்வூதியத்தில் பிடித்தம் செய்யப்படும் என 15.07.2019 நாளிட்ட கணக்கு அலுவலர் மருத்துவ சேவைகள் துறை அவர்களின் சான்று பெறப்பட்டுள்ளது.

மேலும், பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலர் கூட்டுறவு சங்கத்தின் 07.03.2019 நாளிட்ட கடிதத்தில் சங்க உறுப்பினர் இல்லை என சான்றிதழ் அளிக்கப்பட்டுள்ளது.

விழிப்பு அலுவலர், விழிப்பு குழுமம் அவர்களின் 10.07.2019 நாளிட்ட கடிதத்தில், தனியர் மீது விழிப்புக்குழுமத்தில் விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை என அறிக்கை பெறப்பட்டுள்ளது.

நிதி ஆலோசகர் அவர்களின் 09.07.2019 நாளிட்ட குறிப்பில், தனியர் துணை தகவல் தொடர்பு அலுவலராக மருத்துவ சேவைகள் துறையில் பணிபுரிந்த காலங்களில் 2009-2010 ஆம் ஆண்டு முதல் 2017-2018 ஆம் ஆண்டு வரை தணிக்கை அறிக்கை குறித்த பத்திகள், இவ்வலுவலகத்தில் உள்ள உள்ளாட்சி நிதித் தணிக்கை அறிக்கைகளின்படி, மொத்தம் ரூ.5,43,816/- உள்ளடக்கிய 2 தணிக்கைத்தடை பத்திகள் தனியர் மீது தனிப்பொறுப்பில் நிலுவையில் உள்ளது எனவும், மேற்கண்ட தணிக்கைத் தடை பத்திகளை நீக்கம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும்,

மேலும், 2018-2019 ஆம் ஆண்டு முதல் 2019-2020 ஆம் ஆண்டுகளுக்கான தணிக்கை அறிக்கைகள் உள்ளாட்சி நிதி தணிக்கைத் துறையால் வெளியிடப்படவில்லை என்றும் மேற்காணும் ஆண்டுகளுக்கான தணிக்கை அறிக்கைகள் வெளியிடப்பட்ட பின்னர், தணிக்கை தடை பத்திகள் பணியாளரை சார்ந்தது என்பது பின்னர் தெரியவரும் பட்சத்தில் தனியர் மீது பொறுப்பு நிர்ணயிக்கப்படும் என்றும் அறிக்கை அளிக்கப்பட்டுள்ளது.

மேலும், தனியர் மீது தணிக்கைத் தடை, ஒழுங்கு நடவடிக்கை மற்றும் இழப்பீடுகள் ஏதும் நிலுவையில் இல்லை என்றும், தனியரது சம்பள சான்றின்படி எவ்வித நீண்ட கால முன்பணம் ஏதும் பிடித்தம் செய்ய வேண்டியது இல்லை என்றும், சென்னை மாநகராட்சி உள்ளிருப்பு குடியிருப்பு ஏதும் ஒதுக்கி தரப்படவில்லை என்றும் சான்று பெறப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வ. எண்	மண்டலம்/ துறைகள்	ஆண்டு	பத்தி எண்.	தணிக்கைக்கு உட்படுத்தப்பட்ட தொகை	தடைக்கு பொறுப்பான பணியாளர்களின் எண்ணிக்கை மொத்தம்	திரு.ஆர்.ராமகிருஷ்ணன் துணை தகவல் தொடர்பு அலுவலரை பொறுப்பாக்கும் தொகை
1.	மருத்துவ சேவைகள் துறை	2014-2015 (அ)	35			
2.		2016-2017	12 வ. எண்.2	5,43,816	1	5,43,816/-
	மொத்தம்		2	5,43,816	1	5,43,816/-

தனியர் மீது 31.07.2019 வரை தனிப்பட்ட முறையிலோ கூட்டு பொறுப்பிலோ தனியரை பொறுப்பாக்கி நிதி இழப்பீடு இருப்பது குறித்து தெரியவரின் அத்தொகையை தனியருக்கு வழங்கப்படவுள்ள ஓய்வூதிய பயன்கள், ஓய்வூதிய அகவிலைப்படியிலிருந்து பிடித்தம் செய்து கொள்ள தனியர் ரூ.20/- முத்திரை தாளில் சம்மதித்து ஒப்புதல் அளித்துள்ளார்.

மேலும், தனியர் வகுப்பு 2ஐ சார்ந்த அலுவலர் என்பதால் தனியரை வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதிக்கும் அதிகாரம் பெருநகர சென்னை மாநகராட்சி சிறப்பு அதிகாரி (மன்றம்) அவர்களின் வசம் உள்ளது.

மேலும், ஆணையர் அவர்களின் 30.03.2016 நாளிட்ட செயல்முறை ஆணையில் தனியர் தொகுப்பாளர் மற்றும் எழுத்தர் பதவியில் பணிபுரிந்த நபர்களுக்கு நீதிமன்ற ஆணைகளின்படி பதவி மாற்றம் மற்றும் பணியமர்வு (Transferred & Posted) என்ற அடிப்படையிலேயே துணை தகவல் தொடர்பு அலுவலர் பதவியில் பணியமர்த்தப்பட்ட காரணத்தால், தனியர்களுக்கு ஊதிய விகிதம் உயர்த்தி வழங்க வேண்டிய நிலை எழாது என்பதாலும், தனியர்களுக்கு துணை தகவல் தொடர்பு அலுவலராக பதவி மாற்றம் மற்றும் பணியமர்வு செய்த ஆணையை ரத்து செய்வதற்கு பதிலாக தனியர்களுக்கு துணை தகவல் தொடர்பு அலுவலர் பதவிக்கான ஊதிய விகிதம் ரூ.8000-275-13500 (தற்போதைய ஊதிய விகிதம் 15600-39100+தர ஊதியம் 5400/-) என ஏற்கனவே நிர்ணயம் செய்யப்பட்டதை மாற்றியமைத்து, அரசால் பிறப்பிக்கப்படும் ஆணைகளுக்குட்பட்டு துணை தகவல் தொடர்பு அலுவலர்களின் ஊதியத்தை தொகுப்பாளர் மற்றும் எழுத்தர் பதவிக்கான ஊதிய விகிதம் ரூ.4000-100-6000 (தற்போதைய ஊதிய விகிதம் 5200-20200+தர ஊதியம் 2800/- என நிர்ணயம் செய்து ஆணையிடப்பட்டுள்ளது.

இதன் தொடர்ச்சியாக மேற்கண்ட செயல்முறை ஆணையினை எதிர்த்து திரு.ஆர்.ராமகிருஷ்ணன், துணை தகவல் தொடர்பு அலுவலர் மற்றும் 3 நபர்கள் துணை தகவல் தொடர்பு அலுவலர் பதவியில் ஊதியம் நிர்ணயம் செய்யக் கோரி சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு (W.P.No.13080/2016 & W.M.P.11439/2016) தொடர்ந்துள்ளனர். இதனை எதிர்த்து பெருநகர சென்னை மாநகராட்சி வழக்கறிஞர் நிலைக்குழு மூலமாக எதிர் உறுதியாவணம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில் பெருநகர சென்னை மாநகராட்சி, ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணை பொ.து.ந.க.எண்.ஈ2/23642/2015, நாள்.30.03.2016க்கு சென்னை உயர்நீதிமன்றம் இடைக்கால தடை பிறப்பித்து ஆணையிடப்பட்டது.

இதன் தொடர்ச்சியாக, W.M.P.No.33770/2016 in W.P.No.13080/2016 எண்ணிட்ட வழக்கில் சென்னை உயர்நீதி மன்றத்தின் உத்தரவில் , பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

5. In view of the same, irrespective of the outcome in the writ petition filed by the petitioners, this court holds that the 1st, 2nd and 4th petitioners are entitled to be paid gratuity, provident fund, leave encashment as admissible and payable to them as on date.

6. In view of the same, W.M.P.No.33770 of 2019 is allowed and the corporation is directed to release forthwith the retirement benefits like gratuity, provident fund, leave encashment, etc., as admissible and payable to the 1st, 2nd and 4th petitioners, within a period of three weeks from the date of receipt of a copy of this order. On such release of payments as indicated above, the shame shall be reported to this court in the next date of receipt of a copy of this order. On such release of payments as indicated above, the same shall be reported to this court on the next date of hearing. This order is issued without prejudice to the rights of the petitioners to claim interest for belated settlement of the terminal benefits.

7.post the writ petition on 05.08.2019".

ஆகவே, மேற்காண் விவரங்களின் அடிப்படையிலும் மற்றும் பெருநகர மருத்துவ அலுவலர்/கூடுதல் இயக்குநர் (பொ) அவர்களின் பரிந்துரையின் அடிப்படையிலும், திரு.ஆர்.ராமகிருஷ்ணன், துணை தகவல் தொடர்பு அலுவலர், அவர்கள் பணிபுரிந்த காலங்களில் 2009-2010 ஆம் ஆண்டு முதல் 2017-2018 ஆம் ஆண்டு வரை தணிக்கை அறிக்கை குறித்த பத்திகள் உள்ளாட்சி நிதித் தணிக்கை அறிக்கைகளின்படி, மொத்தம் ரூ.5,43,816/- உள்ளடக்கிய 2 தணிக்கைத் தடை பத்திகள் தனியர் மீது நிலுவையில் உள்ளதிற்குட்பட்டும், 2018-2019 மற்றும் 2019-2020 ஆம் ஆண்டுகளுக்கான தணிக்கை அறிக்கைகள் உள்ளாட்சி நிதித் தணிக்கையின் அறிக்கை வெளியிடப்படாத நிலையில், நிதி சம்மந்தப்பட்ட தணிக்கை தடைகளால் மாநகராட்சிக்கு நிதி இழப்பீடு, நீண்ட கால முன்பணம் பெற்று தீர்வு செய்யப்படாமை ஆகிய காரணங்களால் நிதி இழப்பீடு ஏதேனும் நிலுவையில் இருப்பது பின்னர் தெரியவரின், அவைகளுக்கு தனியரை பொறுப்பாக்கி அத்தொகைகளை அவரது ஓய்வூதிய பயன்களிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைகளுக்குட்பட்டும், துணை தகவல் தொடர்பு அலுவலர் பதவியில் ஊதிய நிர்ணயம் செய்யக் கோரி தனியரால் தொடரப்பட்ட நீதிப்பேராணை எண்.13080/16 வழக்கு முடிவு பெறாததால் இவ்வழக்கின் இறுதி தீர்ப்பிற்குட்பட்டும் மற்றும் W.M.P.No.33770 of 2016, 09.07.2019 நாளிட்ட உத்தரவிற்குட்பட்டும் தனியரை 31.07.2019 அன்று பிற்பகல் முதல் வயது முதிர்வு ஓய்வில் செல்ல சிறப்பு அதிகாரி-மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 31.07.2019 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

"வயது முதிர்வு ஓய்வில் செல்ல சிறப்பு அதிகாரி-மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".

*****

S.W.M.C.No.A7/1190/2017

Resolution No.431/2019 **Date:31-07-2019**

Greater Chennai Corporation – Solid Waste Management - Incorporation of changes suggested by Deputy Secretary to Government, MAWS Department in the draft "Corporation of Chennai Solid Waste Management By-Laws, 2019" – Revised draft submitted – For Approval.

Letter received from Deputy Secretary to Government, MAWS Department dated.21.05.2019, the changes suggested by the MAWS Department have been incorporated in the draft Solid Waste Management By-Laws, 2019.

The details of correction carried out are as below:

a) Corrections marked in the "Corporation of Chennai Solid Waste Management By-Laws, 2019" have been carried out.
b) The term Greater Chennai Corporation occurs in draft By-Law have been corrected as Corporation of Chennai.
c) The Form A, an application for remitting Solid Waste Management user charges is not necessary as user charges are collected along with property tax.

Hence, to approve the revised draft Solid Waste Management rules By-Law 2019. Orders of the Special Officer–Standing Committee (Health), Standing Committee (Taxation and Finance) and Council are requested. Commissioner's note dated 31.07.2019 is read.

"Approved by Special Officer-Standing Committee (Health), Standing Committee (Taxation and Finance) and Council."

*****

Corporation of Chennai

SOLID WASTE MANAGEMENT BY-LAWS, 2019

In exercise of the powers conferred under section 3, 6 and 25 of the Environment (Protection) Act, 1986 (Central Act 29 of 1986), the Central Government have made the Solid Waste Management Rules, 2016 to regulate the management of solid waste. The Solid Waste Management Rules, 2016 shall apply to every municipal authority which shall, within their territorial area be responsible for the implementation of the provisions of these rules, and for any infrastructure development for collection, storage, segregation, transportation, processing and disposal of municipal solid wastes. Further, it shall be the responsibility of the generator of wastes to co-operate with the municipal authority concerned to avoid littering and ensure delivery of segregated wastes in accordance with the collection and segregation system as notified under the Solid Waste Management Rules, 2016.

In exercise of the powers conferred under section 349 of the Chennai City Municipal Corporation Act, 1919 (Tamil Nadu Act IV of 1919), and in order to ensure effective solid waste management in the Corporation of Chennai, the Council hereby makes the Solid Waste Management By-Laws,2019.

SOLID WASTE MANAGEMENT BY-LAWS OF THE CORPORATION, FRAMED UNDER SECTION 349 OF THE CHENNAI CITY MUNICIPAL CORPORATION ACT, 1919 (TAMIL NADU ACT IV OF 1919) AND UNDER RULE 15 OF THE SOLID WASTE MANAGEMENT RULES, 2016

1.0 **Title:** This shall be called as the Corporation of Chennai Solid Waste Management By-Laws, 2019

2.0 **Extent of application:** This by-law applies to the domestic, institutional, commercial and any other non- residential solid waste generators, situated in the Corporation area, and the public who throw the solid waste in to storm water drain, underground sewerage system, water bodies within the limits of Corporation of Chennai.

3.0 **Definition:** In this by-law and the Schedule attached thereto, the words and expressions used but not defined shall have the meanings respectively assigned to them in the Corporation of Chennai, unless the context otherwise requires, -

(1) **“Agency”** means any person/entity appointed or authorized by the Corporation of Chennai to act on its behalf, based on an agreement between the Agency and the Corporation of Chennai for discharge of duties or function such as sweeping of streets, collection of waste, collection of user charges, etc.,

(2) “**Aerobic composting**” means a controlled process involving microbiological decomposition of organic matter in the presence of oxygen;

(3) “**Anaerobic digestion**” means a controlled process involving microbial decomposition of organic matter in the absence of oxygen;

(4) **“Authorization”** means the permission gives by the State Pollution Control Board or Pollution Control Committee, as the case may be to the operator of a facility or urban local authority, or any other agency responsible for processing and disposal of solid waste;

(5) **“Biodegradable waste "** means any organic material that can be degraded by micro-organisms into simpler stable compounds as given in schedule - II

(6) **"Bio-methanation"** means a process which entails enzymatic decomposition of the organic matter by microbial action to produce methane rich biogas;

(7) **“Brand owner”** means a person or company who sells any commodity under a registered brand label.

(8) **“Bulk waste generator”** means and includes buildings occupied by the Central government departments or under takings, State government departments or undertakings, local bodies, public sector undertakings or private companies, hospitals, nursing homes, schools, colleges, universities, other educational institutions, hostels, hotels, commercial establishments, markets, places of worship, stadia and sports complexes having an average waste generation rate exceeding 100kg per day**;**

(9) **"By-laws"** means regulatory framework notified by local body, census town and notified area townships for facilitating the implementation of these rules effectively in their jurisdiction**.**

(10) **“C and D waste”** means construction and demolition waste (Debris) that are non-hazardous in nature generated out of building materials, debris and rubble resulting from repairing, construction, reconstruction operations;

(11) **“Clean Area”** means the public place in front and all around or adjacent to any premises extending to the kerb side and including the drain, foot path and kerb;

(12) **“Collection Counter”** means where the user charges shall be remitted which will be available at all Zonal Officers and headquarters;

(13) **“Combustible waste”** means non-biodegradable, non-recyclable, non-reusable, non-hazardous solid waste having minimum calorific value exceeding 1500 kcal/kg and excluding chlorinated materials like plastic, wood pulp, etc.;

(14) **“Community waste storage bin”** means any storage facility set upand maintained by the corporation collectively by owners and or/occupiers of one or more premises for storage of municipal solid waste in a segregated manner in the road side/premises of any one of such owners/occupiers or in their common premises;

(15) "**Composting"** means a controlled process involving microbial decomposition of organic matter;

(16) **“Co-processing”** means use of non-biodegradable and non-recyclable solid waste having calorific value exceeding 1500k/cal as raw material or as a source of energy or both to replace or supplement the natural mineral resources and fossil fuels in industrial processes;

(17) **“Decentralized processing”** means establishment of dispersed facilities for maximizing the processing of biodegradable waste and recovery of recyclables closest to the source of generation so as to minimize transportation of waste for processing or disposal;

(18) "**Disposal"** means the final and safe disposal of post processed residual solid waste and inert street sweeping sand silt from surface drains on land to prevent contamination of ground water, surface water, ambient air and attraction of animals or birds;

(19) **“Domestic hazardous waste”** means discarded paint drums, pesticide cans, compact fluorescent lamp bulbs, tube lights, expired medicines, broken mercury thermometers, used batteries, used needles and syringes and contaminated gauge, etc., generated at the household level;

(20) **"Door to door collection"** means collection of solid waste from the door step of households, shops, commercial establishments, offices, institutional or any other non-residential premises and includes collection of such waste from entry gate or a designated location on the ground floor in a housing society, multi-storied building or apartments, large residential, commercial or institutional complex or premises;

(21) **“Dry waste”** means waste other than bio-degradable waste and inert street sweepings and includes recyclable and non-recyclable waste, combustible waste and sanitary napkin and diapers, etc.;

(22) **“Dump sites”** means a land utilized by local body for disposal of solid waste without following the principles of sanitary land filling;

(23) **“Event”** means any gatherings for the purpose of functions, celebrations, meetings, rallies, processions, open air theatre activities, cinema shootings in public places;

(24) **“Extended producer responsibility” (EPR)** means responsibility of any producer of packaging products such as plastic, tin, glass and corrugated boxes, etc., for environmentally sound management, till end-of-life of the packaging products;

(25) **“Facility”** means any establishment wherein the solid waste management processes namely segregation, recovery, storage, collection, recycling, processing, treatment or safe disposal are carried out;

(26) “**Familiarization/warning period**” means that specific period, during which there is a relaxation in the fines for contravention of these By-laws;

(27) **"Fine"** means penalty imposed on waste generators or operators of waste processing and disposal facilities under the By-laws for non-compliance of the directions contained in these rules and/or By-laws;

(28) **“Handling”** includes all activities relating to sorting, segregation, material recovery, collection, secondary storage, shredding, baling, crushing, loading, unloading, transportation, processing and disposal of solid wastes;

(29) “**Hazardous waste**” means any waste which by reason of any of its physical, chemical, reactive, toxic, causing danger or is likely to cause danger to health or environment, whether alone or when in contact with other wastes or substances and shall include wastes specifically listed in Schedule III, of these By-Laws and all other hazardous wastes as defined in the Hazardous Wastes (Management and Handling) Rules, 1989 as amended to date and the Hazardous and Other Wastes (Management and Transboundary movement) Rules, 2016;

(30) **“Horticulture, Parks and Garden waste”** means waste from parks, gardens, traffic islands etc. These include grass clippings, annual weeds, woody ‘brown’ carbon-rich material such as pruning, branches, twigs, wood chipping, straw or dead leaves and tree trimmings, which cannot be accommodated in the daily collection system for bio-degradable waste;

(31) “**House-gully**” means a passage or strip of land, constructed, set apart or utilized for the purpose of serving as or carrying a drain or affording access to the latrine, urinal, cesspool or other receptacle for filling or other polluted matter by persons employed in the clearing thereof or in the removal of such matter there from;

(32) **“Incineration”** means an engineered process involving burning or combustion of solid waste to thermally degrade waste materials at high temperatures;

(33) **“Inerts”** means wastes which are not bio-degradable, recyclable or combustible street sweeping or dust and silt removed from the surface drains;

(34) **“Informal waste collector”** includes individuals, associations or waste traders who are involved in sorting, sale and purchase of recyclable materials;

(35) "**Leachate"** means the liquid that seeps through solid waste or other medium and has extracts of dissolved or suspended material from it;

(36) “**Litter**” means all refuse and include any other waste material which, if thrown or deposited as prohibited under these By-Laws, tends to create uncleanliness or a danger or nuisance to public health, safety or welfare.

(37) “**Littering**” means putting litter in such a location that it falls, descends, blows, is washed, percolates or otherwise escapes or is likely to fall, descend blow, be washed, percolate or otherwise escape into or onto any public place, or causing, permitting or allowing litter to fall, descend, blow, washed, percolate or otherwise escape into or onto any public place;

(38) **"Local body”** for the purpose of these By-laws means Corporation of Chennai;

(39) “**Materials Recovery Facility” (MRF)** means a facility where non-compostable solid waste can be temporarily stored by the local body or any other entity mentioned in rule 2 or any person or agency authorised by any of them to facilitate segregation, sorting and recovery of recyclables from various components of waste by authorised informal sector of waste

pickers, informal recyclers or any other work force engaged by the local body or entity mentioned in rule 2 for the purpose before the waste is delivered or taken up for its processing or disposal;

(40) "**Neighbourhood**" means a clearly defined locality, with reference to its physical layout, character or inhabitants;

(41) "**New construction**" means all buildings under construction within the limits of the Corporation of Chennai;

(42) **"Non-biodegradable waste"** means any waste that cannot be degraded by microorganisms into simpler stable compounds;

(43) "**Nuisance"** includes any act, omission, place or thing which comes or is likely to cause injury, danger, annoyance or offence to the sense of sight, smelling or hearing or which is or may be dangerous to life or injurious to health or property;

(44) "**Nuisance Detectors"** (NDs) means those employees of the Municipal Corporation who are appointed by the Commissioner to detect the acts of public nuisance, etc.;

(45) "**Occupier / occupant**" includes any person who for the time being is inoccupation of, or otherwise using, any land or building or part thereof, for any purpose whatsoever;

(46) **"Operator of a facility"** means a person or entity, who owns or operates a facility for handling solid waste which includes the local body and any other entity or agency appointed by the local body;

(47) "**Owner"** means any person who exercises the rights of an owner of any building, or land or part thereof;

(48) **Primary collection"** means collecting, lifting and removal of segregated solid waste from source of its generation including households, shops, offices and any other non-residential premises or from any collection points or any other location specified by the local body;

(49) "**Processing"** means any scientific process by which segregated solid waste is handled for the purpose of reuse, recycling or transformation into new products**;**

(50) "**Public place**" includes any road, arch road, viaduct, lane, footway, alley or passage, highway, causeway, bridge, square alley or passage whether a thoroughfare or not over which the public have a right of passage, and such places to which the public has access such as parks, gardens, recreation grounds, playgrounds, beaches, water bodies, water courses, public plazas and promenades, government and municipal buildings, public hospitals, markets, slaughter houses, courts, etc.;

(51) "**Receptacle**" means any storage container, including bins and bags, used for the storage of any category of municipal solid waste;

(52) **"Recycling**" means the process of transforming segregated non-biodegradable solid waste into new material or product or as raw material for producing new products which may or may not be similar to the original products;

(53) "**Recyclable Waste"** means the waste that is commonly found in the municipal solid waste as given in Schedule - II. It is also called as "Dry Waste". These include many kinds of glass, paper, metal, plastic, textiles, electronics goods, etc.

(54) **"Redevelopment"** means rebuilding of old residential or commercial buildings at the same site, where the existing buildings and other infrastructures have become dilapidated;

(55) **"Refuse**" means any waste matter generated out of different activities, processes either Bio-degradable/ Non-biodegradable/ recyclable in nature in either solid or semi-solid form which can**n**ot be consumed, used or processed by the generator in its existing form**;**

(56) **"Refuse derived fuel**"(RDF) means fuel derived from combustible waste fraction of solid waste like plastic, wood, pulp or organic waste, other than chlorinated materials, in the form of pellets or fluff produced by drying, shredding, dehydrating and compacting of solid waste;

(57) "**Residual solid waste"** means and includes the waste and rejects from the solid waste processing facilities which are not suitable for recycling or further processing;

(58) **"Rule":**means Solid Waste Management Rules, 2016;

(59) **"Sanitation"** means the promotion of hygiene and the prevention of disease and other consequences of ill health relating to environmental factors;

(60) "**Sanitary landfill facility**" means a waste disposal site for the deposit of residual solid waste in a facility designed with protective measures against pollution of ground water, surface water and air fugitive dust, wind-blown litter, bad odour, fire hazard, bird menace, pests or rodents, greenhouse gas emissions, slope instability and erosion;

(61) **"Sanitary land filling "** means the final and safe disposal of residual solid waste and inert wastes on land in a facility designed with protective measures against pollution of ground water, surface water and fugitive air dust, wind-blown litter, bad odour, fire hazard, animal menace, bird menace, pests or rodents, greenhouse gas emissions, persistent organic pollutants slope instability and erosion;

(62) **"Sanitary waste"** means wastes comprising of used diapers, sanitary towels or napkins, tampons, condoms, incontinence sheets and any other similar waste;

(63) "**Sanitary worker"** means a person employed by the municipal corporation for collecting or removing municipal solid waste or cleansing the drains in the municipal / corporation areas;

(64) **"Schedule"** means the Schedule appended to these rules;

